விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 | கதிர் 193 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 25, திங்கட்கிழமை 08.06.2015

# தமிழரின் பிரச்சினை குறித்து லண்டனில் உயர்மட்டக் கூட்டம்

## சொல்ஹெய்ம், மங்கள சமரவீர, சுமந்திரன் உட்பட பிரதிநிதிகள் பலர் இதில் பங்கேற்பு

லண்டன், ஜூன் 8

விரைவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும், வடக்கு-கிழக்குத் தமிழர்களின் உடனடித் தேவைகள் குறித்தும் பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உயர்மட்டக் கூட்டம் நடைபெறுகின்றது. நேற்று ஆரம்பமாகிய இந்தக் கூட்டம் இன்றுவரை இடம்பெறும்.

மேற்படி கூட்டத்தில் சர்வதேச தரப்பு சார்பில் நோர்வேயின் முன்னாள் சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தென்னாபிரிக்காவின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹீம் இப்ராஹீம், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முன்னாள் ஆலோசகர் மார்டீன் சுஷேஞர், இலங்கை அரச தரப்புச் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிரதிநிதி ஒருவர் மற்றும் தமிழர் தரப்புச் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உலகத் தமிழர் பேரவையின் முக்கியஸ்தர் சுரேன் சுரேந்திரன் உட்படப் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் போர்க்குற்ற விசாரணை மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இரகசிய ஆலோசனைகள் நடத்தப்படுவதாக பொய்யான செய்திகளை சிலர் வெளி பக்.24

# நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ஊழல் மோசடி

கொழும்பு, ஜூன்8

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்து மோசடி இடம்பெற்றுள்ளது. ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கையொப்பங்களை இரு தடவைகள் பதிவுசெய் துள்ளனர். இந்த விவகாரத்தால் ஐ.ம.சு.மு. உறுப்பினர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. 112 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற பிரதிச் சபாநாயகர் தம்மிக தஸநாயக்க விடம் பந்துல குணவர்த்தன தலைமையிலான குழுவினரால் கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையில் இடம்பெற்றுள்ள கையெழுத்து மோசடி குறித்து, ஐ.ம.சு.முவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுஸ நாணயக்காரவிடம் பக்.24

# 9 முதலமைச்சர்களையும் இன்று சந்திக்கிறார் மைத்திரி

## விக்கியும் பங்கேற்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கையின் 9 மாகாணங்களின் முதலமைச்சர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் இடையில் இன்று இரவு விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளார்.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முதலமைச்சர்களுடனான சந்திப்பில் பங்கேற்பதை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தவிர்த்து வந்திருந்தார். இந்த நிலையில், புதிய ஆட்சியின் கீழ் இடம்பெறும் சந்திப்பில் முதலமைச்சர் பங்கேற்கவுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி, அனைத்து பக்.24

# தலை துண்டாடப்பட்ட நிலையில் உடல் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி, பளைப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் உடல் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியோரம் உடல் கண்டெடுக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. நேற்று இரவு வரை உடல் அடையாளம் காணப்பட வில்லை.

வாகன விபத்தால் குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றபோதும் – குறித்த நபரின் தலை துண்டாடப்பட்டுள்ளதால் கொலையாக இருக்கக் கூடும் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் வீதியில் தனியாகவோ அல்லது வேறு யாருடனோ வந்தமைக்கான தடயங்கள் காணப்படவில்லை. பியர் போத்தல்களும், பொலித்தீன் பை போன்றனவுமே காணப்பட்டன.

இதுகுறித்து பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-21,9,10)

# பெற்றோர் புறக்கணிக்கும் சிறாரில் பலர் தற்கொலை

## கடந்த வருடம் இவ்வாறு 12 பேர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கில் பெற்றோரால் புறக்கணிக்கப்படும் சிறார்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகிறது. அவ்வாறு புறக்கணிக்கப்படும் சிறார்களில் பலர் தற்கொலை செய்ய முயற்சிப்பதோடு மற்றும் பலர் தற்கொலை செய்துள்ளனர் என்று வடமாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இந்த வருடம் கடந்த ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையான காலத்தில் மாத்திரம் வடக்கில் 38 சிறார்கள் பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றுபதிவாகியுள்ளது. அதுவும் ஒரு காரணமாக அமைந்து அதே காலப் பகுதியில் 5 சிறார்கள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். திணைக்களத்தில் பதிவான தகவல்கள் மாத்திரமே இவை.

இது தவிர கடந்த வருடமும் பல சிறார்கள் பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அதனால் கடந்த வருடம் 30 பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். பக்.24

# பிரபாவின் பிஸ்டலை ராணுவம் மீட்கவில்லை

## வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து தமக்கு தெரியாது என்கிறார் பேச்சாளர்



கொழும்பு, ஜூன் 8

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பயன்படுத்திய கைத்துப்பாக்கி, அவர் சடலமாக மீட்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப் படவில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

அத்துடன், பிரபாகரனின் கைத்துப்பாக்கி காணமற் போயுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரபாகரனின் விலைமதிப்புள்ள கைத்துப் பக்.24

# துன்னாலைப் பகுதியில் தொடரும் வாள் வெட்டு

## நள்ளிரவு நடந்த வாள் வீச்சில் தந்தை, தாய், மகள் படுகாயம்

வடமராட்சி, ஜூன் 8

துன்னாலைப் பகுதியில் தொடரும் வாள் வெட்டுச் சம்பவங்களால் நேற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர். இவ்வாறு படுகாயமுற்ற தந்தை, தாய், மகள் ஆகிய மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் களவாக மணல் ஏற்றுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. குறித்த இளைஞர் மீது வாள் வீச்சை நடத்தினார் எனக் கூறி ஒருவரின் வீட்டுக்குள் நேற்று அத்துமீறி புகுந்த கும்பல் நடத்திய வாள்வெட்டில் வீட்டில் இருந்த தந்தையும் தாயும் மகளும் படுகாயமடைந்துள்ளனர். பக்.24

# வடக்கில் கடந்த வருடம் 172 பாலியல் முறைகேடுகள்

## யாழ்ப்பாணத்திலேயே அதிக முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கில் கடந்த வருடம் 172 சிறார்கள் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களை விட 62 சிறார்களைப் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

பாலியல் முறைகேடுகள் தொடர்பில் பதிவாகிய முறைப்பாடுகள் மாத்திரமே இவை. அதனடிப்படையில் யாழ்ப்பாணத்திலேயே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதன்படி யாழ்ப்பாணத்தில் இவ்வாறு 80 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. வவுனியாவில் 30 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. மன்னாரில் 25 முறைப்பாடுகளும், கிளிநொச்சியில் 21 முறைப்பர்டுகளும், முல்லைத்தீவில் 16 முறைப்பாடுகளுமாக 172 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சிறார்களைப் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் கிளிநொச்சியிலேயே அதிக பக்.24

# வடக்கில் போதைப்பொருளை உடனடியாகக் கட்டுப்படுத்துக

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

கொழும்பு, ஜூன் 8

வடக்குப் பகுதியில் போதைப் பொருள் பாவனை மற்றும் வியாபார நடவடிக்கைகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு ஆபத்தான ஔடதங்கள் குறித்த தேசிய கட்டுப்பாட்டுச் சபைக்கு ஜனாதிபதி மைத்திரிபால உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, இதற்கான வழிவகைகள் குறித்து ஆராய் பக்.24

# சினிமா பாணியில் யாழ்.நகரில் இளைஞர் மீது கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.நகரில் நேற்று நண்பகல் மோட்டார் சைக்கிள் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டதோடு இளைஞர் ஒருவர் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டுப் பின்னர் தாக்குதலாளிகளால் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளார் என்று சம்பவங்களை நேரில் கண்டவர்கள் கூறினர்.

சினிமா படங்களில் வரும் காட்சிகளைப் போன்று இந்தத் தாக்குதல்கள் நடந்ததாக அங்கு நின்றிருந்தவர்கள் கூறினர்.

அதனால் கடை ஒன்றின் கண்ணாடிகள் பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலன் யாரென்றே எனக்குத் தெரியாது

## கைவிரித்தார் கனிமொழி

சென்னை, ஜூன் 8

போர் உச்சத்தில் இருக்கும் போது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடையும்படி யாராவது கூறுவார்களா? என்று கேள்வியெழுப்பியுள்ள, தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் மகள் கனிமொழி, சசிதரன் (எழிலன்) யாரென்றே தனக்குத் தெரியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைவர்களில் ஒருவராக விருந்த எழிலனையோ வேறு எந்த உறுப்பினர்களையோ இலங்கை இராணுவத்தினரிடம் சரணடையுமாறு நாம் உறுதிமொழி பக்.24

# ரணிலுக்கு எதிரான பிரேரணை வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாம்

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 8
எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைச் சிறைப்பிடித்தல், அவர்களைத் தண்டித்தல் என அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் காரணமாகியுள்ளன" என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசின் தார்மீகமற்ற நடவடிக்கைகளே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு காரணமாகும். அதனை நான் நேரடியாக அனுபவித்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பிரதமருக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. வெஸ்ட் மினிஸ்டர் நாடாளுமன்ற சம்பிரதாய வரலாற்றில் இதுபோன்ற அதிகூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தமை இதுவே முதல் தடவையாகும். இந்த அரசின் தார்மீகமற்ற நடவடிக்கைகள்தான் இவ்வாறானதொரு நிலைமைக்குக் காரணமாகியுள்ளது. அதை நான் எனது நேரடி அனுபவத்தில் கண்டுள்ளேன்.

பெருந்தெருக்கள் அமைச்சினூடாக 28 பில்லியன் ரூபா பணத்தை ஹெலிகொப்டரில் பயணம் செய்வதற்கும், தானசாலைகளை நடத்துவதற்கும் நான் செலவு செய்ததாக கடந்த ஒருவார காலத்திற்கு முன்னர் பிரதமர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், பெருந்தெருக்கள் அமைச்சு எழுத்தாவணங்களின் ஊடாக தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் குறுகியகால கடன்தொகை செலவழிந்த விதம் தெளிவாகத் தெரியும். அதில் 6.5 பில்லியன் ரூபா பணம் வீதிச் சுற்றுவட்டங்களை அமைக்கவும் மற்றும் பிரிட்டனின் இரும்புப் பாலம் உள்ளிட்ட வெளிநாட்டு நிதி அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 22 திட்டங்களுக்கு தேசிய பங்கு செலுத்துவதற்காகும்.

மேலும் 14 பில்லியன் ரூபா வீதி அகலப்படுத்துவதற்காகவும், ஏனைய வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும் 4 பில்லியன் ரூபா.பாலங்களை நிர்வகித்தல் மற்றும் புனர்நிர்மாணம் செய்வதற்காகவும், இறுதி 3.7 பில்லியன் ரூபா மகநெகும கிராம வீதி அபிவிருத்திக்காகவும் பயன் படுத்தப்பட்டது. இந்தப் பணம் பற்றி பிரதமர் கூறியிருப்பது முழுப் பொய்யாகும்.

எனது ஆட்சிக்காலத்தில் நிதி கையாள்கை தொடர்பில் முழுமையாக பொய்ப் பரப்புரைகளை முன்னெடுப்பதுடன், திறைசேரி பிணை முறியூடாக நாட்டுக்கு 50 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறும் கெஸ்டாபோ' குழு பொலிஸ் பிரிவினூடாக எதிர்க்கட்சியினரை சிறை பிடிக்கின்றது. தற்போதைய அரசால் முன்னெடுக்கப்படுகின்ற பொய்ப் பரைப்புரைகள், பெரும் மோசடி, அரசியல் எதிராளிகளைத் தண்டித்தல் என்பனவே இந்த வரலாற்று முக்கியத்துமிக்க நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் காரணமாகியுள்ளன. (ற-சி)

## கூட்டுறவாளர் வசதிக்காக இணக்க சபை விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்.குடாநாட்டு கூட்டுறவாளர்களின் வசதி கருதி இணக்க சபை ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

வடமாகாண விவசாயக் கூட்டுறவு அமைச்சின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் கூட்டுறவு பணியாளர்களுக்கென தனியான இணக்க சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூவர் கொண்ட இணக்க சபையில் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், ஓய்வுபெற்ற கூட்டுறவாளர் ஆகியோரை செயற்பட வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் கூட்டுறவு பணியாளர்கள் சங்கங்களில் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு இந்த இணக்க சபை மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

இந்த இணக்க சபை அடுத்து வரும் நாள்களில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.- என்றார். (ற-17)

## சைவ சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 8
புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் கன்னியர் அறநெறிப் பாடசாலையும் நடத்தும் சைவ சமய அறிவுப் பரீட்சை இன்று திங்கள் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது என சைவப் பிரசாரகர் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் அறிவித்துள்ளார்.(ற)

## விபத்தில் நால்வர் சாவு

கொழும்பு, ஜூன் 8
மாத்தளை, செம்பூகவத்தையில் வானொன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் உயிரிழந்ததுடன் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மாத்தளை, கண்டி ஆகிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஆறு சிறுவர்களும் அடங்குவதாக தெரிவித்த பொலிஸார், சம்பவத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள நால்வரே கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டனர்.

மாத்தறை இஸதீன் பிரதேசத்திலிருந்து சுற்றுலாவுக்கு சென்றவர்களின் வானே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## சிரந்தியைப் பாதுகாக்க முற்படுகிறாரா ரணில்?

### சந்தேகம் வெளியிடுகின்றார் அநுரகுமார



கொழும்பு, ஜூன் 8
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரான சிரந்தி ராஜபக்ஷவை சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துவருகிறாரா?" – என சந்தேகம் வெளியிட்டுள்ளார் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார.

அங்கு அவர்மேலும்தெரிவித்ததாவது-

நிதிமோசடி விசாரணைப் பிரிவு, ஏப்ரல் 18ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரிடம் விசாரணை நடத்தும் எனக் கூறப்பட்டது. எனினும், அது ஜூன் முதலாம் திகதிவரை ஏன் ஒத்திவைக்கப்பட்டது?.

அத்துடன், சபாநாயகரின் இல்லத்தில் வைத்து எதற்காக வாக்குமூலம் பெறப்பட்டது?. நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு முன்னால் குழப்பகரமானநிலை தோற்றம் பெறும் என்பதாலேயே இவ்வாறு இடம் மாற்றப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார். இது பொய்யாகும். கடந்த 28ஆம் திகதி தங்காலையில் நடந்த கூட்டத்தில், விசாரணை எங்கு நடைபெறும் என நான் தெளிவாகக் கூறியிருந்தேன். அவ்வாறே நடந்தது.

முன்னாள் ஜனாதிபதி தொலைபேசியூடாக விடுத்த வேண்டுகோளின்பேரிலா சபாநாயகரின் இல்லத்தில் வைத்து வாக்குமூலம் பெறப்பட்டது?. இவை தொடர்பில் பிரதமர் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். மோசடிக்காரர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும். இதற்காக ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர். ஆகவே, பொறுப்பற்ற விதத்தில் பிரதமர் செயற்பட்டால், அது மஹிந்த அணிக்கே சாதகமாக அமைந்து விடும். எனவே, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். –என்றார். (ற–சி)

## நீரில் மூழ்கி மாணவன் சாவு

கல்முனை, ஜூன் 4
கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கிட்டங்கி வாவியில் தனது நண்பர்களுடன் நேற்று நீராடிய சேனைக் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த த.லுக்சாந்த் (வயது 16) என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இவர் கல்முனை இராமகிருஸ்ண மிசன் கலவன் பாடசாலையில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கிறார். இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 வீத மாணவர்கள் புகையிலைக்கு அடிமை

## உலக சுகாதார ஸ்தாபன ஆய்வில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடக்கு மாகாணம் உட்பட இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களில் 11 வீதமானவர்கள் புகையிலை சார்ந்த போதைப் பொருள்களுக்கு அடிமையாகி உள்ளமை ஆய்வொன்றில் தெரியவந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

13 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களே இந்த பழக்கத்திற்குள்ளாகியுள்ளனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் இளம் பருவத்தினர் மத்தியில் காணப்படும் புகையிலை சார்ந்த போதைப் பொருள் பாவனை தொடர்பில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் பாரதூரமானவை என அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் டொக்டர் நிலங்க சமரசிங்க கூறியுள்ளார். இந்த அபாயத்திலிருந்து பாடசாலை மாணவர்களை விடுவிப்பதற்காக விரிவான செயற்றிட்டமொன்றை தயாரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் இந்தப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளதோடு அதனால் ஏற்படும் பின்விளைவுகளும் அதன் மூலமான சமூக சீரழிவுகளும் தொடர்கின்றமை அனைவராலும் வெளிப்படையாகவே பார்க்கக் கூடியதாக உள்ளது. அந்தச் செயற்பாடு திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது என்று வடமாகாண சபையினர் அடிக்கடி எடுத்துரைத்து வருகின்றனர்.

அதற்கு உரிய நடவடிக்கை வேண்டும் என்றும் அவர்கள் கூறுவதோடு மாணவ சமூகம் அதிலிருந்து விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலமான தாக்கங்களை எடுத்துக் கூறி அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்றும் பாடசாலை மட்டத்தில் அதனை முன்னெடுப்பது கட்டாயம் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (ற-4)

# எரிபொருள் பயன்பாட்டை குறைக்க அமைச்சு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
ஒரு வருட காலத்துக்குள் எரிபொருள் பயன்பாட்டை 10 வீதத்தால் குறைப்பதற்கு மின் சக்தி எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதற்காக எரிபொருள் வீண் விரையமாவதைத் தவிர்க்கும் வகையில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.பட்டகொட தெரிவித்துள்ளார்.

எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் சைக்கிளோட்டமும் நடத்தப்படவுள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பல இடங்களிலும் தேவையற்ற நிலையில் – கவனிப்பாரற்ற நிலையில் மின் விளக்குகள் ஒளிர்வது, அக்கறையீனமாக மின்குமிழ்களை ஒளிர விடுவது, அவ்வாறு பகலில் மின்குமிழ்களை ஒளிர விடுவதோடு கவனிப்பாரற்ற நிலையில் விட்டுச் செல்வது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பொதுமக்களுக்காக உள்ள மின்சாரத்தை பொதுமக்களே அக்கறையீனமாக நடந்து கொள்வதனால் பாதிப்பும் பொதுமக்களுக்கே என்பதனையும் தெளிவுபடுத்துவதாகவும் அது அமையும் – என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(ற-4)

# திவிநெகும பயிற்சி நிலைய பணியாளர்கள் போராட்டம்

## நிரந்தர நியமனங்களையும், அலுவலக கட்டடத்தையும் வழங்குமாறு கோரி



கிளிநொச்சி, ஜூன் 8
வவுனியா, பரசங்குளம் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள திவிநெகும பயிற்சி நிலையத்தில் பணியாற்றிய 17 ஊழியர்களை நடுத்தெருவில் விட்டு கட்டடத்தையும், அதனுடைய அசையும் சொத்துக்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தினருக்கு கையளித்தமை கண்டிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து கடந்த 5வருடங்களாக திவிநெகும செயற்றிட்டத்தில் பணியாற்றிய ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்க காணிப்பில் பணியாற்றி வந்தோம். ஆனால் 2012ஆம் ஆண்டு திட்டபணிப்பாளரான லியனகே என்பவர் கட்டடத்தையும் அங்கு உள்ள சொத்துக்கள், ஊழியர்களை தன்னிடம் வழங்குமாறும் இதை லாபநோக்கற்ற நல்ல முறை யில் செயற்படுத்தி மீண்டும் விவசாய அமைப்பினிடம் கையளிப்பதாகவும் கூறினார். ஆனால் இது எழுத்து மூலமாக எமக்கு வழங்கப்படவில்லை. இங்கு உள்ள வருமானத்திலே எங்களுடைய சம்பளங்களும் தந்தனர். ஆனால் இன்று இந்த



ளுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கி கட்டடத்தையும் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் புளியங்குளத்தில் முன்னெடுக்கப்பட்ட திவிநெகும பயிற்சி நிலையத்தில் கடமையாற்றிய போரினால் பாதிக்கப்பட்டு அவயவங்களையும், உறவுகளையும் இழந்த பணியாளர்களே இவ்வாறு கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் 15ஆயிரம் ரூபா சம்பளத்துடன் ஓய்வு நாள் பாராது நியமனம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு புளியங்குளம் விவசாய கேந்திரம் மட்ட அமைப்பின் தலைவரின் நேரடி கண்

கட்டடத்தை பல்கலை கழகத்தினரிடம் கையளிக்க உள்ளதாக தெரிவித்துள்ளார் லியனகே. இது எந்த விதத்திலும் நியாயம் ஆகாது. எங்களை நடுத் தெருவில் விட்டு விட்டு கட்டடத்தை மட்டும் பல்கலைக்கழகத்தினருக்கு கொடுப்பது நியாயம் அற்றதே. எங்களுக்கான நிரந்தர நியமனம் கிடைத்தால் தான் நாங்கள் கட்டடத்தை பொறுப்பு கொடுப்போம். இல்லை என்றால் இங்கு பணியாற்றிய 17 ஊழியர்களும் இங்கேயே தற்கொலை செய்து கொள்வோம். அதற்கான முழு பொறுப்பும் திட்டப் பணிப்பாளரே. – என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-21)

# பதில் ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட கொழும்புத்துறையிலுள்ள பாடசாலை ஒன்றில் ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்துக்குக் கற்பித்த வர்த்தக பாட ஆசிரியர் பெப்ர வரியில் இடமாற்றப்பட்டபோதும் அதற்குரிய பதிலீடு இதுவரை வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தக பாடத்தைத் தெரிவுப் பாடமாக ஒருவருடத்துக்கும் மேல் கற்ற சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை, வேறு தொழில்நுட்பப் பாடங்களை புதிதாக தெரிவு செய்து கற்குமாறு, பாடசாலை அதிபர் மாணவர்களை வற்புறுத்தி வருவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

வர்த்தக பாடத்தைக் கற்பித்த ஆசிரியர் ஒரு சில வருடங்களே குறித்த பாடசாலையில் பணியாற்றியிருந்ததாகவும் பின்னர் பதிலீட்டாசிரியர் இல்லாது இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட் டுள்ளது. அதனால் பல மாதங்க ளாக மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். யாழ்.வலயப் பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் இருந்தும் ஆசிரியர்களை நியமிக்காது, ஒருவருடத்துக்கும் மேல் வர்த்தக பாடத்தைக் கற்ற மாணவர்களை வேறு பாடத்தைத் தெரிவு செய்யுமாறு கோருவதால் ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்துக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் குழப்பமடைந்துள்ளனர். பின்தங்கிய தமது பாடசாலை மாணவர்கள் தொடர்பில் கல்வி அதிகாரிகள் அக்கறை செலுத்தாமல் இருப்பது கவலையை ஏற்படுத்தியுள்ளதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-4)



வவுனியாவில் சேவை புரிவதற்கு திருக்குடும்ப கன்னியர்கள் சபையினர் வருகை தந்து 75 வருடங்கள் நிறைவுபெற்றதை முன்னிட்டு திருக்குடும்ப கன்னியர் சபையின் பவளவிழாஇறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை எஸ். சத்தியராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருக்குடும்ப கன்னியர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது. நிகழ்வில் பங்குத்தந்தையர்கள் அருட்சகோதரிகள் எனப்பலர் கலந்தகொண்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)

# சுழிபுரத்தில் 4 மாணவர்கள் பொலிஸாரால் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 8
சுழிபுரத்திலுள்ள பாடசாலை ஒன்றின் 4 மாணவர்களைப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை இரவு விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர்.

பாடசாலை ஒன்றின் முன்பாக நின்றிருந்தபோது அங்கு சென்ற பொலிஸார் குறித்த நால்வரினதும் சைக்கிள்களை பாடசாலை மைதானத்தில் விட்டுவிட்டு தமது ஜீப்பில் ஏற்றிச் சென்று பொலிஸ் நிலையைத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று அவர்கள் அவ்வாறு நிற்பதற்கு தான் வாள்வெட்டுக் குழுக்கள் ஆக வாகிறது என்றும் அவ்வாறானவர்களே தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுவரும் சிறுமியருடனும் தொடர்பு செய்ய முற்படுகின்றனர். ஒருவழியில் காரணமாக இருக்கலாம் என்றும் அவ்வாறானவர்கள் தமது கைத்தொலைபேசிகளில் ஆபாசப் படங்களை, வீடியோக்களை வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர்களை விசாரணைக்கு அழைத்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனால் பாடசாலையைச் சேர்ந்த வர்கள் உள்ளிட்ட பலரும் அங்கு ... (ற-4,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்த சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிக்குக

## கோருகிறது கபே அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8
20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை விரைவில் வர்த்த மானியில் அறிவிக்குமாறு தேர்தல் கண்காணிப்பாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதன் மூலம் உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு மக்களின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ள முடியும் என நீதியானதும் சுதந்திரதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.
கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் இது தொடர்பில் செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இலங்கை மக்கள் 20 வருடங்களாக எதிர்பார்த்திருந்த அரசியலமைப்புத் திருத்தத்தை சீர்குலைப்பதற்கு நாடாளுமன்றத்திலுள்ள சில பிரதிநிதிகள் முயற்சிக்கின்றனர்.
புதிய தேர்தல் முறை உள்ளடக்கப்பட்ட இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை அடுத்த அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் இன்னும் 3 வாரங்களுக்குள் இந்த திருத்தத்தை விஷேட பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# விபத்தில் காயமடைந்த இந்தியப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 8
மாங்குளம் பகுதியில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற பஸ் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்தியப் பெண்மணி 6 நாள்களின் பின்னர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
இந்தியா, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கருப்பையா கருப்பாயி அம்மாள் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.
கடந்த 2ஆம் திகதி அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்.நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று ஏ-9 வீதியில் மாங்குளம் பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த டிப்பர் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது சம்பவ தினத்தன்று இருவர் உயிரிழந்ததோடு 16பேர் காயமடைந்தனர். இவ்வாறு காயமடைந்தவர்களில் கருப்பாயிஅம்மாளும் ஒருவர். தலையில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.
இதேவேளை குறித்த விபத்தின் போது உயிரிழந்தவர்களில் இதய ஜோதி என்பவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராவார். (ற-101)

# மோ. சைக்கிள் -மினிபஸ் விபத்து: சாரதிக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 8
பருத்தித்துறை யாழ்.நகர் வீதியில் புறாப்பொறுக்கியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் -மினிபஸ் விபத்துச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மினிபஸ் சாரதியை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவும் நீதிவானால் நிராகரிக்கப்பட்டுள்ளது என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் நடந்த இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ். பல்கலை ஊழியரான செல்வராஜா பிரசன்னா என்பவர் உயிரிழந்திருந்தார்.
வேகமாக பயணித்த மினிபஸ் சாரதி பயணிகளை ஏற்றுவதற்காக மினிபஸ் தடுப்பை திடீரென பிரயோகித்த போது மினி பஸ்ஸின் பின்னால் வந்து கொண்டிருந்த இளைஞர் பஸ்ஸின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது. அதில் பலத்த காயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரி ழந்திருந்தார்.
இச்சம்பவத்தை அடுத்து மினிபஸ் சாரதி நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத் தப்பட்டார். சாரதியை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-109)

## பருத்தித்துறை ப.நோ.கூ.ச. இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8
பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை கடும்போட்டிக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்டது.
இந்த புதிய இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்காக சங்கத்தின் பொதுச்சபை கடந்த சனிக்கிழமை கூட்டப்பட்டது.
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேஷ்தலைமையில்இந்தபொதுச் சபைக் கூட்டம் இடம்பெற்றது.
இந்தப் பொதுச்சபை கூட்டத்துக்கு 93 பொதுச்சபை உறுப்பினர்கள் சமுகம் கொடுத்தனர்.
கூட்டத்தில் புதிய இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்கு இருமுனைப்போட்டி இடம்பெற்றது.
கடுமையான போட்டியை அடுத்து இறுதியில் வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார். இதேசமயம் கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கூட்டப்பட்டது. (ற-17)

# கிருமிநாசினிகளின் பாவனையால் விவசாயிகளுக்கு அழுகல் நோய்

### அவதானமாகச் செயற்படுமாறு கூறுகின்றார் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இரசாயனவியலாளர் எஸ்.சரவணன்

யாழ்ப்பாணம், ஜூன் 8
புத்தூர், நிலாவரை, இராசபாதை, சிறுப்பிட்டி மற்றும் இதர பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் கூலியாள்களுக்கு கைகள் மற்றும் கால்களில் அழுகல் நோய் பரவி வருகின்றது. என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இரசாயனவியலாளர் எஸ்.சரவணன் தெரிவித்தார்.
வேள்ட்விசன் நிறுவன அனுசரணையுடன் வலி.மேற்கில் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் விவசாயக் கருத்தரங்கு இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வயல் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பயிரினங்களுக்கு விசிறப்படும் கிருமிநாசினி, களை நாசினி என்பவற்றின் வெற்றுப் போத்தல் ஆங்காங்கே விசிறப்பட்டுள்ளன. பெரும்பாலான நஞ்சுப் போத்தல்கள் வயல் கிணறுகளில் உள்ளன.
இவ்வாறான களை நாசினி, கிருமி நாசினி என்பவற்றின் போத்தல்களில் இருந்து வழியும் கழிவு பதார்த்தங்களும், பயிர் பிரதேசங்களில் காணப்படும் மருந்துகளின் தாக்கங்களுக்கு உட்பட்டு பல விவசாயிகளின் கால்களிலும், கைகளிலும் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளன.
கிருமிநாசினி பயன்பாடு தொடர்பான போதுமான விழிப்புணர்வு இன்மையே இவ்வாறு விவசாயிகளும், கூலியாள்களும் பெருமளவில் பாதிப்புறுகின்றனர். இவ்வாறான நோய்த்தாக்கத்துக்குள்ளானவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவதன் ஊடாக சிகிச்சை பெற்று சுகதேகிகளாக வாழலாம். கிருமி நாசினி, களை நாசினிகளின் பாவனைக்குப் பின்னரான கழிவுப் போத்தல்களை கிணற்றுக்குள் வீசாதீர் கள்.- என்றார். (ற-50)

# போட்டிபோட்டு ஓடிய பஸ் மோ.சைக்கிளை மோதியது

### ஒருவர் சாவு: ஒருவரின் கால் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 8
போட்டி போட்டு ஓடிய பஸ்களில் தனியார் பஸ் எதிரே வந்தவர்களை மோதி பின்னர் பனையையும் மோதி விழுத்தியது. விபத்தில் சிக்கியவர்களை எவரும் கண்டு கொள்ளாததால் ஒரு மணித்தியாலமாக வீதியில் கிடந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆயினும் சிகிச்சை பயனளிக்காது ஒருவர் உரிழந்தார். மற்றையவர் முழங்காலுடன் காலை இழந்தார்.
முல்லைத்தீவு வெள்ளாமுள்ளி வாய்க்காலில் கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. முள்ளியவளை பொன் நகரைச் சேர்ந்த தர்மராசா கோபி (வயது 24) என்பவரே உயிரிழந்தார். அவருடன் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த க.தர்மகுலராஜசிங்கம் என்பவர் வலதுகால் முழங்காலுடன் காலை இழந்தார்.
அரச போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்ஸும்தனியார்பஸ்ஸும்போட்டியிட்டு ஓடியதாகவும் அதன் போதே எதிரே மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவர்களை மோதியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மோதி பின்னர் அருகே நின்ற பனையுடன் மோதியது என்றும்,அதன்பின்னரே பஸ்ஸின் வேகம் கட்டுப்பாட்டுக்குள் வந்தது என்றும் கூறப்படுகின்றது. குறித்த பனை மரம் அடியோடு முறிந்துள்ளது.
விபத்து இடம்பெற்றவுடன் பஸ் சாரதி உள்ளிட்டவர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்றும், அதனால் சுமார் ஒரு மணித்தியாலமாக வீதியில் காயமடைந்தவர்கள் விழுந்து கிடந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் வழிப்போக்கர்கள் கண்டு அவர்களை மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் என்றும் பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்றும் தெரிய வருகின்றது.
ஆயினும் சிகிச்சை பயனளிக்கர்து நேற்றுமுன்தினம் கோபி என்பவர் உயிரிழந்தார். மற்றையவருக்கு கால் அகற்றப்பட்டுள்ளது.
விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்றுமுன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ற-4)

# வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்

மன்னார், ஜூன் 8
வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி 2 இலட்சம் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை நேற்று மன்னார் - முசலி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மறிச்சுக்கட்டியில் ஆரம்பமானது.
தமது தாயக பூமியில் இறுதி மூச்சு வரை தாங்கள் வாழ்வதற்கு அரசு உரிய உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனக் கோரியே இந்த இரண்டு இலட்சம் மக்களின் கையொப்பத்தைப் பெறும் வேட்டை பிரதேச மக்களினால் ஆரம்பிக்கப்பட்டது. மறிச்சுக்கட்டி மொஹதீன் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக நடைபெற்ற இந்த கையொப்பம் பெறும் வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட உலமா சபைகளும், அல் ஜாசிம் ஆராய்ச்சி அமைப்பு, பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பு மற்றும் ஆர்.ஆர்.டி அமைப்பு என்பன கூட்டாக ஏற்பாடு செய்துள்ளதாக அல்ஜாசிம் அமைப்பின் தலைவர் தௌபீக் தெரிவித்தார்.
எதிர்வரும் 10 தினங்களுக்குள் நாடு தழுவிய முறையில் இந்த கையொப்பம் பெறப்படவுள்ளதாகவும் அதில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்கள் என்ற பேதமின்றி வாழ்விடம் பறிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை விரும்பும் அனைவரும் தமது கையொப்பங்களை இட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். இவ்வாறு பெறப்படும் கையொப்பங்கள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளிடத்திலும் கையளிக் கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.
கையொப்பம் பெறும் நிகழ்வில் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன், சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். எஸ்.அமீர் அலி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரிப் கான் பதி யுதீன் இ வீ.ஜயதிலக, ஜனூபர், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களான டாக்டர் இல்யாஸ், எம்.ஈ.எச். மஹ்ரூப், முசலி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் [illegible] உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (ற-10,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லனாகியுள்ள மஹிந்த நாட்டைக் குழப்ப முயற்சி

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
எமது நாட்டின் அரசியலில் வில்லன் பாத்திரத்தை ஏற்றுள்ளார் முன்னாள் ஜனாதிபதி. திரைப்படத்தில் வரும் வில்லன் பாத்திரத்தால் கதை விறுவிறுப்படைவது போலவும் சண்டைகள் உருவாகுவது போலவுமே எமது நாட்டின் அரசியலில் அவ்வப்போது தோன்றி கலகத்தை விளைவிக்க முனைகின்றார் அவர். – இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித் தார்.
அக்கரைப்பற்று ஸ்ரீ இராம கிருஷ்ண தேசிய பாடசாலையில் நடைபெற்ற தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–
கதாநாயகனாக இருந்த முன்னாள் ஜனாதிபதி இன்று வில்லனாக மாறி விட்டார். அதனால் அடிக்கடி நாடாளுமன்றத்தையும் மக்களையும் குழப்பி – குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கப் பார்க்கின்றார். ஆகவே மக்கள் தெளிவாக செயற்பட்டு கடந்த காலத்தில் எவ்வாறு ஒட்டு மொத்தமாக வாக்களித்து நல்லாட்சியை உருவாக்கினீர்களோ? அதில் இருந்து சற்றும் விலகாமல் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்கப் பாடுபட வேண்டும்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறுபான்மை மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கினர். ஆகவே அவர்கள் எமக்கு தரவேண்டியதையும் அள்ளி அள்ளி கொடுக்க வேண்டும். இந்த நாட்டிற்கு உழைப்பதற்காக வந்தவர்கள் மலையக தமிழர்கள். அதே போல் உரிமைக்காக போராடியவர்கள் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள். இவர்கள் அனைவரும் அமைதியையும் சமாதானத்தையும் வேண்டியே கடந்த தேர்தலில் வாக்களித்தனர். ஆகவே சமாதானத்திற்கு எதிராக எவர் வந்தாலும் எதிர்ப்போம்.
மலையகத்தில் உள்ள தமிழர்கள் உரிமையை இழந்திருக்கின்றார்கள். வடக்கு கிழக்கிலே உள்ள தமி



ழர்கள் உறவுகளை இழந்திருக்கின்றார்கள். மலையகத்திலே தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கும்.
இராமகிருஷ்ணர் நாமத்தில் உள்ள இப்பாடசாலையின் தொழல்நுட்ப கூடம் என் கையால் திறக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் அளித்த இறைவனுக்கு நன்றி சொல்கின்றேன். இத்தொழில் நுட்பக் கூடத்தை மாணவர்கள் சிறப்பாக பயன்படுத்தி தமது தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.–என்றார். (ற)

# கிழக்கு தமிழ் அதிகாரிகள் பழிவாங்கப்படுகின்றனர்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கூறுகின்றது

மட்டக்களப்பு, ஜூன் 8
கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் அதிகாரிகள் மீதான பழிவாங்கல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அந்தக் கட்சியால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–
கிழக்கு மாகாணத்தில் தமிழ் அதிகாரிகள் மீதான திட்டமிட்ட அடக்குமுறைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் அதிகாரிகளை மாகாண சபையில் உயர்பீடங்களுக்கு கொண்டு செல்வதற்கு கடந்த காலங்களில் பல தடைகள் இருந்தும், சிரமத்தின் மத்தியில் பல தமிழ் அதிகாரிகள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலிருந்து உள்வாங்கப்பட்டிருந்தனர்.
பல தகைமைகளோடு உரிய இடம் கிடைக்காமல் இருந்த தமிழ் பேசும் அதிகாரிகளுக்கு கிழக்கு மாகாண சபையின் உதயத்தின் பின்னரே உரிய பதவி உயர்வுகளும் கிடைக்கப்பெற்றன. ஆனால் தற் போதைய நிலையில் கிழக்கு மாகாண உயர் பதவிகளில் இருக்கும் தமிழ் அதிகாரிகள் பழி தீர்க்கப்படுகின்றனர்.
இந்த நிலை நிறுத்தப்பட வேண்டும். திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் திடீர் அதிகாரிகள் இடமாற்றம், பதவிக் குறைப்புக்கள் ஏனைய அதிகாரிகள் மத்தியில் இன முரண்பாட்டையும் ஓர் அதிகாரியை இன்னுமோர் அதிகாரி இனக் குரோத சந்தேகத்துடன் பார்க்கும் நிலைமையையும் தோற்றுவித்துவிடும். மூவினங்களும் இணைந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் முன்னுதாரணமாக மாகாண சபை செயற்பட வேண்டும். – என்றுள்ளது. (ற–10)

# வடக்கு, கிழக்குக்கு குறைந்தது 20 ஆசனங்களாவது தேவை

## பா.அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 8
வடக்கு, கிழக்கு மக்கள் இணைந்து குறைந்தது 20 ஆசனங்களை யாவது பெற்றுக்கொண்டால் மாத்திரமே எமக்கான தீர்வின் அடுத்தகட்ட படிமுறைக்கு செல்லக்கூடியவர்களாக இருப்போம். – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.
ஓய்வுபெற்ற மருத்துவர் மயில்வாகனம் தேவாராஜாவின் சேவை நலன் பாராட்டு விழா அக்கரைப்பற்று வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற மூவின சமூகங்களில் தமிழ்ச் சமூகமே மத்தளம் போன்று அடிபடுகின்ற சமூகமாக காணப்படுகின்றது. எங்களுக்கு வருகின்ற வளப் பங்கீடுகள் திட்டமிட்டு இன்னுமொரு சகோதர இனத்தால் மாற்றப்படுகின்றது. குறிப்பாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட 250 மில்லியன் ரூபாய் நிதி அரசியல் செல்வாக்கை பாவித்து மாற்றம் செய்வதற்கான ஒரு நிலை காணப்படுகின்றது.
இந்த நிலையில் மக்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்றார்கள். இந்த அரசின் நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்காளியாக உள்ளது என பலர் நினைக்கின்றனர். ஆனால் நாங்கள் இந்த அரசின் முழுமையான பங்காளிக் கட்சியாக இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.
சில விடயங்களில் மாத்திரமே இந்த அரசுடன் இணைந்து செயற்படுகின்றோம். நல்லாட்சிக்கான கதவு திறக்கப்பட்டுள்ளதே தவிர இன்னும் நல்லாட்சி மிளிரவில்லை என ஜனாதிபதி கூறி வருகின்றார். எதிர் வரும் பொதுத்தேர்தலின் பின்னரே நல்லாட்சியைக் காணமுடியும். – என்றார். (ற–10)

# '20'ஐ சமர்ப்பிக்காவிட்டால் நாடாளுமன்றை கலையுங்கள்

## மக்கள் விடுதலை முன்னணி கோருகின்றது

20ஆம் திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்க முடியவில்லை என்றால் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி, ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளது.
மக்கள் சக்தியைப் பாதுகாப்பதற்காக தேர்தல் ஒன்றை நடத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.
மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸா நாயக்க மற்றும் பிரதான செயலா ளர் ரில்வின் சில்வா, ஜனாதிபதியை சந்தித்து சமகால அரசியல் நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். இந்தக் கலந்துரையாடலின் போதே நாடா ளுமன்றம் கலைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின்சில்வா தெரிவித்துள்ளார். (ற)

# ஷீயாக்களின் ஊடுருவல் அதிகரித்து வருகின்றது

## அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் கவலை

அம்பாறை, ஜூன் 8
இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஷீயாக்களின் ஊடுருவல் அதிகரித்து வருவதாக அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் எஸ்.எச்.ஆதம் பாவா தெரிவித்தார்.
அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா ஏற்பாடு செய்த உலமாக்கள் மற்றும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கான விசேட செயலமர்வு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை சாய்ந்தமருது பரடைஸ்மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
நாட்டில் தற்போது ஷீயா கொள்கை மிகவும் தீவிரமாக பரப்பப்பட்டு வருகின்றது. எமது பிரதேசங்களிலும் இது வேகமாக பரவி வருகின்றது. இதற்கான முயற்சிகள் பல்வேறு ரூபங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.
இது குறித்து மக்களுக்கு விழிப்பூட்டப்பட வேண்டும். பள்ளிவாசல் பொறுப்பாளர்களும், உலமாக்களும் மார்க்கத்தின் பாதுகாவலர்கள். நாங்கள் இவ்விடயங்களில் மிகக் கவனமாக இருந்து சமூகத்தை வழிநடத்த கடமைப்பட்டிருக்கின்றோம்.
ஷீயா விடயத்தில் இரு தரப்பினரும் இணைந்து எமது சமூகத்தில் அவர்களின் ஊடுருவலை முற்றாக இல்லாதொழிக்கப் பாடுபடவேண்டும்.– என்றார். (ற)

# ரணிலுக்கு எதிரான பிரேரணை சட்டரீதியான ஆவணம் அல்ல

## அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க சுட்டிக்காட்டுகின்றார்



கொழும்பு, ஜூன் 8
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் சிலர், பிரதமருக்கு எதிராக சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்டரீதியான ஆவணம் அல்ல என கிராமிய பொரு ளாதார விவகார அமைச்சர் எஸ்.பீ.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.
அமைச்சரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அது சட்டரீதியான ஆவணம் அல்ல. எனவே அதனை நிராகரிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.
ஒரே அமைச்சர்கள் பல்வேறு இடங்களில் கையொப்பமிட்டால் அந்த ஆவணம் சட்டரீதியானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆவணம், நாடாளுமன்ற செயலாளரால் நிராகரிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ற)

# தமிழர்களது விகிதாசாரம் அம்பாறையில் வீழ்ச்சி

## மாவை எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை, ஜூன் 8
அம்பாறை மாவட்டம் பல வழிகளிலும் பின் தங்கியுள்ளது. முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைத்துவம், பெரும்பான்மை யினத்தவரின் குடியேற்றம் போன்றவற்றால் 21 சதவீத மாகவிருந்த தமிழ் மக்கள் இன்று 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளனர்.– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பெற்ற மருத்துவர் மயில்வாகனம் தேவாராஜாவின் 31 வருடகால சேவை நலன் பாராட்டு விழா, அக்கரைப்பற்று வை.எம். சி.ஏ. மண்டபத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
தமிழர்களின் விகிதாசாரம் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழர்களாகிய நாம் எந்த நிலத்தில் வாழ்கின்றோமோ, அதை தமிழ் நில மாக குறிப்பிடுவதே வரலாறாகும்.
அந்த நிலத்தை தமிழினமில்லாமல் மாற்றிவிட்டால், எங்களது ஆட்சி தமிழினத்தில் இடம்பெற முடியாது செய்து எங்களது அரசியலில் அதிகாரத்தையும் நாங்கள் தீர்மானிப்பதிலிருந்து எங்களை வீழ்த்த வேண்டும் என நினைக்கின்றார்கள். தமிழர்களின் நிலத்தை விடுவிக்க சிலர் விரும்பவில்லை. ஆனால், தமிழ் மக்களின் ஒரு அங்குல நிலத்தையேனும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாரில்லை. அதற்காகப் போராடுவோம். – என்றார்.
இடர் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சி.அமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேடம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி உறவினரால், நன்மை உண்டு. மாணவர்கள், ஆர்வமுடன் படிப்பர்

**இடபம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர். ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

**மிதுனம்**: மறைமுக எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். சுபகாரியம் குறித்த பேச்சில் நல்ல முடிவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் வருமானம் அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவைப்படும்.

**கடகம்**: திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. நண்பரின் தேவைக்கு உதவுவீர்கள். சுபகாரியம் குறித்த பேச்சில் முன்னேற்றம் உண்டாகும்.

**சிங்கம்**: இனிமையாகப் பேசி, அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். மாணவர்கள் நற்பெயர் காண்பர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**கன்னி**: பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழிலில் பங்குதாரர்களின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்**: விருந்தினர் வரவால் மகிழ்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்கால நலன் குறித்து திட்டமிடுவீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

**விருச்சிகம்**: புதிய வாகனம் வாங்க யோகம் உண்டாகும். சுப விடயத்தில் எதிர்பார்த்த முடிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**தனுசு**: அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். அரசியல்வாதிகள், பதவியைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்பர்.

**மகரம்**: உறவினர் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். புதிய உத்தியால், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். மனைவியின் கருத்தை ஏற்பது நல்லது. பிள்ளைகளின் செயற்பாடு, பெருமை தரும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**கும்பம்**: யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். அத்தியாவசியச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். நண்பர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள்.

**மீனம்**: பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். பெற்றோரின் விருப்பத்தை அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணம் வாங்க யோகமுண்டு.

# சொல்வதெல்லாம் உண்மை நடந்தது என்ன ?



ஜீ தமிழ் தொலைக்காட்சியின் சொல்வதெல்லாம் உண்மை, நிகழ்ச்சியை திரைப்பட குணசித்திர நடிகை லட்சுமி ராமகிருஷ்ணன் நடத்தி வந்தார். தற்போது லட்சுமி ராமகிருஷ்ணன் திடீரென நீக்கப்பட்டு நடிகை சுதா சந்திரன் நடத்துகிறார்.

சொல்வதெல்லாம் உண்மை நிகழ்சியில் லட்சுமி இராமகிருஷ்ணன் அடிக்கடி பயன்படுத்திய, 'என்னம்மா இப்படிப் பண்ணிறீங்களேம்மா' என்ற வசனம் விஜய் தொலைக்காட்சியின் நிகழ்சியில் கிண்டல் செய்யப்பட்டு தற்போது அந்த வசனம் மிகப் பிர பலமாகியுள்ளது. இந்த நிலையில், 'என்னம்மா இப்படிப் பண்ணிறீங்களேம்மா' என்ற பெயரில் புதிய ரியாலிட்டி ஷோவை நடத்தவுள்ளதாலேயே, சொல்வதெல்லாம் உண்மை நிகழ்சியிலிருந்து லட்சுமி இராமகிருஷ்ணன் வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது அவர் வெளியேற்றப்பட்டதற்கு அது காரணமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கு வருகிறவர்கள் பொலிஸுக்குப் போனால் பிரச்சினை பெரிதாகும் என்றுதான் இங்கு வருகிறார்கள்?. இங்கும் அவர்களை பொலிஸைக் கூப்பிடுவேன் என்று மிரட்டினால் எப்படி அவர்கள் வருவார்கள். ஒரு கட்டத்துக்கு மேல் லட்சுமி இராமகிருஷ்ணன் அதற்றலும், மிரட்டலும் அதிகமானது. நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் எங்களிடம் வருத்தப்பட்டு சொல்ல ஆரம்பித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் பொறுமையும், சமயோசிதமாக சமாளித்தலும் முக்கியம். ஆனால் லட்சுமி உணர்ச்சிவசப்பட்டு நிகழ்ச்சியின் நோக்கத்தையை கெடுத்து விடுகிறார். அதனால்தான் வேறு வழியில்லாமல் அவர் மாற்றப்பட்டார் என்கிறது சனல் வட்டாரம்.

ஆனால் லட்சுமி ராமகிருஷ்ணன் தரப்பு இதனை மறுக்கிறது. திரைப்பட இயக்கத்தில் தீவிர கவனம் செலுத்துவதால் நிகழ்ச்சியை விட்டு அவரே விலகிவிட்டார், என்கிறார்கள். யார் சொல்வது உண்மை என்று யாருக்குத் தெரியும்.



# திரிஷாவுக்கு 'மேக்அப்' போட்ட கமல்

நடிகை திரிஷா, தனது டுவிட்டரில் ஒரு படத்தைப் போட்டுள்ளார். எத்தனை பேருக்கு இந்த பாக்கியம் கிடைத்ததோ தெரியாது. ஆனால் திரிஷா தனக்குக் கிடைத்த பாக்கியத்தை ஊரைக் கூட்டி அறிவித்துள்ளார் இந்தப் படத்தின் மூலம்.

அதாவது கமல்ஹாசன், திரிஷாவுக்கு மேக்கப் போடும் படம்தான் அது. ஒரு தொழில்முறைக் கலைஞர் போல அவ்வளவு அக்கறையாக மேக்கப் போடுகிறார் கமல். ஆனால் திரிஷாவோ படு ஜாலியாக கமராவுக்குப் போஸ் கொடுத்தபடி குதூலகச் சிரிப்புடன் அமர்ந்திருக்கிறார்.

திரிஷாவின் முகத்தில் தெரிந்தது வெறும் சிரிப்பு மட்டுமல்ல பெருமிதம் கலந்த பூரிப்பும் கூட என்பதைச் சொல்கிறது அவரது டுவிட். அதில், யார் இன்று எனக்கு மேக்கப் போட்டு விட்டது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# கட்டியணைக்க மறுத்த காதலனைக் கீறிக் குதறினார் காதலி



தன்னைக் கட்டி அணைத்து முத்தமிட மறுத்த காதலனை நகங்களால் கீறி பற்களால் கடித்துக் காயப்படுத்திய பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

டானியலி ஹோல் என்ற பெண்ணே இவ்வாறு தனது காதலரான ஜாகொப் பேர்ன்ஸைக் காயப்படுத்தியுள்ளார்.

ஒரு வருட காலமாக காதலித்து வந்த டானியலியும் ஜாகொப்பும் வீட்டில் இருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜாகொப்பை முத்தமிட டானியலி முயன்ற போது அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்ததையடுத்தே சினமடைந்த டானியலி அவரை தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதனால் ஜாகொப்பின் பின் கழுத்தில் கீறல் காயங்களும் இடது கரத்தின் மேல் பகுதியில் கடிகாயங்களும் ஏற்பட்டு குருதி வெளிப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஜாகொபு செய்த முறைப்பாட்டையடுத்து டானியலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

டேய் நாளைக்கு பெண் பார்க்கப் போறேன். கண்டிப்பா நீயும் வரணும்?
உனக்கு ஒரு கஷ்டம் என்றால் நான் சும்மா இருப்பேனா?

தலைவர் மணலை இப்போ சுத்தமா கடத்தறதில்லையாமே?
ஆமாம்! அதுலையும் கலப்படம் பண்ணித்தான் கடத்துவார்!

# தாயுடன் பிறந்த இரட்டையரை முதன் முதலில் பார்த்து பிரமித்து போன குழந்தை

ஒரே உருவ ஒற்றுமையுடன் பிறந்த இரட்டையரை பார்த்தால் அனைவருமே பிரமிப்பது வழமை. இந்த நிலையில் 10 மாத குழந்தை ஒன்று தனது தாயுடன் பிறந்த இரட்டையரை பார்த்து பூரித்து போன சம்பவத்தை வீடியோவாக பதிவு செய்து யூ டியூபில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

ஐரோப்பாவின் லிதுவேனியாவில் பிறந்த பெலிக்ஸ் என்ற அந்த 10 மாத குழந்தையை, கனடாவில் உள்ள உறவினர்களைப் பார்க்க பெற்றோர்கள் அழைத்துச் சென்றனர். குறித்த குழந்தை தனது தாயை போன்ற மற்றொரு உருவத்தை கண்டு பூரித்து போகும் காட்சிகள் வீடியோவாக பதிவு செய்யப்பட்டு, அது யூடியூபில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த வீடியோவில் தாயையும், சித்தியையும் குறித்த குழந்தை பார்த்துப் பார்த்து குழப்படையும் காட்சி மிக தெளிவாக விளங்குகின்றது. மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தும் இந்த வீடியோ காட்சியை இது வரை 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, கந்தரோடை இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை கலைமதி சனசமூக நிலைய மண்டபத்தில் குருதிக்கொடை முகாம் இடம்பெற்றது. அதில் 25 இளைஞர்கள் வரையில் கலந்து கொண்டு குருதியைத்தானமாக வழங்கினர். (ற-5,23)

# தற்போது எழுந்துள்ள நாம் இனிமேலே நடக்க வேண்டும்

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 8

குப்புறக்கிடந்த நாம் தற்போது தான் எழுந்து இருக்கின்றோம். இனிமேல் தான் மெல்ல மெல்ல அடிகளை எடுத்து வைக்க வேண்டும் – இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மூதூர் விவசாய அமைப்புகள் மற்றும் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

நாம் தற்போதுள்ள அரசியல் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு துணிவாகவும் சமயோசிதமாகவும் செயற்பட வேண்டிய காலம் இது. கடந்த காலத்தை விட தற்போது ஒரு சிறிய முன்னேற்றம் வந்துள்ளது. இதனை கவனத்தில் கொண்டு அடுத்த நகர்வை நோக்கி செல்ல வேண்டும். நாம் எதிர்க்கட்சியில் இருக்கும் போது என்ன சொன்னாலும் செல்லுபடியாகாது என்ற நிலையில் எமது மக்களின் நிலையைப் புரிந்து கொண்டு நடந்து கொண்டோம். தற்போது ஒரு மாற்றத்தின் மூலம் எமது உறவுகளின் நிலையை இன்னுமொரு பரிணாமத்துடன் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் விடயங்களை மிக நுணுக்கமாகக் கையாண்டு கொண்டிருக்கின்றோம்.

தற்போது மாற்றப்பட்டிருக்கும் அரசு ஒரு நிதானமான நிலையில் செல்கின்றது. கேட்கப்படுகின்ற விடயங்கள், அந்தப் பக்கத்தில் இருக்கும் அடுத்த தரப்பினரால் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதை அவதானித்து அந்த நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு நாம் எவ்வாறு சிந்திக்கப் போகின்றோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எமது உரிமைப் பிரச்சினையை நாம் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. அதனைத் தூக்க வேண்டிய நேரம் இருக்கின்றது. தற்போது அதற்காக கிடைத்திருக்கும் முதல் வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். எமது உணர்வுகளுக்கு மட்டும் இடம்கொடுத்து எமது உரிமைகள் தொடர்பான விடயத்தில் எமக்கு எதிர்த்தரப்பில் இருப்பவர்களை வெற்றியடையச் செய்துவிடக் கூடாது.

இனிவருகின்ற அரசைத் தீர்மானிப்பதிலும் பங்காளிகளாக இருக்க வேண்டும். தற்போது எமது தலைவர் சம்பந்தனை அனைத்து சிறுபான்மையினரின் ஏக பிரதிநிதி என்பதை எமது சகோதர இனக் கட்சியினரும் ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் இந்த நிலை பற்றி நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அடுத்து உருவாக்கப்படும் அரசில் நாமும் ஆட்சியில் இணைய வேண்டும் அதற்கு மீண்டும் ஒரு தேசிய அரசு தோற்றுவிக்கப்பட வேண்டும்.– என்றார். (ற–10)

# திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கு உடன் தீர்வு பெற்றுத்தர வேண்டும்

## இல்லாவிடில் வீதிமறியல் என்கிறார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக்

மட்டக்களப்பு, ஜூன் 8

காத்தான்குடியில் திண்மக்கழிவு அகற்றல் பிரச்சினைக்கு அதிகாரிகள் தீர்வு பெற்றுத்தரவேண்டும். தீர்வு பெற்றுத் தராத பட்சத்தில் சாலை மறியல் போராட்டங்களில் மக்கள் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் – என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

திண்மக்கழிவு அகற்றல் பிரச்சினை காத்தான்குடியில் நீண்டகாலமாக இருந்துவருகின்றது. முதலமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் இருந்த காலத்தில் காத்தான்குடியில் சாலை மறியல் போராட்டம் நடத்தி இந்தப் பிரச்சினை வெளியில் கொண்டுவரப்பட்டது. திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்காக காணிகள் பெற்றுத் தரப்படுமென அப்போதைய முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உறுதியளித்தார்.

இருந்தபோதிலும் அந்த உத்தரவாதங்கள் சரியான முறையில் பேணப்படாததன் காரணத்தினாலும் வேறு சில முரண்பாடுகள் ஏற்பட்டதனாலும் கழிவுகளைக் கொட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர் காத்தான்குடி ஆற்றங்கரையோரத்தில் தற்காலிகமாக குப்பைகளை கொட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டு அங்கு கொட்டப்பட்டு வந்தது.

தற்போது அதன் எல்லையில் வாழ்கின்ற மக்கள் சுகாதாரப்பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதால் அங்கே குப்பைகள் கொட்டுவதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு சிலர் சென்றனர். அந்த இடத்தில் குப்பைகள் கொட்டக்கூடாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து அங்கு தற்போது குப்பை கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடியபோது எதிர்வரும் புதன்கிழமைக்குள் இதற்கான ஒரு தீர்வை வழங்குவேன் என என்னிடம் கூறினார். இந்தப்பிரச்சினையை தீர்த்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான ஒரு நிலை ஏற்படும்போது இந்த ஆட்சி மாற்றத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய அரசின் மீது அதிருப்தி ஏற்பட்டு விடும்– என்றார். (ற–10)

# அனுமதியின்றி கடலட்டை பிடித்த 7 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன்8

வேலணைப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரம் இன்றி கடல் அட்டை பிடித்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.ரமேஷ்கண்ணா தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி வேலணை கடற்பிரதேசத்தில், கடற்தொழில் திணைக்களத்தின் அனுமதிப் பத்திரம் இன்றி கடல்அட்டை பிடிப்பதில் உள்ளூர் மீனவர்கள் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, தேடுதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதே குறித்த 7 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் அன்றைய தினமே, ஊர்காவற்றுறை நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் இது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கு யாழ். மாவட்ட கடற்தொழில் திணைக்களத்திடம் அனுமதி பெற்றுக் கொள்வதில் எந்தத் தடையும் இல்லை என்று உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ற–5)

# பாலமுனையில் விபத்து ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூன் 8

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பாலமுனை சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் நவீன பஜரோ ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பஜரோ ரக வாகன சாரதி மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின்போது இரு வாகனங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்த கல்முனைப் பொலிஸார் பஜரோ ரக வாகன சாரதி இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு திரும்பியிருந்தார் எனவும் கிளிநொச்சியை சேர்ந்த இவர் கல்முனையில் திருமணம் செய்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்தனர். (ற–10)

# சுயதொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவிகள்

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆயுள் வேத வைத்தியர் ஒருவரால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் குடும்பத்தினரால் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் வைத்து இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக பால் மாடு ஒன்றும்



பிள்ளைகளின் படிப்புச் செலவுக்காக மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

வவுனியா, ஜூன் 8

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் 2015ஆம் கல்வி ஆண்டின் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள கணினி உதவியாளர், தொழில் தேடுபவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கிலம், சிங்களமொழி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)


நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர் விமலாதேவி நித்தியானந்தம்



மலர்வு 03.10.1952

உதிர்வு 23.05.2011

நான்கு ஆண்டுகளென்ன நான்காயிரம் ஆண்டானாலும் உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்

அன்னாரின் நான்காம் ஆண்டு நினைவு நாள் ஆத்ம சாந்தி கிரியைகளும் அன்னதான நிகழ்வும் ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி,
வத்திராயன் வடக்கு, தாளையடி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடி தொடர்பில் நடவடிக்கை வேண்டும்

## கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 8

கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக் கிடையில் விளையாட்டுப் போட்டி நடத்தப் பட்டது. இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களின் நலன் கருதி உணவு மற்றும் குளிர்பானம் உட்பட மாணவர்களின் செலவுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் மாணவர்களுக்கான வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லையென மாணவர்களாலும், ஆசிரியர்களாலும், அதிபர்களாலும் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நிதி மோசடி தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் என்னிடம் சந்தேகம் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் என கல்வி அமைச்சரையும் உரிய அதிகாரிகளையும் கோருவதுடன்- இதன்போது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ற-10)




14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



துஷ்யந்தி
இலங்கைநாயகம்

தோற்றம்
11.09.1984

மறைவு
29.05.2001

திதி: வளர்பிறை சப்தமி

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் உயர் நிலையாய் - வாழ்ந்த எம்
அன்புத் தெய்வமே! குஞ்சே! ஆண்டு பதின்னான்கு
போனாலும் உன் இனிய நினைவு எம்மை விட்டுப்பிரியாது
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா,
அண்ணாமார் அண்ணிமார்,
மருமக்கள்.



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

திருமதி
தவமலர் சாமிநாதன்



தோற்றம்
22.04.1980

மறைவு
26.05.2015

கடந்த 26.05.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

அவர்களின் 15ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.06.2015) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 11.06.2015 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

R.சாமிநாதன்(கணவர்),
பிள்ளைகள்.



45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16 . 04 . 1968

மறைவு 25 . 04 . 2015

கடந்த 25.04.2015 இல் அகாலமரணமெய்திய எமது குடும்பத்தலைவர்

சின்னத்தம்பி திருச்செல்வம்(செந்தூர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.06.2015) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிருவேரகம்,
அல்வாய் வடமத்தி.

குடும்பத்தினர்.



ஓராண்டு நினைவாஞ்சலி



பிறப்பு
15.12.1946

இறப்பு
21.05.2014

திருமதி மங்கையர்க்கரசி
சண்முகரெத்தினம்

அவர்களுக்கு நினைவாஞ்சலி

ஆண்டு ஒன்றுதான் ஆனதம்மா நீ பிரிந்து
ஆறவில்லை இன்னும் என்னிதயம்...! ஆறாது
என் உடலில் உயிர் உள்ளவரை...!
நித்திரையில் நீவந்து நெஞ்சில் தீ மூட்டுகிறாய்!
பிள்ளைகளும் உறவுகளும் விழிநீர் தனைவடித்து
தினம் தினம் வேதனையால் வாடித் துடிக்கின்றார்..!
என்னசொல்லித் தேற்றிடுவேன் எப்படிதான் ஆற்றிடுவேன்
செல்வமே உனக்குநானும் போட்டேனே அரிசியள்ளி!
உள்ளத்தை எரிக்க வல்ல கொள்ளியை வைத்தானேயுன் பிள்ளை!
மதிப்பிட முடியாவிணைநீ, உன்னை விறகினில் அடுக்கிவிட்டோமம்மா
நெஞ்சில் எரிந்திடும் நெருப்பையாற்ற எள்ளுநீர் இறைக்கின்றோமம்மா..
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

No.06, தபால்பெட்டிச் சந்தி,
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

ஆறாத்துயரோடு கடன் முடிக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்றார், உறவுகள்.

(60526)(7.6.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி.முதியோர் அபிவிருத்தி பேரவை நிர்வாகம் தெரிவு

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி மாவட்ட முதியோர் அபிவிருத்திப் பேரவையின் புனரமைப்புக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டத்தில் பளை, கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் – அ.கனகரத்தினம், உபதலைவர்கள் – அ.ரகுபதி கா.இரட்நாயகம், செயலாளர் – இ.புவனேந்திரன், உதவிச் செயலாளர் – இ.சிறிதரன், பொருளாளர் – சி.சந்திரராசா இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களாக மூவர் தெரிவு செய்யப்பட்டனர். (ற–9)

# சம்பள உயர்வு வழங்குமாறு கோரி தோட்டத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 8

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டங்கள் நேற்று நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளர்கள், தமக்கான அடிப்படைச் சம்பளமான 450 ரூபாவை 800 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும், ஏனைய கொடுப்பனவுகள் அடங்கலாக ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.



தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுத் தருவோம் என்று உறுதி கூறியவர்கள் இன்று நழுவல் போக்கான பதில்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். முதற்கட்ட பேச்சில் எவ்விதமான நிலைப்பாடும் எடுக்கப்படவில்லை. இதனால் தொழிலாளர்கள் விரக்தி நிலையை அடைந்துள்ளனர். எனவே எங்களது நியாயமான சம்பளத்தை வலியுறுத்தி நாம் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது – என கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்ட தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் இடம் பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

## பெண்ணைக் காணவில்லை என முறைப்பாடு

மட்டக்களப்பில் பெண்ணொருவர் காணா மற்போயுள்ளார் என்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த 34 வய தான ஆறுமுகம் அரசிளம்குமாரி என்ற பெண்ணையே காணவில்லை என அவரது பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் குறித்த பெண், கடந்த 31ஆம் திகதி மட்டக்களப்பு சிவானந்தா பாடசாலையில் நடந்த வினைதிறன் காண் பரீட்சைக்கு சென்றவர் என்றும்– அதன் பின்னர் இதுவரையில் வீடு திரும்பவில்லையெனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை– ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து குறித்த பெண் பரீட்சைக்குச் செல்லவில்லைஎனத்தெரியவந்துள்ளது.(ற–10)

IELTS UK KU Education
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
021-3208342 (A.G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய, அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம் IELTS Life Skills-A2-B1
K.U Education, No 626 1/1, First Floor, K.K.S Rd, Jaffna.

# இரவில் கூக்குரலிட்டு அச்சுறுத்திய இளைஞர் குழுவினர் நையப்புடைப்பு

## மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கோயிலுக்கு சென்று வந்த பொதுமக்களை பயமுறுத்தும் விதமாக கூக்குரலிட்ட இளைஞர் குழுவினர் பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாயில் இடம்பெற்றது.

அங்குள்ள ஆலயமொன்றின் கொடியேற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட பெருமளவான பக்தர்கள் இரவு எட்டுமணியளவில் நவாலி நோக்கி வீதியால் நடந்து கொண்டுவந்திருந்த போது அவர்களை பயமுறுத்தும்விதமாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் குழுவொன்று பெருத்த குரலில் கூக்குரலிட்டது. அதனால் நடந்துவந்து கொண்டிருந்த முதியவர்கள் உட்பட பக்தர்கள் பதற்ற மடைந்தனர்.

அப்பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் இளைஞர்களது கூக்குரலைக் கேட்ட பொதுமக்கள் ஆலயத்துக்கு சென்று வந்து கொண்டிருந்தவர்களின் நகைகளை திருடர்கள் அபகரித்து விட்டார்களோ என்ற சந்தேகத்தில் உடனடியாக வீதிக்கு வந்தனர். வந்தபின்னர் சம்பவத்தை புரிந்து கொண்ட பொதுமக்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற இளைஞர்களை கையும் மெய்யுமாக பிடித்து முறையாக கவனித்ததுடன் அவர்களுடைய துவிச்சக்கர வண்டிகளை பூட்டி தடுத்து வைத்திருந்தனர்.

பின்னர் இளைஞர்களை எச்சரிக்கை செய்து அவர்களது குடும்ப உறவினர்களை அழைத்து அவர்களிடம் ஒப்படைத்தனர். (ற–103)

## அந்தோனியார் திருத்தலத்தின் நவநாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்தின் நவநாள் கொண்டாட்டம் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தினமும் திருச்செபமாலையுடன் நவநாள் திருப்பலி மாலை 5.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். எதிர்வரும் பதின்மூன்றாம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் மறுநாள் பதினான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியும் புனிதரின் ஆசிர் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ற–103)

வேலை ஆள்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு வேலை ஆள்கள் தேவை. ஆரம்பமாத வேதனமாக ரூபா12000/= வழங்கப்படும் வயது எல்லை 18 தொடக்கம் 23 வரை ஆண்கள் மட்டும்.
கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
11 A ஸ்ரான்லி, வீதி யாழ்ப்பாணம்.
தொடர்பு : 021 222 3857

நாய்க்குட்டி விற்பனை
டோமன் லபிறோ நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 516 3045 , 021 300 2333

வேலை வாய்ப்பு
FR advertising International கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
O/L ,A/L தகைமை உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
(ஆண்,பெண் இருபாலாரும்)
தொடர்பு:077 280 3773, 077 354 8006
077 208 3140

ஓம் சக்தி
ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

## வீதி, கட்டடத்துக்கு ஏ.வி.துரையப்பா பெயர் சூட்டக் கோரிக்கை

மறைந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த சமூக அபிமானி ஏ.வி.துரையப்பா ஞாபகார்த்தமாக வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதி அல்லது புதிய கட்டடங்களுக்கு பெயர் சூட்டப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பில் இயங்கும் 5 முக்கிய பொது அமைப்புக்கள் ஒன்று கூடி இந்த முடிவை எடுத்துள்ளதுடன் பிரதேச சபை தவிசாளர் சி.சி.மகேந்திரனின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர்.

மறைந்த சமூக ஆர்வலர் ஏ.வி.துரையப்பா 2006 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி வீடமைப்புத் திட்டங்களை முன்வைத்து செயற்படுத்தினார்.

அத்துடன் அவர் பண்டத்தரிப்பு நவீன சந்தை மீள் கட்டுமானம், பண்டத்தரிப்பு கடாப்புலம் அரசினர் வைத்தியசாலை மீள் கட்டுமானம் என்பவற்றுக்கான முன்மொழிவுப் பத்திரங்களை முன்வைத்து, அரசிடமிருந்து நிதிகளை தருவித்து பிரதேச அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்திருந்தார். அவருக்கு 2005 இல் சிறந்த சமூக சேவையாளன் விருதை மானிப்பாய் பிரதேச சபை வழங்கிக் கௌரவித்திருந்தது.

இவரது மறைவுக்கு பின்னர் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் ஒன்று கூடி ஏ.வி.துரையப்பாவின் பன்முக சேவைகளுக்கு கௌரவமளிக்கும் முகமாக வீதி, பொதுக்கட்டடங்களுக்கு மறைந்த ஏ.வி.துரையப்பாவின் பெயரைச் சூட்டி உதவுமாறு வலி.தென்மேற்கு பிரதேசசபையின் (மானிப்பாய்) தவிசாளர் சி.சி.மகேந்திரனை கோரியுள்ளார். (ற–50)



metecno The Specialist

METECNO LANKA IS A SUBSIDIARY OF METECNO GROUP, ONE OF THE LARGEST PANEL MANUFACTURES IN THE WORLD. METECNO LANKA PROVIDES THE FINEST SOLUTIONS TO THE CONSTRUCTION INDUSTRY IN COATED STEEL ROOFING, WALL CLADDING, ACCESSORIES & SANDWICH PANELS.

We invite applications from dynamic team players with excellent interpersonal skills and proven records with under mentioned requisites, preferably a male below 28 years to fill the following position.

WALK IN INTERVIEW

SALES COORDINATOR - JAFFNA BRANCH

- Passed G.C.E. (A/L) Examination.
- Good command in English both spoken and writing.
- Previous experience in the relevant field and ability to speak in sinhala will be an added advantage.

An attractive remuneration package with perquisites awaits the right candidate.
Please call over to our Jaffna Branch on Thursday 11th June 2015 at 03.00pm.

METROOF Total Roofing Solutions
METECNO LANKA [PVT] LTD.
No. 734, Hospital Road, Jaffna.
HOTLINE : 021 5 672 672 | EMAIL : methrd@metroof.lk

வேலைவாய்ப்பு
விமான நிலையம்
கப்பலில் விமானத்தில் வேலைசெய்ய விருப்பமா?
துறைமுகம் விமானநிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாகத் தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம் / விமான நிலையங்களில் தேவை)
தொடர்பு: 077 292 6935
உற்பத்தி துறை
மஞ்சி, மலிபன், நெஸ்லே, சிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைகளுக்கு ஆண்/பெண் தேவை. 18-35 35000/= உயர் சம்பளம் இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு: 077 292 6468
சாரதிகள்
துறைமுகம் விமானநிலையத்திற்கு மென்ரக/கனரக சாரதிகள்/கன்டேனர் சாரதிகள்/ சாரதி உதவியா ளர்கள் நாடு முழுவதிலும் வேலைக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் தேவை. 35000 - 45000 உயர்ந்த சம்பளம்.( OTஉட்பட விசேட சலுகைகள்)
தொடர்பு: 076 707 7084

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற நவாலி வடக்கு, மானிப்பாயை சேர்ந்த நபரொருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கடந்த வியாழக் கிழமை கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு ஐம்பதாயி ரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலும் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டது. (ற-103)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை முத்துக்குமார்

(பொன்னுத்துரை)



மண்ணில் 12 . 01 . 1941

விண்ணில் 06 . 06 . 2015

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும்,முக்கொம்பன் பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை முத்துக்குமார் 06.06.2015 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும்,கற்பகத்தின் அன்புக்கணவரும், நாகேஸ்வரி, நிர்மலா,நந்தினி(லண்டன்),கமலினி, குகானந்தன் (பிரான்ஸ்), குமுதினி ஆகியோரின் அன்புத்தந்தையும் மனோகரன், ஜெகதீஸ்வரன், திருச்செல்வம் (லண்டன்) ரவீந்திரன் ,கிருபாலினி(பிரான்ஸ்), அருள்சீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நதிகா,கஜமுகன் லக்ஷிகா(பிரான்ஸ்), லக்ஷனா, தமிழ்ச்செல்வி,கௌதீசன்,தாட்சாயினி,அனோஜன், இசைநங்கை, சிவநதினி, டிதர்சன்(லண்டன்), சகீனா(லண்டன்), குகானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.06.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது முக்கொம்பன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முக்கொம்பன் அஞ்சடிவான் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முக்கொம்பன்,
பூநகரி

தகவல்
குடும்பத்தினர்.

# அத்துமீறி குடியேறிய சிங்களவரை வாக்காளராகப் பதிவதற்கு முயற்சி

## கடும் கண்டனம் தெரிவித்துள்ளார் பொன்.செல்வராசா எம்.பி.



மட்டக்களப்பு, ஜூன் 8

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள கெவிளியாமடுவில் அரச காணிகளில் அத்துமீறி குடியேறியுள்ள அம்பாறை மாவட்ட சிங்களவர்களை மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்களாகப் பதிவு செய்யும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தியும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா அரச அதிபர் சறோஜினிதேவி சார்ள்ஸை தொடர்பு கொண்டு தனது ஆட்சேபத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:–

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் அத்து மீறிக் குடியேறியவர்களையும் வாக்காளர்களாக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த அத்து மீறிகள் ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக உள்ளார்கள்.

அவ்வாறான சூழ்நிலையில் அரச காணிகளை அபகரிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களை இந்த மாவட்டத்தில் வாக்காளராகப் பதிவு செய்வதை ஏற்க முடியாது.

சட்ட விரோதமாக அரச காணிகளில் தங்கியுள்ளவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை அத்துமீறிகளுக்குச் சாதகமாகக் கூட அமைந்துவிடக்கூடும். நாட்டில் ஓர் இடத்தில் வாக்காளராக பதிவு செய்தால் போதுமானது. அப்படி அவர்கள் தங்களைவாக்காளர்களாக பதிவு செய்வதென்றால் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்திருந்த அவர்களின் சொந்த மாவட்டத்தில் பதிவு செய்ய முடியும்.– என்றார்.

இது குறித்து அரச அதிபர் திருமதி சறோஜினிதேவி சார்ள்ஸ் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா இது தொடர்பான முறைப்பாட்டை எனக்கு வாய்மொழி மூலம் தெரிவித்துள்ளார். நான் எழுத்து மூலம் அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். எழுத்து மூலம் கிடைத்த பின்னரே தேர்தல் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இது பற்றிய விவரங்களை அறிய முடியும். – என்றார். (ற-10)

# வெளிச்சமின்றி சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 8

வெளிச்சமின்றி சைக்கிள் செலுத்தியதுடன், முன்னே பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்திய சைக்கிளோட்டிக்கு நீதிமன்றில் அபராதமும் விதிக்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு நட்ட ஈடு வழங்குமாறும் உத்தரவிப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் மதுபோதையில் வெளிச்சம் மற்றும் வாகன இலக்கத் தகடு ஆகியவை இல்லாத நிலையில் சைக்கிளை செலுத்தி மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக பொலிஸாரால் சைக்கிளோட்டிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா அபராதமும் பாதிப்புக்குள்ளான மோட்டார் சைக்கிளோட்டிக்கு 12 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ற-9)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனத்துக்கும் அளவுக்கு மேலாக வாகனத்தில் ஆள்களை ஏற்றிச் சென்ற வாகனத்துக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவை தொடர்பாகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், 'எல்ப்' வாகனத்தில் மூன்று பேர் பயணித்தமைக்காக இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. வாகனத்தில் பயணித்த மூன்றாவது நபர் பாடசாலை மாணவன் என்பதால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (ற-9)

# மரண அறிவித்தல்

## ஜேமிஸ் பிரான்சிஸ் சேவியர் (துரைசிங்கம்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேமிஸ் பிரான்சிஸ் சேவியர் (துரைசிங்கம்) நேற்று (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேமிஸ் - எவிசேனியா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான, பிலிப்பு - இஷபெல் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற லூர்த்தம்மாவின் (தங்கமணி) அன்புக் கணவரும், சிசிலியா (நல்லபிள்ளை), காலஞ்சென்ற என்றி (குணம்) மற்றும் றெஜீனா (ராசாத்தி), இராஜேஸ்வரி (மாணிக்கம்), காலஞ்சென்றவர்களான பொன்கலன், புஸ்பம், இராஜப்பு மற்றும் அந்தோனிப்பிள்ளை, சந்திராதேவி, சந்திரதாஸ் ஆகியோரின் மைத்துனரும், யேசுராசா (மாஸ்ரர்), காலஞ்சென்ற எட்வேட்ராசா (கலோ) மற்றும் ஜெயராசா (ஜெயம்), மேரி இஷபெல் (லில்லி), யோகராசா (சேர், ஜேர்மனி), ஜக்குலின் (கொலின்), றெஜிவிஜிலா (விஜி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிலோமினா (ஆசிரியை, மு/ஆனந்தபுரம் வித்.), இலங்கராணி, ஜெயரூட் (யோகம்), காலஞ்சென்ற செல்வநாதன் (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - இலங்கைவங்கி) மற்றும் சுவெற்றா (ஜேர்மனி), மோகன்ராஸ் (மேலதிக அரசாங்க அதிபர்- முல்லைத்தீவு), யோகராசா (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமனும், ரவீந்திரகுமார் - சுமணா, நிரஞ்சன் - சுபீனா, மதன் - டயானா, றியானா, நீயூசன், காலஞ்சென்ற அகல்யா மற்றும் நீரூஜா, நிரூஜன், காலஞ்சென்ற றெக்ஷன் மற்றும் ரூட்சன், ஜொய்சன், மெதுனா, விதுஷன், நிரோஷன் - கஸ்தூரி, தினேஷன், சுபேஷன், தேனுஷன், வினூஷன், மேரிஜானுஷா, ஸ்ரெபனி, ஜெசிக்கா, றொபிற்ரன், ரதன், சுபேஸ்கா, செரோம், சம்சிகன், நிம்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், கீரன், துளசி, மிதுனன், கவி, தனு, நிஸ்மிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்..

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (09.06.2015) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு இரணைப் பாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புனித செபஸ்ரியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இரணைப்பாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும

**சேவியர் ஸ்ரோர்ஸ், தொ.பே: 077 579 2672, இரணைப்பாலை. 077 934 1966, 077 100 6943**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(60531) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீட்டா ரோபோக்கள் உருவாக்கம்


Cheetah எனப்படும் நவீன ரக ரோபோவினை MIT நிறுவனம் சில காலத்திற்கு முன்னர் வடிவமைத்து அறிமுகம் செய்திருந்தது. போர் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பிரதான நோக்கத்துடன் அறிமுகம் செய்யப்பட்டிருந்த இந்த ரோபோவில் தற்போது மேலும் சில புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன.
அதாவது தடைகள் இருப்பின் அவற்றைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வேகமும் மணிக்கு 28.3 கிலோமீற்றர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# அசத்தலான அம்சங்களுடன் Huawei P8 Lite



தரமான ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வரும் Huawei நிறுவனம் Huawei P8 Lite எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை வடிவமைத்துள்ளது.
பாங்கொங்கில் இடம்பெற்ற Premium South East Asia (SEA) நிகழ்வில் இந்தக் கைபேசி முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இந்தக் கைபேசியானது 5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.5Ghz வேகத்தில் செயல்படக் கூடிய 4dbit HiSilicon Kirin 620 SoC Processor, பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளன. இவற்றுடன் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளதுடன், Android 5.0.2 Lollipop இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாகவும் உள்ளது.

# நோயை வரும்முன் அறியும் நவீன கருவி



நமது உடலில் மாரடைப்பு, நீரிழிவு மற்றும் புற்றுநோயை வரும் முன் அறிந்து கொள்ளும் நவீன கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நவீன கருவியை சுவிஸ்லாந்தைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 14 மில்லி மீற்றர் நீளம் கொண்ட இந்த சிப்பை தோலின் உட்புறத்தில் ஒரு சென்ரி மீற்றர் ஆழத்தில் வைத்து தைத்துவிட்டால் மாரடைப்பு ஏற்படு வதற்கான அறிகுறிகள் தோன்றுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னதாகவே இது தொடர்பான எச்சரிக்கையை நமக்கு அளித்துவிடும். இந்த சிப்புடன் இணைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப சாதனத்தின் உதவியுடன் இந்த தகவல் ப்ளூருத் வாயிலாக நமது குடும்ப வைத்தியரின் தொலைபேசி அல்லது கணினிக்கு உடனடியாகச் சென்று சேர்ந்து விடும்.
ஒருநொடி தவறாமல் நமது இரத்த சுழற்சியில் ஏற்படும் மாற்றத்தை வெகு துல்லியமாக பதிவு செய்யும் இந்த நவீன கருவி, இரத்தத்தில் சுரக்கும் அமிலம் மற்றும் இரத்தத்தின் வெப்பத்தை தொடர்ந்து அளவீடு செய்கின்றது. வைத்தியர்கள் அவ்வப்போது இரத்தப் பரிசோதனையின் மூலம் தேடி கண்டுபிடிக்கும் இரத்த குளுக்கோஸ் மற்றும் கொழுப்பையும் இது மிகவும் நுணுக்கமாக மதிப்பிட்டு விடுவதால், அடிக்கடி பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்லும் செலவும், நேரமும் மிச்சமாகும்.
மாரடைப்பு மட்டுமன்றி, நீரிழிவு மற்றும் புற்றுநோயின் ஆரம்பகால அறிகுறிகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் இந்த நவீன கருவி உறுதுணையாக இருக்கும் என தெரியவந்துள்ளது.

# டெங்கு தொற்றை கட்டுப்படுத்த மக்களால் பற்றைகள் அழிப்பு

தென்மராட்சி, ஜூன் 8
மட்டுவில் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் என்று அடையாளம் காணப்பட்ட பகுதியில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டி அழிப்பதில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினால் கடந்த 4 ஆம் திகதி முதல் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நி லையில், மட்டுவில் பிரிவு பொது சுகாதார பரிசோதகரும் பொலிஸாரும் இணைந்து மட்டுவில் பிரிவில் முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்ட பற்றைகளை அழிக்குமாறு குறித்த காணிகளில் 15 நாள் காலக்கெடுவுடன் அறிவித்தல்களை ஒட்டியுள்ளனர்.



அதனையடுத்து அங்கு பற்றைகளை அழிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை வைத்திருக்கும் குடியிருப்பாளர்கள், காணி களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவரின் 'மலைத்தென்றல்'





வவுனியா, ஜூன் 8
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நடத்திய தமிழர்களின் கலை கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களையும் சிறப்புக்களையும் வெளிக்காட்டும் மலைத் தென்றல் நிகழ்வு மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை ஊவா மாகாண நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலை கலாசாரப் பீடாதிபதி பேராசிரியர் சி.மௌனகுருவும், கௌரவ விருந்தினர்களாக ஊவா மாகாண அமைச்சர் வடிவேல் சுரேஷும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி ஜி.சந்திரசேனவும் சிறப்பு விருந்தினராக மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளும் கலந்து கொண்டனர். அத்துடன் பல்கலைக் கழக மாணவர்கள், கலை ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
மலைத்தென்றல் நிகழ்வின் சிறப்பு அம்சங்களாக பரதநாட்டிய நிகழ்வு, இசை நிகழ்ச்சி, சரித்திர நாடகம், தமிழ் ஆடல் மரபுகள், மற்றும் மலைத் தென் றல் நிகழ்வைப் பிரதிபலிக்கும் புத்தக வெளியீடு என்பன அமைந்திருந்தன. (ந-402)

# அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் மீது தாக்குதல்

மஹரகமவிலிருந்து மாத்தறை வரையான தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் அதிசொகுசு பஸ் ஒன்றின் மீது மஹரகம பிரதேசத்தில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அந்த பஸ்ஸின் உரிமையாளர் மீது நாரஹேன் பிட்டி போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு முன்னால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
பஸ் மீதான தாக்குதல் காரணமாக அதன் உரிமையாளருக்கு 7 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், தாக்குதலைத் தடுப்பதற்கு முயன்ற பௌத்த மதகுரு ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் அவரும் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். தெற்கு அதிவேக நெடுஞ்சாலையூடான பஸ் போக்குவரத்து தொடர்பில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினையே இந்தத் தாக்குதல்களுக்கு காரணமாகியுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் கூறினர். (ந)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
முத்துத்தம்பி ஏரம்பு
(இளைப்பாறிய நில அளவையாளர்)



திதி : ஸப்தமி 08.06.2015
தோற்றம்
20.10.1930
மறைவு
21.05.2014
பாசத்தின் திருவுருவே
நேசத்தின் உறைவிடமே
நெடுந்தூரம் சென்றுவிட்டீர்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உந்தன்
நினைவுகள் என்றென்றும் அழியா
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
077 350 4006 164/78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி இளவரசியுடன் குட்டி இளவரசர்

லண்டன்,ஜூன் 8

பிரிட்டனின் குட்டி இளவரசி சார்லட்டை அவரது சகோதரர் இளவரசர் ஜோர்க் தனது மடியில் வைத்து கொஞ்சுவது போன்ற புகைப்படங்கள் இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் இளவரசி காத்ரீன்தம்பதியினர் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



பிரிட்டனின் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் இளவரசி காத்ரீன் தம்பதிக்கு கடந்த மே மாதம் பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்தக் குட்டி இளவரசிக்கு அவர்கள் சார்லட்எலிசபெத்டயானா என்று பெயரிட்டனர்.

இளவரசி சார்லட்டின் புகைப்படம் அவ்வப்போது வெளியானாலும் அவரது அண்ணன் இளவரசர் ஜோர்ஜுடன் இருப்பது போன்ற ஒளிப்படம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் இளவரசி சார்லட்டை அவரது சகோதரர் இளவரசர் ஜோர்க் தனது மடியில் வைத்து கொஞ்சுவது போன்ற ஒளிப்படங்கள் இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் இளவரசி காத்ரீன் தம்பதியினரின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் மற்றும் இன்ஸ்ட்ராகிராம் சமூகவலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் ஒளிப்படங்களை இரண்டு வாரங்களுக்கு முன்பு இளவரசி காத்ரீன் எடுத்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் இந்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பலத்த வரவேற்பையும் பெற்றுள்ளன. (ஐ)

# மொட்டை போட்டார் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை,ஜூன் 8

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுதலை பெற்றதற்காக தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று திருப்பதியில் முடிக் காணிக்கை செலுத்தியுள்ளார்.



சொத்துக் குவிப்பு வழக்கில், ஜெயலலிதாவுக்குக் கடந்த வருடம் சிறைத் தண்டனை மற்றும் தண்டம் விதிக்கப்பட்டதையடுத்து, தமிழக அமைச்சர்கள் உள்ளிட்ட அ.தி.மு.கவினர் கோயில்களில் ஜெயலலிதா விடுதலைப் பெற வேண்டி சிறப்பு பூசைகள் செய்து வழிபட்டனர்.

இந்த நிலையில், ஜெயலலிதா பிணை பெற்று, மேல்முறையீடு செய்து வழக்கிலிருந்து விடுதலை பெற்று தமிழக முதல்வராக மீண்டும் கடந்த மாதம் பதவி ஏற்றார். இதையடுத்து ஜெயலலிதா விடுதலை பெற்றதற்காக அ.தி.மு.க. பிரமுகர்கள் கோயில்களில் தங்களின் நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர்.

இந்த நிலையில் நேற்று திருப்பதி வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் தமிழக நிதி மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மொட்டை அடித்து நேர்த்திக் கடனைச் செலுத்தியுள்ளார்.(ஐ)

# மெர்ஸ் வைரஸால் 50 பேர் பாதிப்பு

சியோல்,ஜூன் 8

தென் கொரியாவில் மெர்ஸ் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.



தென் கொரியாவில் உயிர்க் கொல்லி வைரஸான மெர்ஸ் வேகமாகப் பரவி வருகிறது. அந்த வைரஸ் தாக்குதலால், இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக, அந்த நாட்டின் சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில்; தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தென் கொரியாவில், மேலும் 9 பேருக்கு மெர்ஸ் வைரஸ் பரவியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, அந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது. வைரஸ் தொற்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஆயிரத்து 660 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெர்ஸ் ஃவரஸ் பாதிப்பு காரணமாக, அந்த நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான பாடசாலைகள் மூடப்பட்டன. வெளியூர்களுக்கு செல்ல திட்டமிட்டிருந்த பலரும்,தங்களுடைய பயணத்தை ரத்து செய்தனர்.

தென் கொரியாவில் முதல் முறையாக மெர்ஸ் வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்ட 68 வயது முதியவரும், அவருடைய மனைவியும் குணமடைந்து வீடு திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தென் கொரியாவில் மெர்ஸ் வைரஸ் பரவல் குறித்த தகவல்களைத் திரட்டுவதற்காக வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை அந்த நாட்டுக்கு அனுப்பப் போவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

# இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்

சிட்னி,ஜூன் 8

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இரசாயன் ஆயுதங்கள் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஆஸ்திரேலியா வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூலி பிஷப் கூறியுள்ளார். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்காக ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நீல் பிரகாஷ் என்பவர் மீது அந்த நாட்டின் அரசு பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இதனை ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் அறிவித்த வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூலி பிஷப் உள்நாட்டு போர் நடைபெற்று வரும் சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளாகவே இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த இரசாயன ஆயுதங்களைக் கைப்பற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் முயற்சிப்பதாகக் குறிப்பிட்ட அவர் சொந்தமாக இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதற்காக தீவிரவாதிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். இதற்காக குளோரின் பயன்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்றவர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தெரிவு செய்து வருவதாகவும் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

இரசாயன ஆயுதங்கள் மட்டுமன்றி உயிர்தொழில்நுட்ப ஆயுதங்களைத் தயாரிக்கவும் தீவிரவாதிகள் முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உலகிற்கே பேராபத்தாக முடியும் இது போன்ற செயற்பாடுகளைத் தடுக்க உலக நாடுகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜூலி பிஷப் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# வங்கதேசத்தில் மோடிக்கு உற்சாக வரவேற்பு





டாக்கா,ஜூன் 8

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் முறைப் பயணமாகவங்கதேசம்சென்றுள்ளனர்.

வங்கதேச தலைநகர் டாக்கா விமான நிலையத்தில் பிரதமர் மோடியை வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா நேரில் சென்று வரவேற்றார். பின்னர் அரச முறைப்படி வழங்கப்பட்ட இராணுவ வீரர்களின் அணி வகுப்பு மரியாதையும் பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டார்.

இந்தப் பயணத்தில், பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் உடன் இணைந்துள்ளார்.

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு குறித்து மோடி கூறுகையில்; உற்சாக வரவேற்பு அளித்த வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா மற்றும் அகர்தலா இடையேயும், டாக்கா – ஷில்லாங் – குவாஹாட்டி இடையேயும் பஸ் இயக்கத்தை பிரதமர் மோடி, மம்தா பானர்ஜி மற்றும் வங்கதேச பிரதமர் ஹசீனா இணைந்து தொடங்கி வைத்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்டநாள் பிரச்சினையான தீஸ்தா நதிநீர் பங்கீடு குறித்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது. மேலும், மோடி தனது பயணத்தில், வங்கதேச ஜனாதிபதி முகமது அப்துல் ஹமீதையும் சந்தித்துப் பேசினார்.

**41 வருட சிக்கல் முடிவுக்கு**

இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே 4 ஆயிரத்து 96 கி.மீ. தூர எல்லைப் பிரச்சினையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதால் 41 வருட கால சிக்கல் முடிவுக்கு வந்துள்ளளது.

இதன் மூலம் குடியுரிமை இல்லாமல் தவித்து வந்த 50 ஆயிரம் பேருக்கு குடியுரிமை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதே போன்று வங்கதேசத்தில் உள்ள மோங்லா மற்றும் சிட்டகாங் துறைமுகத்துக்கு இந்திய சரக்குக் கப்பல்களை அனுமதிக்கவும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை இந்தியாவிலிருந்து சரக்குகளை சுமந்து செல்லும் சரக்கு கப்பல்கள் சிங்கப்பூரில் அவற்றை தரையிறக்கும். பின்னர் சிங்கப்பூரில் இருந்து வேறொரு கப்பல் மூலம்அந்தச் சரக்குகள் வங்கதேசத்துக்கு அனுப்பிவைக்கப்படும். தற்போது மோங்லா மற்றும் சிட்டகாங்துறை முகங்களுக்குள் நுழைய இந்திய கப்பல்களுக்கு அனுமதி கிடைத்திருப்பதால், இனி நேரிடையாகவே இந்தியாவிலிருந்து பங்களாதேஷத்துக்கு சரக்குகளைக் கொண்டு செல்லமுடியும். இதுவரை சரக்குகளை எடுத்துச் செல்ல 30 முதல் 40 நாள்களுக்கு மேல் ஆன நிலையில், இனிமேல், ஒரே வாரத்தில் கொண்டு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகத்தலைவர்கள் பங்குபற்றும் ஜி–7 உச்சி மாநாட்டில் பாதுகாப்பு மற்றும் பெண்கள் உரிமையை வலியுறுத்தக்கோரி ஜேர்மனில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## சவூதி அரேபியா மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

சனா,ஜூன் 8

யேமன், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் முதல் முறையாக ஹவுதி ஏவுகணையை வழிமறித்து சவூதி அரேபியா வீழ்த்தியுள்ளது.

யேமன் நாட்டில் உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்துள்ளது. இதையடுத்து அங்கு அரசுக்கு எதிராக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தீவிர போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்துள்ளது.

சவூதி அரேபியா தலைமையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய நாடுகளின் கூட்டுப்படைகள் வான்தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அவர்கள் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து 2 மாதங்களாகக் கடுமையான போர் நடத்தி வருகின்றனர். சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் யேமன் கிளர்ச்சியாளர்கள் தலைநகர் சனா பகுதியில் பதுக்கி வைத்துள்ள ஆயுதக் கிடங்குகளை நோக்கி வான் தாக்குதல் நடத்தி வந்தன.



இதனால் கடும் கோபம் கொண்ட ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவூதி அரேபியா மற்றும் அதன் கூட்டுபடைகளில் உள்ள நாடுகளின் மீது வான் தாக்குதல் நடத்த இருப்பதாக எச்சரித்து இருந்தனர். எனினும் கூட்டுபடைகள், கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் போரில் முதல் முறையாக சவூதி அரேபியா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள்'ஸ்கட் ஏவுகணையை பயன்படுத்தித் தாக்குதல் தொடுத்தனர். கிளர்ச்சியாளர்கள் ஏவுகணையை சவூதியின் தென் பகுதியான கமீஸ் அல் முஷாய்ட் நகரை நோக்கி வீசினர்.

அந்தப் பகுதியில் மிகப்பெரிய விமான தளம் ஒன்று உள்ளது. அதனால் அதிர்ச்சியடைந்த சவூதி அரேபியா அந்த ஏவுகணை தாக்குதலை முறியடிக்க 'பேட்ரியாட்' ஏவுகணையை அனுப்பியது. சவூதி அரேபியா அனுப்பிய ஏவுகணை, கிளர்ச்சியாளர்களின் ஏவுகணையைப் பாதியிலே வழிமறித்து தாக்கி வீழ்த்தியது. இதனால் சவூதி மீதான கிளர்ச்சியாளர்களின் பெரும் தாக்குதல் முறியடிக்கப்பட்டு விட்டது. இந்தத் தகவல்களை சவுதி அரேபிய கூட்டுப்படைகள் உறுதிப்படுத்தின. (ஐ)

## சுவீடனில் பறவைக்கும் சாவுத் தண்டனை

ஸ்டாக்ஹோம்,ஜூன் 8

சுவீடன் நாட்டில் இளைஞர் ஒருவர் வளர்த்து வந்த கடல் பறவையைக் கைப்பற்றிய நகராட்சி மன்ற அதிகாரிகள் அதற்கு சாவுத் தண்டனை வழங்கியுள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுவீடனில் நோரா என்ற நகரைச் சேர்ந்த நபர் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிறந்து சில தினங்களேயான கடல் பறவை ஒன்றைப் பிடித்து வந்து ஆசையாக வளர்த்து வந்துள்ளார்.

அந்த நபர் குளியல் அறை யில் வைத்து இரண்டு வருடங்களாக அதற்குத் தேவையான அனைத்து உணவுகளையும் வழங்கி வளர்த்து வந்துள்ளார். இந்த நிலையில் அவர் கடல் பறவை வளர்த்து வரும் தகவல் அந்த நகரின் நகராட்சி மன்ற அதிகாரிகளுக்குத் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து அவரது வீட்டைச் சோதனை செய்த அதிகாரிகள், குளியல் அறையில் அந்த பறவையைக் கைப்பற்றினர்.

பறவையைப் பரிசோதனை செய்த அதிகாரிகள், அதனைக் கொன்று விடுமாறு உத்தரவிட்டனர். அதிகாரிகளின் உத்தரவால் அதிர்ச்சி அடைந்த அந்த நபர், பறவைக்குத் தேவையான மீன்கள், விற்றமின் அடங்கிய தானிய உணவுகள் அனைத்தும் வழங்கியதாகவும், வீட்டுக்குள் பறக்கவும் விட்டதாகவும் கூறினார். அதற்குப் பதலளித்த அதிகாரிகள், பறவை சிறு வயது முதலே ஒரு அறைக்குள்ளேயே அடைக்கப்பட்டுள்ளதால், அதற்கு இயற்கையாக உணவைத் தேடிக் கொள்ளும் திறன் இருக்காது. மேலும், அந்தக் கடல் பறவை வெளியில் பறக்காத காரணத்தால் வெளிச்சூழல் அதற்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும் என்பதால், அதனை கொன்று விடுவதே நல்லது எனத் தெரிவித்துள்ளனர். (ஐ)



## ரஷ்யாவைப் பார்த்து பயப்பட வேண்டாம்

### மேற்கத்திய நாடுகளுக்கு புடின் அறிவுரை



எங்களைப் பார்த்து மேற்கத்திய நாடுகள் பயப்படத் தேவையில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரையினில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் ரஷ்யா மறைமுகமாகக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாக மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும் ரஷ்யா போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இத்தாலியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், உலக மக்களின் மனநிலையில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெரிய அளவிலான போரை மக்கள் விரும்ப மாட்டார்கள். எனவே மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை பார்த்துப் பயப்படத் தேவையில்லை. எங்களுக்கு போரில் ஈடுபடுவதை விட பல முக்கியமான வேலைகள் உள்ளன. மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவனால் தான் நேட்டோ நாடுகள் மீது ரஷ்யா போர் தொடுக்கும் என்பது போன்ற கற்பனைகளைச் செய்ய முடியும் என்று கூறியுள்ளார். (ஐ)

## மலாலாவை தாக்கியவர்கள் ரகசிய விடுதலை

இஸ்லாமாபாத்,ஜூன் 8

அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ள மலாலா யூசுப்சாய் மூன்று வருடங்களுக்கு முன்னர்; தலையில் சுடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 பேரில் 8 பேர் ரகசியமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் கல்வி கற்பது இஸ்லாத்துக்கு முரணானது என்ற கடும் போக்கு சிந்தனையுடைய தாலிபான்கள், ஸ்வாட் பள்ளத்தாக்கில் இருந்த பெண்கள் பாடசாலைகளுக்குத் தடை விதித்தனர். அதை எதிர்த்து பாடசாலைக் கல்விக்காக போராடியதால் மலாலா தலையில் சுடப்பட்டார்.

மேற்கத்திய மருத்துவ சிகிச்சைகளால் உயிர் பிழைத்து [illegible] இங்கிலாந்தில் வாழும் [illegible] தொடர்ந்து பெண்களின் கல்விக்காகப் போராடி வருகிறார். அவருக்கு கடந்த வருடம் அமைதிக்கான நோபல் [illegible] அந்தப் பரிசை பெற்ற [illegible] மிகவும் இளையவர் அவர்தான். அந்தளவுக்கு சர்வதேச கவனத்தை



மலாலா பெற்றும் அவரைச் சுட்டவர்கள் தொடர்பான வழக்கில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்த குற்றச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் 10 பேரைக் கைது செய்திருந்தனர். அவர்களுக்கு 25 வருடங்கள் சிறை தண்டனை வழங்கப்பட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் முதலில் தெரிவித்திருந்தனர்.

ஆனால் விசாரணைக்குப் பின்னர் இரண்டு பேருக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டதாகவும் மற்றவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் தெரியும் வகையில் வெளிப்படையாக [illegible] பெறாத, இந்த விசாரணை [illegible] நம்பகத்தன்மையைப் பற்றிய [illegible] களும் எழுந்துள்ளன. ஆரம்ப[illegible], இந்த விசாரணை நீதிமன்ற[illegible] அல்லாமல் ஒரு இராணுவத்[illegible]தில் நடைபெற்றது.

இந்த வழக்கில் கைதுசெய்ய[illegible] வர்கள் எப்படி எந்த இடத்தில் [illegible] செய்யப்பட்டார்கள், அ[illegible] இந்த வழக்கில் எவ்வ[illegible] தொடர்புபட்டுள்ளார்கள் [illegible] குறித்த எத்தகைய விவரங்[illegible] பாகிஸ்தானிய அதிகாரி[illegible] தெளிவாக விளக்கப்படவி[illegible]. தீர்ப்பு வெளியானவுடன் [illegible] குறித்த அறிக்கை ஒன்றை [illegible] யிட முதலில் ஒப்புக்கொ[illegible] இராணுவ செய்தித் தொடர்[illegible] பின்னர் அதிலிருந்து பின்[illegible] விட்டார். என்பது குறிப்பி[illegible] கது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவு மக்களின் குறைகளுக்கு தீர்வுதான் என்ன?

● வந்தியத்தேவர்

ஊருக்குள் சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டாலும் அவை முழுமை பெற்றதாக இல்லை என்பது நெடுந்தீவு மக்களின் மனக்குறையாகக் காணப்படுகின்றது. மின்சாரம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலமாகப் பெரும்பாலான பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கிழக்கு ஆலமாவன கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்காததால் மக்கள் மனக்குறையுடன் காணப்படுகின்றனர். குடிதண்ணீர் வழங்கலும் அவர்களைத் திருப்திப்படுத்தவில்லை. இவர்கள் நல்ல குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

வீதிகளும் பெரும்பாலான பகுதிகளில் மோசமாகவே காணப்படுகின்றன. தீவின் பிரதான வீதியின் ஒரு பகுதி மோசமான பாதிப்புக்குள்ளாகிக்கிடக்கின்றது. அந்தோனியார் கோவில் வீதியும் சேதமடைந்துள்ளது. இவற்றைச் செப்பனிட வேண்டிய அதிகாரிகள் மௌனம் காப்பதாக மக்கள் கூறுகின்றனர். தற்போது தார்போடக் கூடிய நிலையில் உள்ள ஆலமாவனப் பிள்ளையார் கோவில் வீதியை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளாததால் எதிர் வரும் மழை காலத்தில் தற்போது போடப்பட்டுள்ள மண்கரைந்து மக்களோ வாகனங்களோ போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டு விடும் எனப் பொதுமக்கள் கூறுகின்றனர். வீதி புனரமைப்புக்களைக் கவனிக்க வேண்டிய திணைக்களங்களுக்கு குறிப்பிட்ட வீதிகளின் தற்போதைய நிலை என்ன என்பதே தெரியவில்லை என்கிறார்கள் மக்கள். உள்ளூரில் பஸ்சேவைகளும் சீராக இல்லை என்பதுடன் பஸ்களின் பராமரிப்பும் உரிய முறையில் மேற் கொள்ளப்படுவதில்லையெனவும் இ.போ.ச இது தொடர்பான உத்தியோகத்தர்களை அனுப்பி பஸ் வண்டிகளின் சேவையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரி விக்கின்றனர். கடல் போக்குவரத்தும் சீரில்லாத நிலையிலேயே காணப்படுகிறது. படகுகள் பழுதடைந்தால் அவற்றைத் திருத்தியமைத்துச் சேவையைத் தொடர்வதில் காலதாமதங்கள் நிலவுகின்றன. வடதாரகை கடந்த பத்து தினங்களுக்கும் மேலாகப் பழுதடைந்து காணப்படுகின்றது. இந்தப்படகின் சுக்கான் சேதமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இந்தப் படகை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்படுவதாக அடிக்கடி பேசப்பட்டாலும், இன்னமும் அது கடற்படையினரிடமிருந்து கைமாறியதாகத் தெரியவில்லை. வடதாரகையின் சேவை தற்போது இடம் பெறுவதில்லை என்பதால் வெறுமனே நேர அட்டவணையைப் பார்த்து விட்டு ஏதோ அகப்படும் படகில் ஏறிக்கொள்ளுகின்றார்கள் பயணிகள். இந்தச் சிறிய குறைபாடுகளை விரைந்து சீர் செய்யக்கூடிய ஆற்றல் திணைக்களங்களுக்கு இருந்த போதிலும் இவற்றைப் பெரிய திட்டங்களாகக் காட்டுவதற்கு அவை முயற்சிக்கின்றன.

தற்போது துறைமுகத்தை ஆழப்படுத்தும் செயற்றிட்டம் இடம்பெறுகின்றது. கடந்த காலத்தில் கட்டுமரத்தின் உதவியுடன் துறைமுகப் பாலத்தை அண்டிய ஒரு பகுதியில் இந்தச் சேறு தோண்டும் நடவடிக்கைகள் இடம் பெற்று வந்தன. அது பயனற்றது என்பதால் இடைநிறுத்தப்பட்டு தற்சமயம் பைக்கொ எனப்படும் பெரிய இயந்திரத்தின் உதவியுடன் துறைமுகப்பகுதியை . முழுமையாக ஆழப்படுத்தும் பணிகள் இடம் பெறுகின்றது. துறைமுகத்தில் தற்போது கடல் ஆழம் எட்டு அடிவரையாக உள்ளது. முன்னர் துறைமுகத்தில் படகுகள் செல்லும் பாதை மட்டுமே சுமார் நான்கு முதல் ஐந்து அடிவரை நீர்மட்டம் காணப்படும் . கடல் வற்றுகின்ற காலங்களில் இது பெருமளவு குறைந்து படகுகளை எடுக்க முடி யாத நிலை ஏற்படும்.

இந்த நிலையில் துறைமுகத்தை பெரிய இயந்திரத்தின் உதவியுடன் ஆழமாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையைப் பொதுமக்கள் வரவேற்கின்றனர்.

நுழைவாயிலில் இருந்த பாரிய கல்லும் உடைக்கப்பட்டு விட்டதால் மக்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. வேலை முடிவடைந்ததும் எல்லாமே சுமுகமாகி விடும் என்ற மகிழ்ச்சியில் அவர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் துறைமுகத்தை அண்டிப் படகுகளை நிறுத்தக்கூடியதாக பாலத்துடன் ஒட்டிய பகுதிகளும் ஆழப்படுத்தப்பட வேண்டும். தற்போது பாலத்துடன் அணைக்கும் போது குமுதினியே தரை தட்டுவதாகச் சொல்லப்படுகின்றது. குமுதினிக்கே இந்தக் கதியென்றால் வடதாரகையின் நிலை எப்படி இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. துறைமுகத்தை ஒட்டியுள்ள பகுதியிலும் சேறு அகழும் பணி இடம்பெற வேண்டும். ஆனால் இங்கேதான் ஆபத்து உருவாகக் கூடிய நிலையும் காணப்படுகின்றது. தற்போது புதிதாக அமைக்கப்பட்ட பாலம், கடலில் பெட்டியை இறக்கி அதற்குள் காணப்படும் நீரை வெளியேற்றிய பின் கொங்கிறீற் தூண்கள் அமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளதாகும். அத்திபாரம் சரியாக இடப்படவில்லை இந்த கொங்கிறீற் தூண்கள் இருக்கும் பகுதியை ஆழமாக்க முனையும்போது அவை சரிந்து பாலமே உடைந்து விழும் நிலை ஏற்படப்போகின்றது. ஏற்கனவே புதிதாக அமைக்கப்பட்ட பாலம் ஆடிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாலத்தின் நிலை இவ்வாறிருக்கும்போது, கடலில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மண் தற்போது கரையில் கொட்டப்பட்டு மலைபோல் காணப்படுன்றது. இந்த மண் வெளி யேற்றப்படாவிட்டால் மழையில் கரைந்து மீண்டும் கிடந்த இடத்திற்கே போய்ச் சேரப்போகின்றது.

முறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம் தீவுக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால் அதனைச் செயற்படுத்துவதற்கு முன்னர் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# புதிய உதைபந்தாட்டச் சப்பாத்து வகைகளை அறிமுகப்படுத்தும் சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ்

சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் நிறுவனம், ரக்பி மற்றும் உதைபந்தாட்ட ஆர்வலர்களுக்காகவும் விளையாட்டு வீரர்களுக்காகவும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஆண்களுக்கான விளையாட்டுச் சப்பாத்துக்களின் தொகுதி யொன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியது. சிக்னேச்சர் குறியீடு, ஆடை அலங்காரக் கைத்தொழிலில் தொடர்ச்சியாக முக்கிய இடம் பிடித்துள்ள ஹமீடியா வர்த்தக நாமத்தின் ஒரு பகுதியாகும். இந்த புதிய வகைச் உதைபந்தாட்டச் சப்பாத்துக்களின் மூலம் சிக்னேச்சர் உற்பத்திப் பொருட்களின் தொகை அதிகரித்துள்ளதுடன் வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் உயர் தரத்திலான விளையாட்டுப் பாதணிகளின் தெரிவுகள் தற்போது கிடைக்கின்றன.

ஆடை அலங்காரத்தில் ஆர்வம் காட்டுகின்ற ஆண்களினதும் இளைஞர்களினதும் ஆடை மற்றும் பாதணித் தேவைகளை சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் பூர்த்தி செய்கின்றது. புதிய உதைபந்தாட்டச் சப்பாத்துக்கள் இரண்டு வடிவமைப்புக்களில் கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, சாம்பல், கறுப்பு மற்றும் சாம்பல் ஆகிய நிறங்கள் உள்ளிட்ட ஆறு நிறங்களில் கிடைக்கின்றன. அத்துடன் அவை மேற்பரப்புக்களுக்கு உறுதிசேர்க்கும் பல வர்ணங்களிலான இலட்சினைகளைக் கொண்டுள்ளதுடன் அகன்ற பாதங்களையுடைய விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியான விதத்தில் அகலத்தையும் கொண்டுள்ளது. இந்த சப்பாத்து வகைகள், உதைபந்தாட்டம், ரக்பி என்பவற்றுக்கும் கடினமும் உறுதியும் கொண்ட மேற்பரப்புக்களில் விளையாடப் படும் ஏனைய விளையாட்டுக்களுக்கும் பொருத்தமானதாகும். உதைபந்து அல்லது ரக்பி விளையாடும் எந்தவொரு வீரரும் ஒரே சப்பாத்துச் சோடியை அளவுக்கு அதிகம் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஆகக் குறைந்தது இரண்டு, மூன்று சப்பாத்துச் சோடிகளை வைத்திருப்பது பொருத்தமானதாகும். ரூபா 3,995/= என்ற போட்டி விலையில் கிடைக்கின்ற சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் உதைபந்தாட்டச் சப்பாத்துக்கள் அனைவராலும் வாங்கக்கூடியதாகவும் ஆரம்ப மட்டத்திலுள்ள முழு நேர விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டுபவர்களுக்கும் பொருத்தமானதாகவும் உள்ளது.

புதிய உதைபந்தாட்டச் சப்பாத்து வகைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌஸுல் ஹமீத், சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் என்பது ஒவ்வொருவரின் உள்ளத்திலும், தான் ஒரு மெய்வல்லுநர் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடிய இளமையான, உயிரோட்டம் மிக்க விளையாட்டு ஆடைகளுக்கான வர்த்தக நாமம் ஆகும். புதிய சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் உதைபந்தாட்டச் சப்பாத்துக்கள் உயர்தரத்திலான மூலப் பொருள்களையும் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களையும் பயன்படுத்தி, களத்தில் அதிகபட்ச சௌகரியத்துடனும் உறுதியுடனும் இருப்பதற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றன. இலங்கையில், குறிப்பாகப் பாடசாலை மட்டத்தில் உதைபந்து அல்லது ரக்பி விளையாட விரும்புகின்ற ஆரம்ப நிலை ஆர்வலர்கள் அதிகம் உள்ளனர். இலங்கையில் பல்வேறு உயர் தரத்திலான விளையாட்டு வர்த்தக நாமங்கள் காணப்படுகின்றன. ஆனால் தரம்வாய்ந்த [illegible] மட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களால் வாங்க முடியாத அளவுக்கு விலையுயர்ந்தவையாகக் காணப்படுவதுடன் அவர்களில் அதிகமானோருக்கு தொழில்சார்ந்த மட்டத்திலான பாதணிகளுக்கான செலவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அவற்றின் விலை அதிகமாகவும் காணப்படுகின்றது. சிக்னேச்சர் ஸ்போர்ட்ஸ் உதைபந்தாட்டச் சப்பாத்துக்கள், நியாயமான விலையில் தரம்வாய்ந்த விளையாட்டுப் பாதணிகளை வாங்க விரும்புகின்ற வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சிறந்த தெரிவாகும். இந்தச் சப்பாத்து வகைகள், அவர்கள் செலுத்தும் விலையை விட அதிகமான பெறுமதி கொண்டவையாக உள்ளதுடன் அவற்றை அணிபவர்களுக்கு தொழில்சார் தோற்றத்தையும் மிகச் சிறப்பாக விளையாடுவதற்கான தன்னம்பிக்கையையும் வழங்குகின்றது. அத்துடன் சிக்னேச்சர் உதைபந்தாட்டச் சப்பாத்துக்கள், வித்தியாசமான நிறங்களையும் வடிவமைப்புக்களையும் கொண்ட விளையாட்டு அணிகலன்களைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டுகின்ற தனிநபர்களுக்கும் பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த நோக்கம் இருந்தால் கல்வியில் உயர்வடைய முடியும்

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பது பொய்யா மொழிப் புலவரின் கூற்றாகும். கல்வி என்பது ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல் வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுப்பதாக அமைதல் வேண்டும். தொழில் வாய்ப்புக்களை இலக்கு வைக்கும் வகையிலான கல்வி முறையை எதிர்வரும் காலங்களில் உருவாக்கப் போவதாகக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கூறியிருக்கின்றார். இன்று அனேக பட்டதாரிகள் எவ்வித தொழில் வாய்ப்புமின்றி, இன்றேல் தாங்கள் பெற்ற பட்டத்துக்கு ஒவ்வாத தொழிலைப் புரிவதால், விரக்திக்கு உள்ளாகின்றார்கள். அவர்கள் பெறும் வேதனமும் அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுப்பதாக அமையவில்லை.

கல்வித்துறையில் அடிக்கடி பரீட்சை வினாத்தாள்கள் வெளியாவதைத் தடுக்க எந்த விதத் தொழில்நுட்பம் ஜப்பான், ஐக்கிய இராஜ்ஜியம், ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கையாளப்படுகின்றது என்பதை அறியக் குழுவொன்றை இந்நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாகக் கல்வித்திணைக்கள ஆணையாளர் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கது. சிங்கப்பூரில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குச் சமமான பரீட்சையில் ஐந்து பாடங்கள் சித்தியடைந்தால் போதுமானதாகும். இலங்கையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் எட்டு அல்லது ஒன்பது பாடங்கள் சித்தியடைய வேண்டியுள்ளது. இவை அனைத்தும் வாழ்க்கையை வளப்படுத்த உதவுகின்றனவா?

புதிய கல்விக் கொள்கைகளை உருவாக்கும் பொழுது, அரசியல் ஆதாயமின்றி பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் போன்றவர்களே இதனைத் தீர்மானிக்க வேண்டும். கல்வியில் சீர்திருத்தம் செய்யும் பொழுது தொலைத்தொடர்பு, தொழில் நுட்பம், தொடர்பாடல் கல்விக்கு முன்னுரிமை அளிப்பதோடு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்பன கட்டாய பாடங்களாக்கப்படவேண்டும். எண்ணும் எழுத்தும் அறிவித்தவன் இறைவனாவான் எனவே ஆசிரியத் தொழிலில் ஈடுபடுபவர்கள் இதனைத் தொழில் ரீதியான கண்ணோட்டத்தைத் தவிர்த்து இறைவன் அருளிய கொடையாகக் கருத வேண்டும். தங்களை முழுமையாக அர்ப்பணித்து ஊக்கமுடன் கற்பித்தலில் ஈடுபாடு கொள்ளல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் தோன்றியிராவிடின் மனிதகுலம் இன்றும் இருண்ட யுகத்தில்தான் வாழ நேர்ந்திருக்கும்.

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற வேளையில் உணவுப் பங்கீட்டு முறை இருந்தது. அப்பொழுது புகழ் பெற்ற விஞ்ஞானியாக இருந்தும் சாதாரண மனிதனாக (கியூ) வரிசையில் நின்று உணவுப் பொருள்களைப் பெற்று வந்துள்ளார். இவர் பள்ளி மாணவனாக இருந்த பொழுதுபடிப்பில் அதிக அக்கறை காண்பிக்கவில்லை. எனவே இவரது வகுப்பாசிரியர் இவரது அறிக்கை ஏட்டில் இவன் படிக்க இலாயக்கற்றவன். இவனை கூடிய விரைவில் பாடசாலையில் இருந்து கூட்டிச் சென்று விடுங்கள்என்றஎழுதி இருந்தார். மகனின் பாசம் மிகுந்த தாயார் இவ்வறிக்கையைப்பார்த்து மனம் சோர்ந்து போகவில்லை. அவனை வெறுக்கவும் இல்லை. மாறாக இன்று முதல் இவனுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுப்பேன் என்று அவனுக்கு கல்வி கற்பித்தார். ஆம்! தோமஸ் அல்வா எடிசனின் துறை ஆராய்ச்சியோடு சம்பந்தமாக இருந்தது.




பராயம் அடைந்த எடிசன் தன்னுடைய ஆராய்ச்சிக்கூடத்தில் இரவு, பகலாக புதிதாக கண்டுபிடிக்க அரும்பாடுபட்டார். முயற்சி திருவினையாக்கியது. இவரது கண்டுபிடிப்பால் மின்சாரத்தால் மின்குமிழ் ஒளிரச் செய்யப்பட்டது. ஓரங்கட்டப்பட்ட மாணவனிடம் மறைந்திருந்த ஆற்றலை வளப்படுத்திய தாயால் விஞ்ஞான மேதை ஒருவர் உருவாக்கப்பட்டார்.

ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் ஆர்வமுடனும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவனும் தனக்கு ஓர் ஆசான் என்ற உயர்ந்த நோக்கத்தை மனதில் கொண்டு கற்பித்தால் கல்வியின் நோக்கம் நிறைவடையும்.

*வின்சென்ட்டலிமா*
*ஒழுவில் வீதி கரம்பொன்*
*ஊர்காவற்றுறை.*

## கேலிச் சித்திரம்




# அக்கறையீனத்தால் அதிகரிக்கும் அநியாயச் சாவுகள்

வடக்கு – கிழக்கில் போர் இடம்பெற்ற காலத்தில் தினமும் சாவுகள் நடந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சூடு, கண்ணிவெடித் தாக்குதல், கிளைமோர் தாக்குதல், கிரனேட் தாக்குதல், ஷெல் தாக்குதல், விமானக் குண்டுத் தாக்குதல் என்று போரின் பல்வேறு விதமான தாக்குதல்களாலும் சாவுகள் மலிந்து இருந்தன. போர் என்றாலே உயிரிழப்புக்கள் தவிர்க்க முடியாதவைதான்.

ஆனால் போர் முடிந்த பின்னரும், போர் காவு கொண்ட அதேயளவு எண்ணிக்கையிலான உயிர்கள் தினமும் சாவுகளைத் தழுவிக் கொள்வது வேதனையாகவுள்ளது. விபத்து என்ற ஒற்றைச் சொல் ஒவ்வொரு நாளும் அள்ளிக் கொள்ளும் உயிர்கள் ஏராளம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கு – கிழக்கில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்ட. வீதி அபிவிருத்தி – ரயில் பாதை அமைப்பு உள்ளிட்டவை அதில் முக்கியமானவை. மூன்று தசாப்தங்களின் பின்னர் – முதன் முதலாக தமிழ் மக்கள் காப்பெட் வீதிகளில் பயணம் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள். புதிய – இளைய தலைமுறை இப்போதுதான் ரயிலைக் கண்டிருக்கின்றது.

இது தொடர்பான அனுபவமின்மை, அளவுக்கு மீறிய வேகம் என்பன உயிர்களைத் தினமும் குடித்துக் கொண்டிருக்கின்றன. கடந்த ஒரு வார காலப் பகுதியிலேயே, வடபகுதியில் 8 உயிர்கள் விபத்துக்களினால் மாத்திரம் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்ற போதும், அதனைக் கட்டுப்படுத்துவதற்காக விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை உரிய பலாபலனைத் தரவில்லை.

இதனால்தான் சாவு மலிந்த தேசமாக மீண்டும் வடக்கு மாறத் தொடங்கியிருக்கின்றது. மாங்குளத்தில் இடம்பெற்ற தனியார் பேருந்து விபத்தில் இருவர் சாவைத் தழுவியிருக்கின்றனர். வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, டிப்பருடன் மோதியதால் விபத்துச் சம்பவித்துள்ளது.

வீதியின் ஓரத்தில் அதுவும் பிரதான வீதியின் ஓரத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதானால், கோட்டுக்கு வெளியேயே வாகனங்களை நிறுத்த வேண்டும். ஆனால் பெரும்பாலான இடங்களில், பாதி வாகனம் கோட்டுக்கு வெளியேயும், பாதி வாகனம் வெள்ளைக் கோட்டின் உள்ளேயும் இருக்கும்.

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போது 'பார்கிங் லைட்' ஒளிரவிடப்பட்டிருக்க வேண்டும். ஆகக் குறைந்தது ஒளித்தெறிப்பு கருவியாவது பொருத்தியிருக்க வேண்டும். இவை ஒழுங்காக மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் இரவு நேரங்களில் பிரதான வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்களில் சாரதிகள் அதீத வேகத்திலேயே தமது வாகனங்களைச் செலுத்துகின்றனர். அதிவேகம் மரணத்தை ஏற்படுத்தும் என்று விளம்பரப் பலகைகள் நடப்பட்டிருந்தாலும், அதனைப் பார்த்து உணர்ந்து செயற்படுவதற்கு எந்த சாரதிகளும் தயாராகவில்லை.

மேலும், உப வீதிகளிலிருந்து பிரதான வீதிக்குள் பிரவேசிக்கும் போது, மெதுவாகப் பிரவேசிக்க வேண்டும். ஆனால், உப வீதியில் வந்த வேகத்தில் பிரதான வீதியில் வாகனங்களை ஏற்றுகின்றனர். இதனால் பிரதான வீதிகளில் வரும் வாகனங்களுடன் விபத்துக்குள்ளாவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம்.

சிறிது காலமாக ரயில் விபத்துக்கள் வடபகுதியில் அதிகமாக இருந்தது. பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் அவற்றுக்கு ஒரு காரணமாக இருந்தது. பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் முழுவதும் இன்னமும் சீர் செய்யப்படவில்லை. ஆனாலும், மூடப்பட்டிருக்கும் ரயில் கடவையினூடாகப் புகுந்து செல்லுபவர்களை என்ன செய்ய முடியும். வலிந்து விதியைத் தேடிச் செல்பவர்கள் என்றுதான் சொல்ல முடியும்.

தற்போது ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகுவது ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது. ஆனாலும் முற்றாக இல்லாமல் போய்விடவில்லை. தற்போது, பிரதான வீதிகளில் ஏற்படும் விபத்துக்களே அதிகரித்துச் செல்கின்றன. தனித்து விழிப்புணர்வு நடவடிக்கை மாத்திரம் இதிலிருந்து மீள்வதற்கு வழியாக இருக்க முடியாது.

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையில் இறுக்கம் இருக்க வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சையில், பரீட்சார்த்திகள் வீதிக் குறியீடுகளை மனதில் பாடமாக்கிச் சென்று ஒப்புவிக்கின்றனர். நடைமுறையில் ஒவ்வொரு குறியீடும் ஏன் வந்தது ? அது என்ன என்பது தொடர்பில் பரீட்சையில் சோதிக்க வேண்டும்.

இவ்வாறு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையிலும் விபத்துக்களை குறைக்க முடியாவிட்டால், சமாதான காலத்தில் கிளிநொச்சிக்குள் தமிழீழ காவல்துறையினர் கையாண்ட நடவடிக்கையையே கையாளுவதைத் தவிர வழியில்லை.

குறிப்பிட்ட இடங்களில் 20 கிலோ மீற்றர் வேகத்தை தாண்டினாலே தண்டப் பணம் என்ற இறுக்கமான நடைமுறை வந்தால், சில வேளைகளில் எங்கள் சாரதிகள் திருந்தக் கூடும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இழுபடும் இடியப்பச்சிக்கல் அவிழ்க்கப்படும் மார்க்கம் யாது?

அரசபோகத்தில் இருந்துதான் - அதனை வெறுத்தொதுக்கிவிட்டு துறவறம் பூண்டு பௌத்த துறவியானார் உலகின் மாபெரும் ஞானிகளில் ஒருவரான புத்த பெருமான். அதன் வாயிலாக எண்ணிறந்த அரசியல்வாதிகளையும் அரசர்களையும் பௌத்தர்களாயும் மாற்றினார். அந்தப் பாரம்பரியம் வெகுகாலம்வரை நீடித்து இன்றும் நிலைபெற்றுள்ளது.

இப்பொழுது நமது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அந்தப் பதவியில் சகல அதிகாரங்களோடும் 10 ஆண்டுகளுக்கு மேல் வீற்றிருந்து அனுபவித்தது போதாதென்று மூன்றாவது தடவையும் போட்டியிட்டு தோல்வியுற்ற நிலையில் நாரஹேன் பிட்டியிலுள்ள பௌத்த ஆலயம் ஒன்றில் தன் பணிமனையை அமைத்துக் கொண்டு மக்களைச் சந்தித்து வருகின்றார். ஏனைய பௌத்த கோயில் களுக்கும் தினந்தோறும் சென்று மலர்தட்டுக்களை பகவானுக்கு சாத்தி பூசை செய்த பின்பு அங்கேயும் கூட்டங்களையும் நடத்துகிறார். அரசியல் வியாக்கியானங்களை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார்.

அண்மையில் அவ்வாறான ஒரு கூட்டத்தில் பேசிய போதுதான் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாம் எவரிடமும் வேட்புமனு கோரவில்லையென்று தெரிவித்திருப்பதாக ஊடக செய்தியொன்று கூறுகிறது. இன்னோர் இடத்தில் பேசியபோது அரசியல் மேடைக்கு சிலர் என்னை இழுக்கிறார்கள் என்றும் கூறியிருப்பதாகத் தகவல் உண்டு.

கடந்த ஜனாதிபதி தேர்தல்காலத்தில் இந்துக் கோயில்கள் பலவற்றுக்கு அவர் சென்று வழிபட்டிருந்தார். தேர்தல் மனு தாக்கல் செய்தவுடனேயே ஆந்திராவிலுள்ள வெங்கடேசப்பெருமான் திருத்தலத்துக்கு பயணம் மேற்கொண்டு சுவாமிதரிசனம் செய்து கொண்டு திரும்பியிருந்தார். ஆனால் தேர்தலில் எதிர்பாராத விதமாக தோல்வி கண்டதையடுத்து பௌத்த கோயில்களுக்கு செல்வதை அதிகரித்து தினசரி செயற்பாடாகவும் மாற்றிக் கொண்டுள்ளார்.

இவ்வாறான மாற்றம்தான் அவரை தாம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட எவரிடமும் வேட்பு மனு கோரவில்லை எனக் கூறவைத்ததோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் பௌத்த கோயில்களில் தொடர்ந்து தினசரி வழிபட்டதால் அரசியலில் இருந்து அவர் ஓதுங்க விரும்புகிறார் என்று எவரும் எண்ணத் தேவையில்லை. அரசியலைத் துறந்து விடும் அளவுக்கு அவர் இருக்க மாட்டார் என்பது மிக சமீப காலம் வரை அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுவதாய் உள்ளன.

இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்னர் தான், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலை வரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவை தனது சகபாடிகளுடன் சென்று நேருக்கு நேர் சந்தித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதமர் வேட்பாளராக தாம் போட்டியிட அனுமதிக்க வேண்டும். கட்சியின் தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிக்கும் குழுவுக்கு தாமே தலைமை வகிக்க வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்தார் என்பதை எவரும் மறந்து விட முடியாது. அந்தச் சந்திப்பின் போதே மஹிந்தவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக ஒருபோதும் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று சிறிசேன திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் அவரை எவ்வாறேனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதமர் வேட்பாளராக்கி விடவேண்டும் என்பதில் தீவிர அக்கறையுள்ள அந்தக் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்கள் சிலரும் அந்தக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சித் தலைவர்களும் வெவ்வேறு விதமான முயற்சிகளையும் தந்திரோபாயங்களையும் பிரயோகித்துக் கொண்டு பெரும் தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான மஹிந்த சார்பு முக்கிய புள்ளிகளை கட்சியின் மத்திய குழுவிலிருந்து ஒதுக்கி வைக்கும் காரியத்தில் சிறிசேன ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதேசமயம் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபையில் நிறைவேற்றுவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான அரசை உருவாக்கலாம் என்ற வகையில் ஒரு முயற்சியும் நடைபெறுகின்றது. அவ்வாறு நிகழும்போது யாரைப் பிரதமராக்குவது என்பதும் ஒரு முக்கிய கேள்வியாகும். இதில் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் ஒரு கண் இருக்கிறது. எனவே உடனடியாக தேர்தலை நடத்தவும் அந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் பெரும்பான்மையைப் பிரயோகித்து சிறிசேனவை ஓரம் கட்டுவதும் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களம் இறக்குவதும் சில முக்கிய புள்ளிகளின் இரகசிய நோக்கமாகக் கருதப்படுகின்றது.

என்ன நடந்தாலும் தாம் தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியின் படி தேர்தல் சீர்திருத்தத்துக்கான 20 ஆவது சட்டவரைவை முதலில் சபையில் தாக்கல் செய்வது என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிர உறுதிப்பாட்டில் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

20 ஆவது சட்டவரைவு தாக்கலாகியதன் பின்னர் அதன் மீதான உயர் நீதிமன்ற வியாக்கியானம் மற்றும் நாடாளுமன்ற விவாதம் என்றும் மேலும் கால நீடிப்பை ஜனாதிபதி விரும்புவாரா என்பது தெரியவில்லை. ஐ.தே.கவும் உடனடியாகவே தேர்தலுக்கு போவதை விரும்புகின்றது. அதனால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் சாத்தியம் இருக்கிறது.

என்னவானாலும் இன்று நாட்டின் அரசியல் சூழ்நிலையானது எதிர்வு கூற முடியாத ஒரு சிக்கலான உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதே உண்மைநிலை.

# ஆர்ப்பாட்டம் இன்றிச் சாதனை புரிந்த மாமனிதர் மைத்திரிபால சிறிசேன

சரா



போதி பூஜைகளை நடத்தி தமக்கு அரசியல் இலாபத்தைத் தேடிக் கொள்ளும் நல்லதொரு உத்தியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது கையாண்டு வருவதைக் காண முடிகிறது. பொதுவாகவே நல்ல சம்பிரதாயங்களையும் கூட, தமது சுயநல அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் இலங்கையின் அரசியல்வாதிகள் கைதேர்ந்தவர்களே. அந்த வகையில் கடந்த ஒரு தசாப்த கால அரசியலில் இந்த நாட்டு அரசியல்வாதிகள் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடுவதற்கே செயற்பட்டிருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்துள்ள கசப்பான உண்மையாகும். கடந்த காலத்தில் பெரும் ஊழல்கள், மோசடிகளைப் புரிந்த அரசியல்வாதிகள், நிறைவேற்று அதிகாரத்தை தம் வசத்தில் வைத்திருந்த, தானைத் தலைவருக்கு குடை பிடித்து, அனைத்துக்கும் ஆமாம் சாமி போடும் கைதேர்ந்த நடிகர்களாக நடித்து அவற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும் அவர்களால் முடிந்தது.

அந்த அரசியல்வாதிகளை அரவணைத்து புகலிடம் வழங்கி தமது எண்ணக்கருக்களை நிறை வேற்றிக் கொண்டிருந்த சுயநல அரசியல் தலைவரொருவராகவே, தற்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடையாளப்படுத்தப்பட்டு வருகிறார். நிறைவேற்று அதிகாரம் என்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தை தம் கையில் வைத்திருந்த அவர், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடனேயே, தாம் நாட்டினதும் மக்களினதும் நலத்துக்காக அனைத்தையும் செய்வதாக நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொண்டு, அவர்களை மிக நன்றாகவே ஏமாற்றியிருந்தார். அந்த மூன்றில் இரண்டை, நாடாளுமன் றத்தில் சிருஷ்டித்துக் கொள்ளு வதற்காக அவர் நடத்தியிருந்த தில்லுமுல்லுகள், காய் நகர்த்தல்கள் எப்படிப்பட்டவைகள் என்பது நாடு அறியாத இரகசியங்கள் அல்ல. சான்றுகளும் தாராளமாகவே உள்ளன.

2015ஆம் ஆண்டு மாதம் ஜனவரி 08ஆம் திகதிக்குப் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து ஏராள மான கேடுகெட்ட அரசியல் வாதி கள் நிறத்தை மாற்றிக் கொண்டனர். ஆனால் ஒப்புக்கு மஹிந்தரோடு தான். எனக் காட்டிக் கொண்ட, முன்னர் அவருக்குத் துணைபோன அந்த அரசியல்வாதிகள் தமது முன்னாள் தலைவரை விமர்சிக்கவும் தவறவில்லை. அவரது தில்லுமுல் லுகள் திருவிளையாடல்களை அவர்கள் ஊடகங்களுக்கு கருத்துக்களை வழங்கி வெளிப்படுத்தியிருந்தனர். அந்தக் கேடுகெட்ட அரசியல்வாதிகள் புரிந்த குற்றங்களை மூடி மறைத்து குற்றம் புரிந்தவர்களுக் குத் தண்டனைகளை வழங்காது அவர்களைக் காப்பாற்றி வைத் திருந்தமை தனது மடமைத்தனம் என்ற வாறு அண்மையில் மஹிந்தரே பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். தனது நிர்வாகம் எப்படியானது, தனது பங்காளிகள் எத்தகையோர் என்பதை அவர் ஆதங்கம் வெளிப்படுத்தியிருந்ததை இந்த நாட்டு மக்கள் கூட்டிக் கழித்து கணக்குப் போட்டுப் பார்த்திருப்பார்கள் என்பது சொல்லித்தெரிய வேண்டிய விடயமல்ல. ஒரு சிலரைத் தவிர, கேடுகெட்ட அரசியல்வாதிகளின் கும்பல்கள் நிறைந்துள்ளதே சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கூட்டு என்று கூறி னால் அது தப்பல்ல. ஜனாதிபதி மைத்திரிபால அரசின் 100நாள் செயற்றிட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஒவ்வொரு கட்டங்களிலும் அது அந்தக் கும்பல்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகியே வந்துள்ளது. தமது நிபந்தனைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்து ரணில் அரசில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டதும் இரகசியமல்ல. இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராக நிறுத்திவிடும் முன் னெடுப்பொன்றும் நாட்டில் மெல்ல மெல்ல வலுவடைந்து வந்தது.

அது ஒரு புறத்தில் சற்றுத் தீவிரமாகவே நடந்தேறி வருகையில் முக்கியமான நோக்கி லொன்றான நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து விடுவதற்கு வகை செய்யும் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் களமிறக்கப்பட் டிருந்தது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் தலைமையில் செயற் பட்டாலும்கூட தம்மை எதிர்க்கட்சியாக வரையறுத்துக் கொண்டிருந்த நிமல் சிறிபாலடி சில்வா தலைமையிலான கும்பல் 19ஐ நிறைவேற்றுவதில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பெரும் தலையிடிகளைக் கொடுத்து வந்ததை நாடறியும். தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தமும் ஒரே தடவையில் கொண்டு வரப்படவேண்டுமென்ற பயமுறுத்தல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மிகப் பெருத்த சவாலாகியிருந்தது. அதை நிறைவேற்றுவதென்பது குதிரைக் கொம்பேஎன்று எண்ணும் அளவுக்கு ஜனாதிபதிக்கு மிகக் கடுமையான நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன.

இந்த வேளையில், 19 நிறைவேற்றப்படாது போகும் பட்சத்தில் நிச்சயமாக நாடாளுமன்றத்தை கலைத்து விட நேரும் என்ற அரசியல் நிலைப்பாடும் 19ஐ எந்த விதத்திலேனும் நிறைவேற் றியே தீர்வது என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் திடசங்கற்பமும் அவரையொரு செயல் வீரராக்கியிருந்தது. அதற்கமைய 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அவர் ஆற்றியிருந்த அடக்கமான உருக்கமான உரை மற்றும் அதற்கு முன்னரும், அடுத்த தினத்திலும் அவர் நாட்டுமக்களை விழித்து அமைதியாக ஆற்றியிருந்த உரைகள் என்பன நாட்டு மக்களின் மனங்களை ஈர்த்து விழிப்படை யச் செய்து சிந்திக்க வைத்திருந்த தோடு நாடாளுமன்ற உறுப் பினர்களிடையேயும் பெருத்த மாற் றமொன்றை நல்லதொரு திருப் பத்தை ஏற்படுத்தியிருந்தன என்ப தனை எவராலும் மறுக்க இயலாது.

மறுபுறத்தில் 19 தோல்வியடைந்து திடீர் நாடாளுமன்றக் கலைப்பொன்று இடம்பெற்றால், நிச்சயமாகவே ஜனாதிபதியின் உரைகளினால் விழிப்புணர்வைப் பெற்று அறிவு பூர்வமாக சிந்திக்கத் தலைப்பட்டுள்ள மக்கள் தங்களை மீளவும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பமாட்டார்கள் என்பதைச் சந்தேகமின்றிப் புரிந்து கொண்டிருந்ததே அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்டிருந்த நல்ல மாற்றத்துக்குக் காரணமாயிருந்தது என்பதையும் மறுக்க இயலாது.

எவ்வாறோ கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி நிறைவேறியிருந்த 19ஆவது திருத்தமானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டை ஜனநாயக நல்லாட்சிப் பாதையில் நிச்சயமாக இட்டுச்செல்ல முடியும் என்பதைப் பளிச்செனக் காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# வரலாற்றில் மறக்க முடியாத

# தியனன்மென் சதுக்க படுகொலைகள்



சீனத் தலைநகர் பீஜிங் தியனன் மென் சதுக்கத்தில் சீனநாட்டு வரலாற்றில் நடந்த மிகக்கொடிய கோரப் படுகொலைகள் இன்றும் மறக்க முடியாத சம்பவமாகக் காணப்படுகின்றது. சீன மாணர்களின் எழுச்சிமிகு போராட்டம், சீன நாட்டு வல்லமை கொண்ட பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொண்டு அடக்கி அழிக்கப்பட்டது. சீனமக்களுடன் மிகவும் சாதாரணமாகப் பழகி வந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஹூ யானோ திட்டமிட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்டதும் அதைத் தொடர்ந்து உடல் நலமின்றி உயிர் நீத்ததுமே மாணவர்களின் போராட்டத்துக்கு காரணமாக அமைந்தது. மாணவர்களினது அறவழிப் போராட்டம் 1989 ஏப்ரல் 15 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 52 நாள்கள் வரை சீன நாடு முழுவதிலும் இடம் பெற்றது. இறுதி நாளான ஜூன் மாதம் 4 ஆம் திகதி உலகத்தின் மிகப்பெரிய தியன் மென் சதுக்கம் கொலைக்களமாகக் காட்சியளித்தது. மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர் பதவிகளில் இருந்தவர்கள் என சுமார் 10 இலட்சம் மக்கள் சீன அரசுக்கு எதிரான இறுதிப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

உறுதி கொண்ட மாணவர்கள் பின்வாங்காது அறவழிப் போராட்டங்களை சீன நாடு முழுவதும் முன்னெடுத்தபோது அதன் எழுச்சியைக் கண்ட சீன அரசு கலக்கமடைந்தது. மாணவர்கள் ஒன்றுபட்ட எழுச்சி, தங்களது ஆட்சிக்கு முடிவு கட்டிவிடும் என்பதை உணர்ந்து கொண்ட போதுதான் சீன அரசும் போராட்டத்தை ஒடுக்க முடிவுசெய்தது. சீன நாட்டு இராணுவம் தனது சொந்த மக்களைக் கொன்றொழிக்கத் தயாராகியது.

ஜனநாயகத்துக்கான கடவுள் என்ற சிலையை சீனப் பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கியிருந்தனர். 1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி இரவு வழமையைக் காட்டிலும் அதிகளவில் மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அழகு ஆடைகளுடன் அவர்களின் குழந்தைகளும் சிலையைக் காண வந்திருந்தனர். அன்று மாலை போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களை நோக்கி வீட்டிலிருந்தவாறு உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று சீன அரசு தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் அறிவித்துக் கொண்டிருந்தது. போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சீன அரசினது அறிவிப்பைச் செவிமடுக்காது பேரெழுச்சி கொண்டவர்களாகவே காணப்பட்டனர். அரசினது அறிவிப்பை மீறிய மக்கள் தியனன் மென் சதுக்கத்தில் லட்சோப லட்சமாகத் திரண்டிருந்த வேளையில், சீன அரசு அறிவித்தது போன்று 4 ஆம் திகதி அதிகாலை வேளையில் இராணுவம் தியனன் மென் சதுக்கத்தைச் சுற்றி வளைத்தது. எதனையும் சந்திப்பதற்குத் தயாரான நிலையில் போராட்டக்காரர்கள் கண்விழித்த நிலையில் இருந்தனர். திடீரென இராணுவ வாகனம் ஒன்று மாணவர்கள் முன் வந்து நின்றது. மூர்க்கக் குணம் கொண்ட இராணுவத்தினர் போராட்டக்காரர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். நாலாபுறமும் உள் நுழைந்த இராணுவம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது. போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர்.

சீன மக்களை ஈவு, இரக்கம் பாராது மிருகங்களைச் சுட்டுக் கொல்வது போன்று இராணுவத்தினர் வேட்டையாடினர். பலர் சதுக்கத்திலேயே மடிந்தனர். நீண்ட நேரம் வரையில் போராட்டக்காரர்களை நோக்கி சீன இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபடியிருந்தனர். அந்த வேளையில் இராணுவத்தினர் போராட்டக்காரர்களை நோக்கி ஒலி பெருக்கி மூலம் எச்சரிக்கையும் விடுத்தனர். வீதியோர விளக்குகள் ஒளிகள் நிறுத்தப்பட்டு சதுக்கத்தை விட்டு உடனடியாக போராட்டக்காரர்கள் வெளியேறிவிட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. மாணவர்களோ அவ்விடத்தை விட்டு அகலவில்லை. அனைவரும் முன்னாள் அதிபராக இருந்தவரான மாவோ சே துங்கின் கல்லறை அமைந்துள்ள பகுதிக்குள் பின்வாங்கினர். குறிப்பிட்ட சில மாணவர்கள் சதுக்கத்தில் அத்துமீறி வந்த போர்தாங்கி கவச வண்டியிலிருந்த இராணுவத்தினரைப் பார்த்து கூச்சலிட்டனர். இராணுவத்தினரின் கவச தாங்கிகள் பல மாணவர்களை அவ்விடத்திலேயே நசுக்கிக் கொன்றன. காலை 6 மணியளவில் இந்தக் கொடூர சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் பலரை ஓடவிட்டு பின்புறமாக இராணுவம் சுட்டுக்கொன்றது. வைத்தியர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், தொழிலாளர்கள், தாதியர்கள் எனப் பாராது அனைவரையும் சுட்டுக் கொன்றது.

காயப்பட்டவர்களை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டவர்களையும் இராணுவம் விட்டு வைக்கவில்லை.

ஜூன் 5 ஆம் திகதி காலை வேளையில் 25 க்கும் மேற்பட்ட கவச தாங்கிகள் தியனன்மென் சதுக்கத்தை நோக்கித் தொடராக வந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட மக்களின் உடல்களை நசுக்கியவாறு மேலும், பல மக்களைக் கொன்று குவிப்பதற்காக வந்த கவச தாங்கி வாகனங்களைத் தடுத்து நிறுத்திய இளைஞர் யார்...?

திடீரென் தோன்றிய 20 வயதுடைய

**சீன மக்களை ஈவு, இரக்கம் பாராது மிருகங்களைச் சுட்டுக் கொல்வது போன்று இராணுவத்தினர் வேட்டையாடினர். பலர் சதுக்கத்திலேயே மடிந்தனர். நீண்ட நேரம் வரையில் போராட்டக்காரர்களை நோக்கி சீன இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபடியிருந்தனர்.**

இளைஞன் ஒருவர் கவச தாங்கிகளை வழி மறித்த செயலே இன்றும் தியனன்மென் சதுக்கப் போராட்டத்தின் உச்சகட்டச் சம்பவமாக நோக்கப்படுகின்றது.

அந்த இலட்சியவெறி கொண்ட இளைஞனின் தீரச் செயலினால் இராணுவம் ஒரு கணம் திகைத்து நின்றது. இராணுவத்தினரால் தனக்கு என்ன நடக்கும் என்பதைக் கூட எண்ணியிருக்காத அந்த இளைஞன் புலனாய்வுப் படையினரால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்படுகின்றான். 20 வயது மாணவனான வேங் வெய்லின் என்பவரே உயிரைத் துச்சமென மதித்து இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக இறுதி நேரத்தில் தனி ஒருவனாக கிளர்ந்தெழுந்த போராளியாவான்.

வேங் வெய்லின் தொழிலாளி ஒருவரின் மகனாவார். இராணுவம் அந்த இளைஞனைக் கொல்வதற்கு முயற்சிக்கவில்லை. கவச

**கடந்த 5 ஆம் திகதி அந்தக் கோரச் சம்பவத்தின் 26 ஆவது நினைவு தினமாகும்.**

தாங்கிகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. ஓர் இராணுவ வீரனுக்கும் அந்த இளைஞனுக்கும் இடையே சிறிய உரையாடல் ஒன்று இடம்பெற்றது. அந்த இளைஞன் அப்போது கொல்லப்பட வில்லை. ஆனால் என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில் திய னன் மென் சதுக்க சம்பவத்துக்குப் பின்னர் 13ஆம் நாள் அவன் தூக்கிலிடப்பட்டான் என்றும், இரண்டு மாதங்களுக்குப் பின்னர் சிறையிலடைக்கப்பட்டான் என்றும், இன்னும் நகரத்தின் மையத்தில் இரகசியமாக உயிர் வாழ்கின்றான் என்றும் அவன் குறித்த செய்திகள் வெளிவந்தபடியே உள்ளன. இன்று வரையிலும் கவச தாங்கிகளைத் தடுத்த மகா வீரனாக வேங் வெய்லின் பல்கலைக்கழக மாணவர்களால் போற்றப்படுகின்றான். நியூயோர்க் டைம் பத்திரிகையால் வெளியிடப்பட்ட உலகின் தலைசிறந்த நூறு மனிதர்களில் ஒரு வனாகவும் கணிக்கப்பட்டிருந்தான்.

தியனன்மென் சதுக்கப் போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் பல ஆயிரங்களாக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டது. சீன அரசின் ஆவணங்களின்படி 200-300, எனவும் நியூயோர்க் டைம்ஸ் இதழின்படி 300-800 எனவும், சீன மாணவர் சங்கம், செஞ்சிலுவைச் சங்க அறிக்கையின்படி 2000-3000 எனவும் கணக்கிடப்பட்டிருப்பினும் சுயாதீன பகுப்பாய்வாளர்களின் கணிப்பின்படி 7000போராளிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சீன அரசு போர் முனையில் எதிரிகளை அழித்தொழிப்பதற்கு பயன்படுத்துகின்ற ஆயுதங்களையே தனது சொந்த நாட்டு மக்களை அடக்கி ஒடுக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

பின்னர் போராளிகளையும், தலைவர்களையும் தேடி நாடு முழுவதும் தேடுதல்கள் நடத்தப்பட்டன. இரண்டு மாதங்களில் 40 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டனர். பெரும்பாலானோர் மரணதண்டனைக்குள்ளாகினர். ஏனையோர் சிறையிலடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1989ஆம் ஆண்டு எதிர்ப்புப் போராட்டத்தின் இறுதி நாள் கோரச் சம்பவமானது சீனமக்களால் ஜீரணித்துக் கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் முடியாத நிலை இன்றுவரை காணப்படுகின்றது. ஒவ்வொரு சீனமக்களது இதயத்திலும் மாற்றமுடியாத வலியாகவே இது காலம் காலமாக இருந்து கொண்டேயிருக்கும். ஜனநாயகத்தை ஆதரிக்கின்ற சீனமக்கள் இன்றும் தியனன்மென் சதுக்கப் படுகொலைகளின் நினைவுகளோடு வாழ்கின்றனர். அந்த நாளை சீன மக்கள் நினைவு கூர்ந்து தியனன்மென் சதுக்கத்தில் ஒன்று கூடி சீன வரலாற்றில் வருடா வருடம் அஞ்சலிப்பதும், சீன அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதுமே வழக்கமாகிவிட்டது. சீன அரசுக்கு எதிரான போராட்டம் என்றாவது விடிவைத்தரும் என்ற நம்பிக்கையோடு தியனன்மென் சதுக்கம் உறுதியுடன் இன்றும் எழுந்து நிற்கின்றது. சீன மாணவர்களால் கவச தாங்கிக்காரனான மாணவன் வேங் வெய்லின் ஒரு மாபெரும் வீரனாக ஒவ்வொரு ஜூன் ஐந்தாம் திகதியும் போற்றப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 1 | 7 | | | | |
| 7 | 2 | | | | | | | 8 |
| 6 | 9 | 1 | | | | 3 | 4 | |
| | | 5 | | 6 | 1 | | | |
| 9 | | | | | | | | 1 |
| | | | 2 | 4 | | 5 | | |
| | 5 | 8 | | | | 4 | 6 | 3 |
| 4 | | | | | | | 1 | 9 |
| | | | | 1 | 4 | 7 | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 8 | 7 | 5 | 1 | 3 | 2 | 6 |
| 6 | 2 | 5 | 3 | 9 | 4 | 7 | 8 | 1 |
| 7 | 3 | 1 | 2 | 6 | 8 | 4 | 9 | 5 |
| 3 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 | 7 | 2 |
| 2 | 4 | 6 | 1 | 7 | 9 | 5 | 3 | 8 |
| 5 | 1 | 7 | 8 | 2 | 3 | 6 | 4 | 9 |
| 9 | 6 | 3 | 4 | 8 | 5 | 2 | 1 | 7 |
| 1 | 5 | 2 | 9 | 3 | 7 | 8 | 6 | 4 |
| 8 | 7 | 4 | 6 | 1 | 2 | 9 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 200 | 450 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | 500 |
| பாரை | 500 | 500 | 500 | 450 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | – | 600 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 300 | – |
| விளை | 500 | 400 | 400 | 450 | 500 | 350 |
| முரல் | 200 | 350 | 350 | 400 | 300 | – |
| கும்பிளா | 300 | 350 | 400 | 350 | 500 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 500 | – | – |
| ஒரா | 300 | 400 | – | 400 | 400 | – |
| திரளி | 150 | 300 | 200 | 250 | 200 | 250 |
| நகரை | 150 | 300 | – | 300 | 250 | 300 |
| ஆடை | 100 | 200 | 150 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 150 | 300 | 200 | 300 | 100 | 250 |
| திருக்கை | 150 | 350 | 300 | 280 | 100 | 140 |
| பாலை | 300 | 300 | – | 400 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 80 | 150 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 250 | – | 250 | 150 | 250 |

## நாளை

வைகாசி–26
செவ்வாய்க்கிழமை
09.06.2015


திதி: ஸப்தமி மு.ப. 11.05 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப.02.37 வரை
சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 80 | 80 | 80 | 80 | – |
| கத்தரி | 100 | 120 | 120 | 120 | 120–140 | 160 | 120 | 80 |
| கரட் | 250 | 160 | 200 | 200 | 200–240 | 320 | 250 | 220 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 60 | 50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 160 | 120 | 120 | 140 | 120–140 | 180 | 140 | 80 |
| பாகல் | 200 | 140 | 160 | 160 | 80–120 | 120 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 80 | – | 180 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 110 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100–140 | 100– 140 | 140 | 110–130 | 130–160 | 140 | 120 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 25 | 40 | 80 | 15 |
| தக்காளி | 70 | 90 | 80 | 70 | 70–80 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 40 | 50 | 40 | 60 | 25 |
| கீரை | 30 | 40 | 50 | 20 | 30–40 | 40 | 35–40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30–40 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100–120 | 120 | 130 | 130 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 80–100 | 60 | 100 | 70 |
| கோவா | 180 | 100 | 120 | 160 | 90–100 | 120 | 100 | 60 |
| வெண்டி | 140 | 120 | 100 | 120 | 80 | 120 | 100 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 240 | 200 | 320 | 220 | 150–180 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 | 240 | 160–200 | 320 | 240 | 190 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 50 –60 | 40–50 | 40 | 35–45 | 40–45 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90–100 | 100 | 120 | 90–120 |
| தேசிக்காய் | 120 | 120 | 170 | 200 | 140–150 | 140 | 120 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 100 | 160 | 130–150 | 160 | 160–200 | 160 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 80–100 | 160 | 200 | – |
| முருங்கக்காய் | 400 | 300 | 200 | 280 | 200–250 | 240 | 250 | 300 |

## பாகற்காயின் இனிப்பான நன்மைகள்

பாகற்காய் வளரும் பகுதியின் தன்மைக்கேற்ப கரும்பச்சை நிறமாகவோ அல்லது இளம் பச்சை நிறமாகவோ இருக்கும். இதன் சுவை கசப்பாக இருந்தாலும் இதில் உடலுக்குத் தேவையான ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகளும், வைட்டமின்களும் ஏராளமாக நிறைந்துள்ளன. பாகற்காயில் விற்றமின் ஏ, பி, சி, பீட்டா–கரோட்டின் போன்ற ப்ளேவோனாய்டுகள், லூடின், இரும்புச்சத்து, ஜிங்க், பொட்டாசியம், மாங்கனீசு, மக்னீசியம் போன்ற தாதுக்களும் நிறைந்துள்ளன.



**சுவாசக் கோளாறுகள்**

பசுமையான பாகற்காய்கள், ஆஸ்துமா, சளிப் பிடித்தல், இருமல் போன்றவற்றைத் தீர்ப்பதில் மிகச்சிறந்த நிவாரணியாகப் பயன்படுகின்றன.

**கல்லீரலை வலுப்படுத்துதல்**

தினந்தோறும் ஒரு ரம்ளர் பாகற்காய்ச் சாற்றை அருந்தினால், ஈரல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கும். அதிலும் ஒரு வாரம் தொடர்ந்து குடித்து வந்தால் இதன் பயனைக் காணலாம்.

**நோயெதிர்ப்புச் சக்தி**

பாற்காயையோ, அதன் இலைகளையோ வெந்நீரில் வேக வைத்து தினந்தோறும் சாப்பிட்டு வந்தால், நோய்த் தொற்றுகள் அண்டாமல் உடலின் நோயெதிர்ப்புச் சக்தி கூடும்.

**பருக்கள்**

பாகற்காயை உண்டு வந்தால் சருமத்தில் உள்ள பருக்கள், கருமையான தழும்புகள், ஆழமான சருமத் தொற்றுகள் ஆகியவை நீங்கும். பாகற்காயை சாறு எடுத்து அதனுடன் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து, தினந்தோறும் வெறும் வயிற்றில் 6 மாதம் அருந்தி வந்தால் கண்கூடாகப் பலனைக் காணலாம்.

**நீரிழிவு நோய்**

நீரிழிவு நோயை எதிர்கொள்ள சிறந்த மருந்தாக பாகற்காய் சாறு பயன்படுகிறது. பாகற்காயில் உள்ள ஒருவகை வேதிப்பொருள் இன்சுலின் போல செயல் பட்டு, இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைக் குறைக்கிறது.

(தொடரும்)

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நம்பிக்கையே வாழ்க்கை

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல்ல செயல்கள் விளையும். உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். ஆனால் நமது உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகி விடும். உலகின் குறைகளைப் பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விரும்பினால் உலகைத் தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பிள்ளைகளை உருவாக்க...



**1. இளமையில் கல்வி புகட்டுங்கள்**

இந்த வயதில் அதற்கு என்ன தெரியும் என்று அங்கலாய்ப்பவர்களைக் காண முடியும், ஆனால் பிள்ளைகளின் இளமைப் பருவம் தான் அவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய நல்ல தொரு பருவமாகும், அவர்களுக்கு நல்லதொரு வழித்தடத்தின் கீழ் பயணிப்பது எப்படி என்பதை பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டிய தருணம், பிள்ளைகளின் ஆரம்ப நாள்களாகும். ஒருமுறை அவர்களிடையே நல்ல தொரு பண்பாட்டை, பழக்க வழக் கங்களை ஏற்படுத்தி விட்டால், அது அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடரும், அதிலிருந்து அவர்கள் மாற மாட்டார்கள்.

**2. கோபமான நிலையில் பிள்ளைகளுக்கு உத்தரவிடாதீர்கள்**

உங்களது பிள்ளைகளுடனோ அல்லது சாதாரணமாக எதற்காகவோ நீங்கள் கோபமான நிலையில் இருந்து கொண்டிருந்தால் அப்பொழுது உங்களது பிள்ளைகளைத் திருத்த நினைக்காதீர்கள். உங்களது குழந் தைக்கு நல்லதைத் தான் நாடுகின்றீர்கள். ஆனால் அதுவல்ல இப்போது பிரச்சினை.., நீங்கள் எந்த நிலையில் அதனைச் சொல்கின் றீர்கள் என்பது தான் பிரச்சினை. எனவே, கோபம் இல்லாத நிலையில் அதனைத் தொட ருங்கள்.

**3. பெற்றோர்கள் இணைந்து முடிவெடுத்துச் செயல்படுங்கள்**

பிள்ளைகளை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்த திட்டத்தை குடும்பத்தலைவியும், தலைவனும் இணைந்து தீர்மானிக்க வேண்டும். அதனை இருவரும் இணைந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிடல் வேண்டும். ஒருவர் கறாராகவும், இன்னொருவர் இலகுவாகவும் நடந்து கொண்டால், இருவருக்கும் மத்தியில் பிள்ளைகள் விளையாட ஆரம்பித்து விடுவர். பெற்றோர்களில் கறாரானவர் மறுக்கின்ற பொழுது. அடுத்தவரிடம் சென்று அனுமதி கேட்க ஆரம்பித்து விடுவார்கள். இருவரும் ஒரு விடயத்தில் ஒத்த கருத்தில் இருந்தால் தான் பிள்ளைகளை நெறிப்படுத்த முடியும். பெற்றோர்களில் ஒருவர் சம்மதித்து இன்னொருவர் சம்மதிக்கா விட்டால், பெற்றோரில் ஒருவரின் மீது குழந்தைகளுக்கு வெறுப்புணர்வு ஏற்படும். எனவே, இது விடயமாக நாங்கள் கலந்தாலோசித்து முடிவு சொல்கின்றோம் என்று பிள்ளைகளுக்குக் கூறுங்கள். பின்னர், குழந்தைகள் இல்லாத சூழ்நிலைகளில் அந்த விவகாரத்தை கலந்தாலோசித்து முடிவெடுங்கள். குழந்தைகளை வைத்துக் கொண்டு கலந்தாலோசனையில் ஈடுபடாதீர்கள். எடுத்த முடிவில் இருவரும் உறுதியாக இருங்கள்.

**4. உறுதியாக இருத்தல்**

பெற்றோர்கள் தங்களது கொள்கைகளில் உறுதியைக் கடைபிடிக்க வேண்டும். அடிக்கடி சட்ட திட்டங்களை மற்றும் எதிர்பார்ப்புகளை மாற்றிக் கொள்வது பிள்ளைகளைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடும். உதாரணமாக, சுவரில் எழுதிக் கொண்டிருக்கின்ற பிள்ளையை இன்றைக்கு தடுப்பது, நாளைக்கு தடுக்காது எழுதட்டும் என அனுமதிப்பது, இப் படிப்பட்ட சூழ்நிலைகளில் இனி வரும் நாளில் நாம் சுவரில் எழுதினால் பெற்றோர்கள் கண்டிப்பார்களா, கோபப்படுவார்களா என்ற புரிந்துணர்வின்மை பிள்ளைகளிடம் தோன்றி விடும். உங்களது மனநிலைக் குத் தக்கவாறு உங்களது சட்ட திட்டங்களையும் மாற்றிக் கொள்வது நல்லதல்ல. இவ்வாறான நிலையில், எந்தக் காரியத்தையேனும் பிள்ளை செய்ய ஆரம்பிக்கும் பொழுது, நீங்கள் அதனை அனுமதிப்பீர்களா மாட்டீர்களா, அதனால் கோபமடைவீர்களா என்று உங்களைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்து விடும். எனவே தான் கூறுகின்றோம்.., பிள் ளைகளை ஒரு விடயத்தின் மீது அதனைச் செய்யாதே என்று தடுத்தால், அந்தத் தடை எப்பொழுதும் நீடிக்க வேண்டும். அப்பொழுது தான் ஓ.., இதைச் செய்வது நல்லதல்ல என்று அந்தக் குழந்தை உடனே கற்றுக் கொள்ளும். அப்படியென்றால் சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு நம்மை மாற்றிக் கொள்ளக் கூடாதா என்றால், மாற்றிக் கொள்ளலாம்.., நீங்கள் ஏன் முதலில் அனுமதி மறுத்தீர்கள்.., பின்னர் இப்பொழுது ஏன் நீங்கள் அனுமதிக்கின்றீர்கள் என்பது குறித்து அந்தக் பிள்ளைகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டியது அவசியமாகும். இன்னும் அதனை அதன் ஆரம்ப கட்டத்திலேயே விளக்கி விடுவது புரிந்துணர்வுக்கு நல்ல தாகும். பெற்றோர்களிடம் உறுதி இல்லை



என்றால், அதுவே பிள்ளைகளின்; கட்டுப்பாடின்மைக்கான ஆணி வேராகும்.

**5. பிள்ளைகளிடம் பொய் பேசாதீர்கள்**

பிள்ளைகளிடம் தப்பிப்பதற்காக வாய்ப்பாக பொய்யைப் பேசாதீர்கள், அவர்களிடம் வழங்கக் கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் அடிக்கடி பொய் பேசக் கூடிய பெற்றோராக இருந்தால்.., அவர்கள் உங்களது வார்த் தைக்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள், நீங்கள் உண்மையையே பேசினா லும் கூட அவர்கள் நம்ப மாட்டார் கள். உதாரணமாக, உயரமான அலுமாரியில் உள்ள பொருள் ஒன்றை

பிள்ளைகளை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்த திட்டத்தை குடும்பத்தலைவி யும், தலைவனும் இணைந்து தீர்மானிக்க வேண்டும். அதனை இருவரும் இணைந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிடல் வேண்டும்.

உங்களது குழந்தை எடுத்துக் கொண்டிருக்கின்றது, அதனை முறையாக எடுக்க அதனால் இயலாது.., எனும் பொழுது சற்று பொறு.. இதோ என்னுடைய வேலைகளை முடித்து விட்டு வந்து எடுத்துத் தருகின்றேன் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அவ் வாறு கூறி விட்டால் நீங்கள் உங்களது வேலைகளை உடனே முடித்துக் கொண்டு உங்களது பிள்ளைகளுக்கு உதவுங்கள். மறக்க வேண்டாம்.. நீங்கள் கூறியதை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறில்லை என்றால் அந்தப் பிள்ளை மீண்டும் அலுமாரியில் உள்ள பொருளை எடுக்க முனையும். அதனால் இயலாத நிலை யில், பொருள்கள் தவறிக் கீழே விழுந்த பின்பு அந்தப் பிள்ளையைக் கோபித்துப் பயன் என்ன? ஒன்று, அதனை இப்பொழுது எடுக்க இயலாது. மற்ற வேலைகளைப் பாருங்கள், பின்பு எடுத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கூறி இருந்தால், அந்தக் குழந்தை தன்னுடைய முயற்சியைக் கைவிட்டுவிட்டு வேறு வேலையின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பி இருக்கும்.

(தொடரும்)



## ஜூன் மாத இராசி பலன்கள்

### துலாம்

இந்த ராசிக்கு 6 இல் உள்ள கேது சாதகமாக உள்ளார். இடைபட்ட காலத்தில் வக்கிரம் அடைவதால் பலன் குறையும். சுக்கிரன் 9 இல் இருந்து நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்களால் உதவி கிடைக்கும். சுக்கிரன் மிதுனத்தில் இருந்து விலகி கடகத்துக்கு அடியெடுத்து வைக்கிறார். இது சுமாரான நிலை. போட்டி அதிகம் இருக்கும். சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருகிறார். வக்கிரத்தில் சிக்கும் கிரகத்தால் சிறப்பாக செயல்பட முடியாது. சனிபகவான் வக்கிரத்தில் சிக்கும் போது நற்பலன் தருவார். புதன் 8 இல் இருப்பதால் முயற்சிகளில் வெற்றி கிட்டும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, பெருமை கிடைக்கும். கடந்த மாதம் நிலவி வந்த குடும்ப பிரச்சினை மறைந்து ஆனந்தம் பெருகும். கணவன்–மனைவி இடையே ஒற்றுமை ஏற்படும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்வர். புத்தாடை, நகை வாங்கலாம்.

**வியாபாரம், தொழிலில்:** இலாபம் நிறைவாக இருக்கும். பணியில் சீரான நிலையும், மேல் அதிகாரிகளின் ஆதரவும் இருக்கும். அரச ஊழியர்கள் கவனமாக இருக்கவும். உங்கள் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கும்.

**கலைஞர்களுக்கு:** புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

**அரசியல்வாதிகளுக்கு:** சீரான பலன் காண்பர். அதிக முயற்சி எடுத்தால்தான் பதவி கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:** நினைத்த பாடம் கிடைக்க சற்று சிரமப்படலாம். சிலர் படிக்க வெளிநாடு செல்வர். போட்டிகளில் வெற்றி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விவசாயிகளுக்கு:** சிறந்த விளைச்சல் பெறுவர். மாதத்தின் பிற்பகுதியில் கால்நடை மூலம் வருமானம் பெருகும். வழக்கு விவகாரங்களில் கவனம். உடல் நலம் நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்:** 5,7

**நிறம்:** வெள்ளை, சிவப்பு

**பரிகாரம்:** ராகு சாதகமற்ற இடத்தில் இருப்பதால் அவருக்கு உளுந்து படைத்து மந்தாரை மலர்களால் அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை வழிபாடு நடத்துங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளப் படிப்பாறை




பவளப் படிப்பாறை என்பது பவளங்களின் வன் கூடுகள் ஒன்றன்மேல் ஒன்று படிந்து உருவாகும் அமைப்பு ஆகும். இவை ஒளிபுகக் கூடிய வெப்ப வலயக் கடற் பகுதிகளில் வளர்கின்றன. இந்தப் பகுதிகள் படிப்பாறைகளை அடித்துச் செல்லாத அளவுக்கு மென்மையானதும் போதிய அளவு உணவும், ஒட்சிசனும் கிடைக்கக் கூடிய அளவுக்குக் கடல்நீரைக் கலக்கி விடக்கூடிய அளவு வலுவானதுமான அலை இயக்கம் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். இவற்றின் வளர்ச்சிக்கு ஊட்டம் குறைந்த தெளிந்த மித வெப்பம் கொண்ட ஆழம் குறைந்த நீர்ப் பகுதி அவசியமாகும். இந்த வன்கூடுகள் உயிர் உள்ளவையாக இருக்கும்போது அவற்றுள் பவள மொட்டுக்கள் உருவாகும்.



# கடைசி வீடு



ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் வெற்றுக் காணிகளை வாங்கி அவற்றில் வீடு கட்டி விற்கும் தொழிலைச் செய்து வந்தார். தன் தொழிலுக்கு உதவியாக ஒரு மேசனையும் வேலைக்கு அமர்த்தியிருந்தார். அந்த மேசன் மிகவும் நேர்த்தியான, அழகான வீடுகளைக் கட்டுவதில் திறமைசாலி. அவர் கட்டும் வீடுகள் உடனே நல்ல விலைக்குப் போயின. பலரும் காத்திருந்து வாங்கினார்கள். வியாபாரம் நன்கு வளர்ந்தது. தனவந்தரும் அந்த மேசனை நல்ல சம்பளம் கொடுத்து சிறப்பாகக் கவனித்துக் கொண்டார். மேசனும் வயது போனதால், தான் ஓய்வு பெற்றால் நல்லது என்று நினைத்தார். தன வந்தரிடம் அந்த யோசனையைச் சொன்ன போது அவருக்கும் அது சரியென்றே பட்டது. ஆனாலும் அவர் அந்த மேசனைப் பார்த்து தம்பி, நீ எவ்வளவோ செய்து விட்டாய். உனக்கு வாழ்க்கையில் ஓய்வு தேவைதான். எனக்காக இறுதியாக ஒரு வீடு கட்டிக் கொடுத்து விட்டுப் போ என்று கேட்டுக் கொண்டார். தன வந்தர் மேலும் வேலை சொன்னது மேசனுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஓய்வு கேட் டால் வேலை சொல்கிறாரே என்று கோபப் பட்டார். ஆனாலும் பல நாளாக தன்னைப் பார்த்துக் கொண்ட மனிதரிடம் கொண்ட நன்றியறிதலால் ஒன்றும் பேசவில்லை. வேண்டா வெறுப்பாக அந்தக் கடைசி வீட்டைக் கட்டினார். வழக்கமாக இருக்கும் தரம் அதில் இல்லை. கட்டி முடித்த அன்று தன வந்தர் வந்தார்.

வீட்டின் சாவியை மேசனிடம் ஒப்படைத்து, அப்பா, இந்த வீட்டை உனக்காகத்தான் கட்டினேன். உன் ஓய்வு காலத்துக்கு இது உதவும். என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். மேசனுக்குத் திடுக் கென்று இருந்தது. நமக்கு என்று தெரிந்திருந்தால் இன்னமும் கவனம் எடுத்து சிறப்பாகச் செய் திருக்கலாமே என்று வெகு நேரம் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

நாமும் நமது இளம் வயதில் நம் யோசனைத் தெரிவுகளாலும் செய்கைத் தெரிவுகளாலும் நமது எதிர்காலம் என்ற வீட்டைக் கட்டுகிறோம். அதில்தான் வாழப் போகிறோம் என்று யோசித்துச் செய்பவர்கள் எப்போதுமே சிறப்பாக வாழ்கிறார்கள்

# வெற்றி என்பது என்ன?



உண்மையில், வெற்றி என்பது ஒரு இடைவிடாத இயக்கம். விதைகளை விதைக்கும் செயல். விதையிலிருந்து மரம். மரத்திலிருந்து மீண்டும் விதை என்று தொடரான இயக்கம். நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறுவதும் தனது அறிவை வளர்த்துக் கொள்வதும் மாணவனின் வெற்றி. நோயாளிகளின் உயிரைக் காத்து ராசிக்காரர் என்று பெயரெடுப்பது மருத்துவரின் வெற்றி. உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவது வழக்குரைஞரின் வெற்றி. அதேபோன்று, தன் உற்பத்திப் பொருளைச் சந்தையில் தரத்துடன் நிலை நிறுத்துவதும், தனது நிறுவனத்தை உலகச் சந்தையில் முன்னணியில் நிறுத்துவதும் ஊழியர்களின் வெற்றியாகும். எனக்கு அதிகமாகத் தேவைப் படுபவர் யார் என்றால்... என்னால் இயன்றதைச் செய்யுமாறு தூண்டும் மனிதர்கள். என்றார் அமெரிக்க அறிஞர் எமர்ஸன். நம்மைச் சுற்றியும் எத்தனை மனிதர்கள், சிறுவர்கள், இளைஞர்கள், நடுத்தர வயது டையவர்கள், முதியவர்கள் என்று எத்தனை மனிதர்கள்! இவர்களுக்குத் தங்கள் இலட்சியம் எது என்று தெரியவில்லை அதற்கான விழிப்புணர்வும் இல்லை. அதனால் தான், அவர்களின் அளவிட முடியாத ஆற்றல்கள் உறங்கிக் கிடக்கின்றன. நடுவயதைக் கடந்த எத்தனையோ பேர் அதன் பிறகு பேரறிஞர்களாக, தொழில் வல்லுநர்களாக வளர்ந்ததை வரலாறுகள் கூறுகின்றன. அதற்கு உந்துகோலாக இருந்தது எது? அது ஒரு சொற்பொழிவாக இருக்கலாம். ஒரு புத்தகமாக இருக்கலாம் அல்லது ஒரு நண்பரின் தனிப்பட்ட அறிவுரையாகவும் இருக்கலாம். தோல்வி அடைந்தவர்களில் பெரும்பாலானோரின் தோல்விக்குக் காரணம் அவர்களை ஊக்குவிக்க யாரும் இல்லாததே காரணம் என்று அறிய முடியும். அதனால் உங்களை ஊக்குவிக்கும் உங்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சூழ் நிலைகளுக்கே எப்போதும் ஆயத்தமாக இருங்கள். உங்களை அறிந்து உங்களுக்கு உதவி செய்யும், நீங்கள் முழு மனிதர்களாக மாற உற்சாக மூட்டும் மனிதர்களுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பதிவுகளை உங்களுக்குப் பிறகும் இந்த மண்ணுலகில் விட்டுச் செல்ல உதவுபவர்களோடு தொடர்பு கொள்ளுங்கள் உண்மையில் ஏற்படும் ஆர்வமானது தொற்று நோயைப் போன்றது. நீங்களும் முன்னேறத் துடிப்போருடன் இருக் கும் காலம் வரை அந்தப் பண்புகளால் ஈர்க்கப்படுவீர்கள். உங்களுக்கு சோம்பல் ஏற்படும் போதெல்லாம் முன்னேறிச் செல்பவர்களின் சுறுசுறுப்பு உங்களையும் உசுப்பி விடும். வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களுக்கான உரைகல் இதுதான். வேண்டா வெறுப்பாக... முக்கி முணகிக் கொண்டு, முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு பணிபுரியும் ஒருவர் இறைவன் அளித்த வாய்ப்பை நிராகரிக்கிறார் என்றுதான் பொருள். யாரொருவர் தனது வேலையை அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஆர்வத்துடன் மதித்துச் செய்கிறாரோ அவர் வாழ்வில் முன்னேறத் தொடங்கி விட்டார் என்றே பொருள்.



நம்முடைய துறைசார்ந்த அல்லது தொழில் எதுவானலும் அதில் நமக்குப் போட்டியாளர்கள் இருப்பது மிகவும் நல்லது. அப்படி இல்லையென்றால் உருவாக்கிக் கொள்ளுங்கள். இறுதியாக உச்சியை அடைய நினைத்தால் ஏறித்தான் ஆகவேண்டும். கால்கள் வலிக்கும், களைப்பாகும் இதெல்லாம் உனக்கு சாத்தியமில்லை என்று மனம் அச்சுறுத்தி பார்க்கும். ஓய்வெடுத்துக் கொள் என்று சபலம் காட்டும். தளராதீர்கள் செய்வதை முழுமையான விருப்பத்துடன் செய்தால் எந்த வலியும் வேதனை தராது. உச்சியை அடைந்ததும் அத்தனை களைப்பும் சுகமாக மாறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்தவர் போல் வழிமறித்து பேசி சங்கிலியை அறுத்த இளைஞர்கள்

### மானிப்பாயில் சம்பவம்

மானிப்பாய், ஜூன் 8

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பெண்களை வழி மறித்து தெரிந்தவர்கள் போன்று உரையாடிய இரு இளைஞர்கள், ஒரு பெண் அணிந்திருந்த 20 பவுண் எடையுடைய சங்கிலியையும், தாலிக் கொடியையும் அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.நகைகளைப் பறி கொடுத்த பெண் இளைஞர்க ளைத் துரத்திச் சென்ற போதும் உதவிக்கு யாரும் இல்லாத தால் திருடர்க ளைப் பிடிக்க முடிய வில்லை.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சுதுமலை, வடக்கு சந்தை ஒழுங்கையில் நடந்துள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த இரு பெண்கள் சுதுமலை வடக்கில் உள்ள உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பியுள்ளனர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவர்களை மறித்துத் தெரிந்தவர்கள் போன்று உரையாடியுள்ளனர். திடீரென பெண் அணிந்திருந்த சங்கிலியையும், தாலிக் கொடியையும் அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர் என்று கூறப்பட்டது.

அதேவேளை நவாலி, அரசடிச் சந்திக்கு அண்மையில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தற்போது வழிப்பறிகளும், சங்கிலி அறுப்புகளும் தடையின்றி நடைபெறுகின்றன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பொலிஸார் இது விடயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தினமும் நடைபெறும் இவ்வாறான செயல்களால் பெண்கள் வீதிகளில் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். (ற)

## பொருளாதாரம் குறித்து விவாதிக்க மஹிந்தவை அழைக்கின்றார் ரவி

நாட்டின் பொருளாதார பின்னடைவு குறித்து விவாதிக்க வருமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 12 வருடகாலமாக பொருளாதாரத்துக்கு பொறுப்பாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதனால் பந்துலவின் சவாலை மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முன்வைப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி நாட்டின் முழு கடன் தொகை ஆயிரத்து 754 பில்லியன் ரூபா ஆகும். ஆனால் அதன் இன்றைய பெறுமதியில் 8 ஆயிரத்து 975 பில்லியனாக கடனை உயர்த்தி அற்புதமான நாடாக ஒப்படைத்துள்ளனர்.

பந்துல குணவர்த்தன நாட்டில் பொருளாதாரம் விழுந்து போய் காணப்படுவதாக அவருடன் விவாதத்துக்கு வருமாறும் சவால் விடுத்திருந்தார்.

இது தொடர்பில் விவாதத்திற்கு பந்துல குணவர்த்தன அல்ல முன் னாள் ஜனாதிபதியே வர வேண்டும். - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.(ற)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மயில்வாகனம்



4 ஆம் வட்டாரம் கோம்பாவிலை நிரந்தரவதி விடமாகக் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்) கடந்த (06.06.2015) சனிக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வியாளம்மா தம்பதியரின் அன்பு மகனும், சோமசுந்தரம் - நாகமுத்து தம்பதியினரின் மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், கெங்காதீஸ்வரன் (வைத்தியகலாநிதி, பொது மருத்துவமனை, பதுளை), மகேஸ்வரி (ஆசிரியை, தவசியாகுளம் அ.த.க பாடசாலை), காலஞ்சென்ற மங்களேஸ்வரி, ரவீந்திரன், கேதீஸ்வரன் (ஆசிரியர், தேவிபுரம் அ.த.க. பாடசாலை), சுஜிதரன் (பதில் சமூக சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரைத்துறைப் பற்று) ஆகியோரின் அன் புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.06.2015)திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தல்லை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

077 1985072

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



# சண்முகம் இராஜேஸ்வரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/கனகரட்ணம் மகா வித்தியாலயம்)

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் பூதவராயர் வீதி, கல்வியங் காட்டை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் இராஜேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கனக ரட்ணம் மகாவித்தியாலயம்) அவர்கள் 06.06.2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சண்முகம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான சீனி வாசகம் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரசிறீ (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) அவர் களின் அன்புக் கணவரும் கீர்த்தனன் (Bio Medical Science-BCAS) அவர்களின் பாசமிகு தந்தையும், காலம்சென்ற தனபால சிங்கம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும், லைலாராணி (UK), சூரிய குமார்(UK), ஜெய சிறீ (UK), ராஜ குமாரன்(UK), சொக்கலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் குண சீலன், அனுலா, பவளராணி ஆகியோரின் சகலனும் மாதவன், பிரதீபா, வருணா, ஜனகன், சாமந்தி, சுயீந்திரன், சுபாங்கிதன், சரவணன், குபேரன், பவித்திரா ஆகியோரின் மாமனாரும் அர்ச் சனா, அபிரா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :-

| | |
|---|---|
| கீர்த்தனன்(மகன்) | 094 077 289 4986 |
| சந்திரசிறீ (மனைவி) | 094 021 222 1821 |
| சூரியகுமாரன் (மைத்துனன்) | 075 060 394 33 |
| இராஜகுமாரன்(மைத்துனன்) | 076 606 452 49 |

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருடனும் பேசியே உள்நாட்டுப் பொறிமுறை

*வெளிவிவகாரப் பேச்சாளர் தெரிவிப்பு*

சிவில் சமூகத்தினர், பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் பேச்சு மேற்கொண்ட பின்னரே போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கான உள்நாட்டு பொறிமுறை குறித்த இறுதி முடிவெடுக்கப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உருவாக்கவுள்ள உள்நாட்டு பொறிமுறை வெற்றியடைவதற்கு சம்பந்தப்பட்ட சகலருடனும் ஆலோசனைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர், குறிப்பிட்ட பொறிமுறைகளை அவசரஅவசரமாக உருவாக்காமல், மிக அவதானமாக தெளிவாக ஆராய்ந்த பின்னரே அவற்றை ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சு இடம்பெறுகின்றன. ஆனால் இறுதி முடிவுகள் எதுவும் எட்டப் படவில்லை. காணமற்போனவர்கள் குறித்த விடயத்துக்கு தீர்வை காண்பதற்காக சுயாதீன பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சு இடம்பெறுகின்றன. அதே வேளை மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்கான பொருத்தமான பொறிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம்.– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ற)

# யாழ். பல்கலை மூன்றாமிடம்

## முதலிடத்தில் ஜெயவர்த்தன பல்கலைக்கழகம்




அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வீதியோட்டப் போட்டியில் யாழ். பல்கலைக் கழகம் மூன்றாம் இடத்தைக் கைப் பற்றியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை நடைபெற்ற இந்த வீதியோட்ட நிகழ்வில் 14 பல்கலைக் கழகங்கள் கலந்து கொண்டிருந்தன. இதில் யாழ். பல்கலைக் கழகம் 82 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைக் கைப் பற்றிய அதேநேரம் முதலாம் இடத்தை ஜெயவர்த்தன பல்கலைக் கழக அணி 106 புள்ளிகளுடனும் இரண்டாம் இடத்தை பேராதனைப் பல்கலைக்க அணி 82 புள்ளிகளை களுடனும் கைப்பற்றியிருந்தன.


குறித்த வீதியோட்டம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு அருகாமையில் ஆரம்பமாகி பலாலி வீதியுடாக திருநெல்வேலிச் சந்தியை அடைந்து ஆடிய பாதம் வீதியூடாக யாழ்.பல்கலைக்கழக கழக மைதானத்தில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம–23)







## கண்ணீர் அஞ்சலி



மறைவு
06.06.2015

### சித்தன் சின்னத்தம்பி

எமது கல்வி நிறுவனத்தின் **இரசாயனவியல் ஆசிரியர் சி.தங்கராசா** அவர்களின் அன்புத் தந்தையார் சித்தன் சின்னத்தம்பி அவர்களின் மறைவை யொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் செலுத்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

நியூ சயன்ஸ் அக்கடமி,
வதிரி, கரவெட்டி.

நிர்வாகமும்,
ஆசிரியர்களும்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுழிபுரத்தில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 8

சுழிபுரம் மத்தி குடாக்கனைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை சங்கானை மதுவரி திணைக் களத்தினர் நேற்றுமுன்தினம் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோர் தப்பி ஓடிவிட்ட நிலையில், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் குறிப்பிட்டளவு லீற்றர்கள் காய்ச்சிய கசிப்பு என்பவற்றைக்கைப்பற்றியதாகத்தெரிவித்தனர்.



சங்கானை மதுவரி திணைக்களப் பொறுப்பதிகாரி கிருபாகரன் தலைமையிலான குழுவினர் கிடைத்த தகவலின்படி குறித்த பகுதியைச் சுற்றி வளைத்து பிடித்தனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சங்கானை மதுவரி திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். சங்கானை பிரதேச செயலகத்தினரும் வலி.மேற்கு பிரதேச சபையினரும் மதுவரித் திணைக்களத்தினருடன் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகஅவர்கள்மேலும்தெரிவித்தனர்.

கடந்த மாதம் இதே பகுதியில் கசிப்புக் காய்ச்சியவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் 32 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நீதிமன்று ஒரு லட்சம் அபரா தம் விதித்ததோடு 4 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்ததாகவும் மேலும் கூறப்பட்டது. இந்நிலையில் நேற்றைய தினம் மற்றொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற–4)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கச்சிப்பிள்ளை பொன்னுத்துரை



பலாலி கிழக்கு, பலாலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத் தி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கச்சிப்பிள்ளை பொன்னுத்துரை கடந்த (06.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசகோபால், நந்தகோபால், கோபால், மற்றும் கிருஸ்ணகோபால், இராசநாயகி, ஆனந்தகோபால் ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணியம், பத்மாவதி, இராசராணி, இராஜேஸ்வரி, விஜயதேவி, காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் ஞானசரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மாமியும், தர்மராசா - சந்திரகலா, தர்மலிங்கம்- சுபாஜினி, காலஞ்சென்ற தர்ம கிருஸ்ணன் மற்றும் தர்சினி-குகன், ராஜகுமார் - துஷாந்தினி, வரதகுமார், சுரேஸ்குமார் - தட்சாயினி, நிஷா -செந்தில், நிதர்சன், கஜானா, கயானி, கம்சினி, கோகுலராஜா - சதுஜா, தர்ம குலராஜா (றமேஸ்) -குமுதா, அச்சுதன் , ஆர்த்தீகன், கம்சிகா, கம்ஷனா ஆகி யோரின் பாசமிகு பேர்த் தியும், தர்சிகன் (மொறட்டுவ பல்கலைக்கழகம், 1ஆம் வருட மாணவன்), தர்சிகா, தஜீபன், தர்சினி, முகேஸ், யானுகா, யனுத், மிதுஷாந், தோழிசன், சுலக்ஷன்,சனுஸ்கா, நவநீதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.06.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அளவெட்டி மத்தி, அளவெட்டி
077 3569125, 077 3649691

தகவல்: தர்மகுலராசா (றமேஸ்) பேரன்

# ரணிலுக்கு எதிரான பிரேரணையில் ஜனாதிபதியின் தலையீடு இருக்காது

*முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன நம்பிக்கை*

கொழும்பு, ஜூன் 8

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலான விவகாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையீடு செய்ய மாட்டார் என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்ற உள்ளன. நாடாளுமன்றின் விவகாரங்களில் ஜனாதிபதி தலையீடு செய்யப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற எவரினதும் ஒத்துழைப்பு அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பதவிக்குப் பொருத்தமற்றவர் என கருதினால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படும் எனவு அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மீது பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கு நம்பிக்கையில்லா விட்டால் அவரை வெளியேற்றுவதில் தவறில்லை என பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (ற)

# உடற்கல்வி ஆசிரியர்களால் விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு



வலி. வடக்கு, ஜூன் 8

வட மாகாணத்ததில் பின்தங்கிய பாடசாலைகளின் விளையாட்டுத்துறையை வளர்க்கும் வகையில் வட மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் வசதிகள் குறைந்த பின்தங்கிய பாடசாலைகளுக்கு சிறியளவிலான உதவிகளை செய்து வருகின்றார்கள்.

இந்த வகையில் வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு குறித்த ஆசிரியர்களால் அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம–86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவி வகிக்க ரணிலே பொருத்தம்

*கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஜூன் 8
ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டின் பிரதமராக இருப்பதற்கு தகுதியானவர் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரியில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வேலை செய்பவர்கள் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவது வழக்கமாகும். அதன் படியே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளார்கள்.
ரணில் விக்கிரமசிங்கவை ஒழிப்பதற்கான திட்டமே அவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க் கட்சியினர் கொண்டு வந்துள்ளமையாகும்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக போட்டியிடும் போது ஜனாதிபதி தெளிவாகக் கூறினார், என்னுடைய அடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான், அவரைத்தான் நான் பிரதமராக நியமிப்பேன் என்று கூறினார்.
ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவேன் என்று கூறியதன் பின்னர் தான் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் வட கிழக்கு மற்றும் மலையக சிறுபான்மை மக்களும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் அன்னச் சின்னத்துக்கு வாக்களித்தார்கள்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் நெருங்கிய உறவு உண்டு. எதையும் பொறுமையுடன் தாங்கக் கூடியவர்தான் பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்க. நாடாளுமன்றத்தில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவை யார் தூற்றினாலும் அவர் சிரித்துக் கொண்டே போவார். அதுதான் அவருடைய பெரும் தன்மை. அப்படியான ஒரு பிரதமரே நமது நாட்டுக்கு தேவையாகும். எதிர் காலத்திலும் அவரே பிரதமராக வேண்டும் என நான் கூற விரும்புகின்றேன்.- என்றார். (ற)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு வெற்றி உறுதி

*அமைச்சர் லக்ஸ்மன் கிரியலெ தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 8
எதிர்க்கட்சிகள் துண்டு துண்டாக பிளவடைந்துள்ளன என்று தெரிவித்துள்ள அமைச்சர் லக்ஸ்மன் கிரியலெ, அதனால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகத்தன்மை ஏற்படும்.- என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-
ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டக் கூடிய அளவிற்கு வெற்றியீட்டுவது உறுதி. இந்த அரசு புதிய அரசு என்பதனைப் போன்றே வித்தியாசமானது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி. அந்த இருவரும் இணைந்து செயற்படுகின்றார்கள் என்றால் ஊர்களில் இருக்கும் எம்மால் ஏன் இணைந்திருக்க முடியாது.
ஊர்களில் இருக்கும் நாம் பிளவடையக் கூடாது. - என்று அவர் தெரிவித்துள்ளார்.
கண்டி ஹேவாஹெட்ட பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# கொலைக் குற்றச்சாட்டை மறுக்கின்றார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 8
தமக்கு எதிரான கொலைக் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.
அண்மையில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மஹிந்த ராஜபக்ஷ மீது கொலைக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.
கொலைச் சம்பவமொன்றுடன் மஹிந்தவுக்கு தொடர்பு இருப்பதாக, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மிடம் கூறியதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தார்.
தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான பரப்புரைகள் செய்யப்படுவதாகவும், இந்த குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக அவரது ஊடகப் பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார். 20 ஆண்டுகளுக்கு முன்னதாக ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
மஹிந்த ராஜபக்ஷ இரண்டு பேரை சுட்டுக் கொலை செய்திருந்ததாகவும் குற்றச்சாட்டிலிருந்து விடுதலையாக தற்போதைய அமைச்சர் ஜோன் செனவிரட்ன ஒத்துழைப்பு வழங்கியிருந்தார் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறியதாக ரஞ்சன் ராமநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். (ற)


# மஹிந்த அணியின் சூழ்ச்சி வெற்றிப்பாதையை நோக்கி

*தோற்கடிக்க ஜனாதிபதி, பிரதமர் உடன் தலையிடவேண்டும் என்கிறது ஜே.வி.பி.*

கொழும்பு, ஜூன் 8
நாடாளுமன்றத் தேர்தலைக் குறிவைத்து மஹிந்த அணி சூழ்ச்சித் திட்டமொன்றை வகுத்துவருவதாகவும்,இதற்காக பதுக்கிவைக்கப்பட்டுள்ள பணம் பயன்படுத்தப்படலாம் எனவும் ஜே.வி.பி. நேற்று சுட்டிக் காட்டியது. எனவே, மஹிந்த அணியின் சூழ்ச்சித்திட்டத்தை தோற்கடிப்பதற்காக ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாகத் தலையிட வேண்டும் எனவும் அக்கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்படி கருத்துகளை வெளியிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதியாக இருந்தபோது அனைத்து அதிகாரங்களைப் பயன்படுத்தியும் மஹிந்தவால் தேர்தலில் வெற்றிபெறமுடியாமல் போனது. எனவே, தன்னால் பிரதமராக முடியாது என்ற விடயம் மஹிந்தவுக்கும் தெரியும். எனினும், தனக்கு எதிராகவும், தனது குடும்பத்துக்கு எதிராகவும், தனது விசுவாசிகளுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை மூடிமறைப்பதற்காகவே மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு அவர் முயற்சிக்கிறார்.
மேற்படி தரப்புகளுக்கு எதிரான விசாரணையை கைவிடப்போவதாக அறிவித்தால் நாளையே மஹிந்த மெதமுலன இல்லத்தில் முடங்கிவிடுவார் என்பதும் எமக்குத் தெரியும். அவ்வாறு விசாரணைகளை கைவிடமுடியாது. மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காகவே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.
ஆகவேதான், குழுவொன்றை அமைத்து விசாரணைகளைத் திசை திருப்புதவற்கும், முடக்குவதற்கு மான வியூகத்தை மஹிந்த வகுத்து வருகிறார். இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் விசாரணைகள் தற்போது முடங்கியுள்ளன. இதற்கு மஹிந்த அணியின் தலையீடுதான் காரணம். அரசமைப்புப் பேரவை அமைக்கப்பட்டால், ஆணைக்குழுக் களை நியமிக்கலாம். இதைத் தடுப்பதற்காகவே நாடாளுமன்றத்தில் மஹிந்த குழு தொடர் குழப்பங்களில் ஈடுபட்டு வருகிறது.
மஹிந்த அணியின் அடுத்த இலக்காக நிதிமோசடி விசாரணைப் பிரிவு இருக்கிறது. இதற்கு எதிராக பலர் வழக்குகளைத் தொடுத்த வண்ணமுள்ளனர். மஹிந்தவின் விசுவாசியொருவர், மேற்படி பொலிஸ் பிரிவில் அங்கம் வகிப்பவர்களைக் கல்லெறிந்து கொலை செய்யப்படுவார்கள் என மிரட்டியுள்ளார்.
இவ்வாறு மஹிந்தவின் சூழ்ச்சித் திட்டம் அங்கம் அங்கமாக நிறைவேறிவருகிறது. இந்நிலைமை தொடர்ந்தால், தோல்வியுற்ற அணி மீள எழக்கூடும். ஒளித்துவைத்துள்ள பணத்தைப் பயன்படுத்துவார்கள். அடுத்த தேர்தலில் அதன் பயன்பாட்டைப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.
இவ்வாறானதொரு நிலைமைக்கு ஜனாதிபதியினதும், பிரதமரினதும் அசமந்தமான செயற்பாடே காரணமாகும். குறிப்பாக, பஸில் ராஜபக்ஷவை கைதுசெய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறை, லலித் வீரதுங்க விடயத்தில் கையாளப்படவில்லை. அவருக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் தாமதமாகிவருகின்றன.
ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தவேண்டுமானால், சு.கவை இரண்டாக உடைக்கவேண்டும் என்ற நோக்கில் பிரதமரும், சு.கவின் தலைமைப் பதவியை தக்கவைத்து கொள்ளவேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதியும் செயற்படக்கூடாது. மக்களின் ஆணைக்கு மதிப்பதித்து மோசடிக் காரர்களைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார். (ற)

# மக்கள் ஆணையின்படியே பிரதமராக பதவியேற்றேன்

*ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்*



கொழும்பு, ஜூன் 8
மக்களின் ஆணையின் அடிப்படையிலேயே தாம் பிரதமராக நியமிக்கப்பட்டதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
100 நாள் திட்டத்தின் கீழ் தம்மை பிரதமராக நியமிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்திருந்தார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து அவர் மீதான வெறுப்பினை மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உடனடியாக நாடாளுமன்றை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு எனவும், மக்களுக்கு அளித்த 100 நாள் திட்டத்தின் அடிப்படையில் தம்மை பிரதமராக நியமித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் மக்களுக்கு தேவையில்லை என்றால் அவர்கள் தம்மை நிராகரிப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ளும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற)

# ஷிராணியின் மகன் சவீன் விரைவில் அரசியலில்?

கொழும்பு, ஜூன் 8
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் மகன் சவீன் பண்டாரநாயக்க காரியவாசம் அரசியலில் நுழைவது குறித்த தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில பத்திரிகையொன்றிற்கு அளித்துள்ள செவ்வியில் அரசியலில் நுழைவீர்களா? என்ற கேள்விக்கு சாதகமான விதத்தில் பதிலளித்துள்ள அவர் நாட்டில் நிலவும் அரசியல் கலாச்சாரம் குறித்து தனக்கு அதிருப்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தின் கீழ் உடனடியாக தனக்கான தேவையுள்ளதாக தான் கருதவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.
தற்போதைய அரசியல் கலா சாரம் நல்ல மாற்றங்களை சந்திக்கும், அப்போது நாட்டின் அரசியலில் தன்னை போன்றவர்கள் சிறந்த பங்களிப்பை செய்ய கூடிய காலம் உருவாகும் என தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ற)

**இறைச்சிக்கோழி விற்பனை**
புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும்,சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில்.
சுத்தம் செய்யப்பட்டது 450/=
10kg மேல் கொள்வனவு செய்வோருக்கு 430/= மட்டும்.
விஜயகுமார் சூளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு: 077 868 9500

**அராலி விநாயகர் ஆலயம்**
**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்**
மேற்குறிப்பிட்ட ஆலயத்தில் பின்வரும் கருமங்கள் ஆற்றக் கூடியவர்கள் தேவை.
1.காரியாலய கடமைகளான அர்ச்சனைச்சீட்டு விற்பனை மற்றும் கணக்குகள் பார்ப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. அனுபவமுள்ள ஓய்வூதியர் விரும்பத்தக்கது.
2.மடப்பள்ளிவேலைகளுக்கு அனுபவம் உள்ளவர் தேவை.
அமைய அடிப்படையில் ஆயினும் ஏற்றுக்கொள்ளப்படும்.
021 221 7864, 077 923 1899
நிர்வாகத்தின் சார்பில் செயலாளர்

**விற்பனைக்கு உண்டு**
மாலை சந்தை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயத்தில் (மாலு சந்திப்பிள்ளையார் கோயில்) பொழிந்த வெள்ளை கற்களும், மரங்களும், சிலாகைகளும் விற்பனைக்கு உண்டு. கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு நேரில் வந்து பார்வை யிடலாம்.
021 226 4820
021 226 4227
021 226 4547
ஆதீனகர்த்தா
மாலை சந்தை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயம்,
மாலு சந்தி, அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தி அதை வீடியோ எடுத்து மிரட்டிய இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 8
இளைஞர் ஒருவரை ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தி அதனை வீடியோ எடுத்து அதை வைத்து மிரட்டினர் என்ற குற்றச்சாட்டில் பாஷையூர், குருநகர் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூரைச் சேர்ந்த ஒருவரே ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதை கைபேசியில் வீடியோ எடுத்துள்ளனர். குறித்த மூவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் யாருக்காவது கூறினால் – பொலிஸாருக்கு அறிவித்தால் வீடியோவை இணையத்தில் பதிவேற்றி விடுவோம் என்று குறித்த இளைஞன் மிரட்டப்பட்டார் என்றும், பணம் கேட்டு மிரட்டினர் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனையடுத்து குறித்த இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். அது தொடர்பில் திட்டமிட்டுச் செயற்பட்டு இருவரையும் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

# பிரபா சிலை அகற்றலால் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில், தலைவர் பிரபாகரனின் சிலையை அகற்றிய விவகாரம் பூதாகரமாக மாறியுள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து, நாளை செவ்வாய்க்கிழமை, நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே மதிமுக சார்பில் கருப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர் பிரபாகரன் அவர்களுடைய உருவப் படம் பொறிக்கப்பட்ட பனர்களை அகற்றுகின்ற வேலையில் அ.தி.மு.க. அரசு ஈடுபட்டது. ஆனால், பொய்கை நல்லூர் தமிழர்கள் சிலை அமைத்து இருந்தனர். இப்போது அந்தச் சிலையை அகற்றி இருக்கலாம். இல்லந்தோறும் அவரது திரு உருவப் படம் அலங்கரிப்ப தைத் தடுக்க முடியாது. என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார். (ற-5)

## பெற்றோர்

அவர்களில் 12 பேர் தற்கொலை செய்துள்ளனர்.
கிளிநொச்சியில் 20 பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். அவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். முல்லைத்தீவில் 7 பேர் தற்கொலைக்கு முயன்று 3 பேர் உயிரிழந்துள்ளனர். வவுனியாவில் 9 பேர் தற்கொலைக்கு முயன்று 3 பேர் உயிரிழந் துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 3 பேர் தற்கொலைக்கு முயன்று ஒருவர் உயிரிழந்துள்ளார். மன்னாரில் 3 பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர் என்று புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## துன்னலைப்

இவ்வாறு துன்னாலை பகுதியில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான வாள்வெட்டு சம்பவங்களில் இதுவரை இரு பெண்கள், மூன்று ஆண்கள் உட்பட ஐவர் வெட்டுக் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இரு தரப்புகளுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையே இந்த வாள் வெட்டுக்குக் காரணம் எனப் பொலிஸார் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து நேற்றுப் பிற்பகல் வரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும், துரித விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி குடவத்தை பகுதியில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான வாள்வெட்டுகள் அப்பகுதியில் பதற்றமான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றன.

களவாக மணல் ஏற்றுவது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்குவதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் மீது அப் பகுதியைச் சேர்ந்த கும்பல் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை வாள் வீச்சை நடத்தியது. இவ்வாள் வெட்டுக்கு இலக்காகி துரை சிங்கம் பிரபு (வயது–29) என்ற இளைஞர் கை, கால் பகுதிகளில் வெட்டுக் காயத்துக்கு இலக்காகி படுகாயமடைந்திருந்தார். இந்த நிலையில் குறித்த இளைஞரை வாளால் வெட்டிக்காயப்படுத்தியதாக இளைஞர் தரப்பில் குற்றம் சாட்டப்படும் பொன்னையா பொன்னுத்துரை என்பவரின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் நள்ளிரவு நேரம் அத்துமீறிப் புகுந்த கும்பல் சரமாரியாக வாள் வீச்சை நடத்தியுள்ளது. இதில் வீட்டில் இருந்த தந்தையும், தாயும், மகளும் படுகாயமடைந்திருக்கின்றனர். இவர்கள் மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த பொன்னுத்துரை, அவரது மனைவி பவானி, மகள் பொன்னுத்துரை பொன்சியா (வயது–18) ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர்.

இதேவேளை, இவர்கள் வெட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரங்களுக்குள் மேலும் ஒரு இளைஞர் வெட்டுக்காயத்துடன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துன்னாலையைச் சேர்ந்த இராசன் நந்தகுமார் (வயது–29) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் வெட்டுக் காயத்துடன் அனுமதிக்கப்பட்ட நபரின் மைத்துனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (த-109)

## நம்பிக்கையில்லா

வினவியபோது,
பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 112 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். இருப்பினும், ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கையொப்பங்களை இரு தடவைகள் பதிவுசெய்துள்ளனர்.

நான் ஆராய்ந்ததன் அடிப்படையில் 108 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. ஒரு சிலரே இரு தடவைகள் கைச்சாத்திட்டுள்ளனர். எது எவ்வாறிருப்பினும், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம்'' –என்றார். (த–சி)

## எழிலன்

வழங்க வில்லை' என்று கனிமொழி, 'த ஹிந்து' ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலன், கனிமொழியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பின்னரே, இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தார் என்று, எழிலனின் மனைவியும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அனந்தி சசிதரன், முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில், கனிமொழியிடம் 'த ஹிந்து' ஊடகம் வினவியது. இதன்போது பதிலளித்த அவர், நான் இந்திய அரசினதோ இலங்கை அரசினதோ அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் அல்ல. இவ்வாறான செய்திகளின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை.

அத்துடன், எனக்குச் சசிதரன் யார் என்றே தெரியாது. செய்மதித் தொலைபேசி மூலம் அவருக்கு ஆலோசனை கூறியதாகச் சொல்வது முற்று முழுவதும் தவறானது. போர் அதி உச்சக் கட்டத்தில் இருக்கும்போது, ஒருவரை இலங்கை இராணுவத்திடம் சரணடையுமாறு யாராவது கூறுவார்களா?'' எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (த-5)

## 9 முதலமைச்சர்

மாகாணங்களினதும் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், செயலாளர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னோடியாகவே இன்றைய விசேட கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திடீரென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடல், இன்று இரவு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு 9 மாகாண முதலமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வடக்கு மாகாண முதலமைச்சர் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்க கொழும்பு பயணமாகியுள்ளார். (த-5)

## வடக்கில்

வதற்கான சந்திப்பொன்று இன்று கொழும்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

மாகாணசபையுடன் தொடர்புடைய சமூக பிரச்சினையொன்று தொடர்பாக மத்திய அரசுடன் சேர்ந்து வடமாகாண சபை முயற்சிகளை மேற்கொள்வது இதுவே முதல் தடவை என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவி படுகொலையின் பின்னர் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தபோது செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து போதைப் பொருள் ஒழிப்பு குறித்து ஜனாதிபதி கவனஞ்செலுத்தியுள்ளார்.

வடக்கில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

மஹிந்த அரசு ஆட்சி வகித்த காலத்தில் பாதுகாப்புத் தரப்பினர் திட்டமிட்ட வகையில் வடக்கில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிக்க வழியமைத்ததாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றஞ்சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## சினிமா பாணியில்

நொருக்கப் பட்டதோடு அந்த இடம் இரத்தம் சிந்திய நிலையில் காணப்பட்டது.

யாழ்.கஸ்தூரியார் வீதியில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. மதுபான நிலையம் ஒன்றை அண்மித்து இருதரப்பினருக்கிடையே முரண்பாடு ஏற்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து புல் வெட்டும் இரும்பினால் அங்கு நின்றிருந்த மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்த இடத்திலிருந்து தப்பியோடிய ஒருவரையே இனந்தெரியாத சிலர் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்றனர். அவர் அதே வீதியில் உள்ள மற்றொரு கடைக்குள் புகுந்துள்ளார். அங்கு அவரைத் தாக்கியுள்ளனர். அதனால் தாக்க வந்தவர்களில் ஒருவரின் கை கண்ணாடியைத் தாக்கியதால் கண்ணாடி நொருங்கியது. அவரது கையிலிருந்து இரத்தம் பீறிட துரத்திச் சென்ற நபரையும் அவர்கள் தமது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அந்த நேரம் கஸ்தூரியார் வீதியில் ஒருவர் வாளுடன் நின்றிருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. தாக்கியவர்கள் ஆபத்தை விளைவிக்கும் ஆயுதங்களுடன் நின்றிருந்தமையால் பொதுமக்கள் அதனைத் தடுக்க முற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் சில நிமிடங்களில் அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது. சம்பவங்கள் தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்துக்குப் பின்னர், கையில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-4)

## பிரபாவின்

பாக்கி மற்றும் தமது உறுப்பினர்களை அடையாளம் கண்டுகொள் வதற்காகப் புலிகள் பயன்படுத்திய இலக்கத்தகடு என்பன காணாமற்போயுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து வினவியபோதே இராணுவ ஊடகப் பேச்சாளர் உதயனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் செய்தியை வெளியிட்டவர்களிடம்தான் இதுபற்றி கேட்க வேண்டும். எம்மிடம் இது பற்றிய தகவல்கள் பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அப்படியாயின், பிரபாகரன் சடலமாக மீட்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரிடமிருந்து கைத்துப்பாக்கியோ அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளும் இலக்கத்தகடோ இராணுவத்தினரால் மீட்கப்படவில்லையா என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

பிரபாகரன் சடலமாக மீட்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது சடலத்தில் கைத்துப்பாக்கி இருக்கவில்லை. மீட்கப்படவுமில்லை; மீட்கப்பட்டதாக எம்மிடம் தகவல் பதிவாகவுமில்லை. இருப்பினும், இலக்கத்தகடு குறித்து நான் சற்று ஆராய்ந்து கூறவேண்டும்'' –என்றார். (த–சி)

## வடக்கில் கடந்த

முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதன்படி அங்கு 21 முறைப் பாடுகளும், முல்லைத்தீவில் 13 முறைப்பாடுகளும், வவுனியாவில் 13 முறைப்பாடுகளும், மன்னாரில் 8 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்தில் 7 முறைப்பாடுகளுமாக 62 முறைப்பாடுகள் வடக்கில் பதிவாகியுள்ளன.

இவற்றைவிட உடலியல் ரீதியான அடித்தல் – துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகளாக வடக்கில் 128 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் கிளிநொச்சியில் 69 முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் 11 முறைப்பாடுகளும், மன்னாரில் 12 முறைப்பாடுகளும், வவுனியாவில் 16 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்தில் 20 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

சிறுவர்களை மன ரீதியாகத் துன்புறுத்தும் வகையில் வடக்கில் 60 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதிகளவாக அவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. அங்கு 47 முறைப்பாடுகளும், முல்லைத் தீவில் 6 முறைப்பாடுகளும், வவுனியாவில் 5 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்தில் 2 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை விடக் கடந்த ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையான காலத்தில் மாத்திரம் வடக்கில் பாலியல் முறைகேடுகள் தொடர்பில் 23 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் புள்ளி விபரத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றை விடக் கடந்த மாதம் 10 நாள்களில் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் முறைகேடுகள் பற்றிய 14 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அமைச்சர் ராதாகிருஷ்ணன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## தமிழரின்

யிட்டுள்ளனர்
என்றும், இதனைத் தாம் நிராகரிப்பதுடன் கடுமையாகக் கண்டிக்கின்றோம் என்றும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள தரப்பினர் தெரிவித்துள் ளனர்.

லண்டன் உயர்மட்டக் கூட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் விரைவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும், வடக்கு, கிழக்குத் தமிழர்களின் உடனடித் தேவைகள் குறித்தும் மாத்திரமே இந்தக் கூட்டத்தில் பேசப்படுகின்றன.

லண்டன் பேச்சுகள் குறித்து தாங்கள் எதனையும் பகிரங்கப்படுத்தவில்லை. ஆனால், தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் சில தரப்பினர் பிழையான –பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளனர். இதனை நாம் அடியோடு நிராகரிப்பதுடன் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் சர்வதேச சமூகம் ஆற்றக்கூடிய பங்களிப்புள்ளது. அதன் காரணமாகவே சர்வதேச பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்'' –என்றார்.

இதேவேளை, லண்டன் பேச்சுகளில் கலந்துகொண்டவர்கள் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வது குறித்தே கவனம் செலுத்துகின்றனர் எனவும், அடுத்தகட்ட பேச்சுகள் டுபாயில் நடைபெறவுள்ளன எனவும் உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார். (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.மேரிஸ் எதிர் டைமன்ஸ் இறுதியில் நேருக்குநேர்


வதிரி டைமன்ஸ்


சென்.மேரிஸ்

யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஞான முருகன் அணியை வீழ்த்தியதன் மூலம் சென்.மேரிஸ் அணியும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யங் ஹென்றிஸை வீழ்த்தியதன் மூலம் டைமன்ஸ் அணியும் இறுதியாட்டத்தில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

*ஞானமுருகன் எதிர் சென்.மேரிஸ்*

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறித்த தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் பதின்ம நிமிடத்திலேயே (17ஆவது) யக்சனின் கோல் விளாசல் மூலம் சென். மேரிஸின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற ஆரம்பித்தது. பழிதீர்க்க வேண்டும் என்ற ஞான முருகனின் முனைப்பு ஆட்டத்தில் அதிகமான பதட்டத்தை ஏற்படுத்த ஆட்டம் தானாகவே பார்வையாளர்களுக்கு விருந்தாகியது. ஞான முருகனின் முயற்சிகள் அனைத்தும் சென். மேரிஸால் ஊதித் தள்ளப்பட முதலாம் பாதியின் முடிவில் சென். மேரிஸ் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் போராடத் தவறவில்லை ஞான முருகன். போராட முடிந்ததே தவிர ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இரண்டாவது கோலும் யூட்டின் உதவியால் சென். மேரிஸ் சார்பாகப் பதியப்பட ஆட்டத்தின் முடிவில் சென்.மேரிஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

*டைமன்ஸ் எதிர் யங் ஹென்றிஸ்*

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் டைமன்ஸ் அணியை எதிர்த்து யங் ஹென்றிஸ் அணி மோதியது. ஆட்டத்தில் இறுக்கமான நிலைமை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 5ஆவது நிமிடத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் பிறேம் குமார் தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். பதிலுக்கு ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் வீரன் ஞானறூபன் பழி தீர்த்து டைமன்ஸின் ஆதிக்கத்தை தவிடுபொடியாக்கினார். மேலும் ஒரு கோலைப் பெற்றிட வேண்டும் என்பதுக்காகப் படாத பாடுபட்டனர் இரு அணி வீரர்களும். ஓயாத போராட்டத்துக்கு ஏற்றாற்போல் பந்து அங்கும் இங்குமாக அல்லோல கல்லோலப் பட்டது. டைமன்ஸின் வீரர் துசி பதினெட்டாவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்து ஆட்டத்தின் சமநிலைப் போக்கை இல்லாமல் செய்தார். முதலாம் பாதியின் முடிவில் டைமன்ஸ் 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் யங் ஹென்றிஸ் சார்பாக ஒரு கோல் பதிவு செய்யப்படாலும் டைமன்ஸின் வேகம் அபாரமாக எழுச்சி கண்டது. இரண்டாம் பாதியில் டைமன்ஸ் சார்பாக அடுத்தடுத்து மூன்று கோல்கள் மேலதிகமாகப் பதியப்பட முடிவில் டைமன்ஸ் 5:2 என்ற கோல் கணக் கில் யங் ஹென்றிஸை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

*அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த கிண்ணம்*

யாழ்ப்பாணம், ஜூன். 8

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறை யிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்மன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

*கொலின்ஸ் வி.க.தொடர்*

வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-108)

### ஹாட்லி யைற்ஸை தோற்கடித்து சம்பியனானது
## திருநெல்வேலி கிரிக்கெட் கழகம்



யாழ்ப்பாணம் ஜூன் 8

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக்கழக அணியை 68 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி 37.4 (40) பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 255ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக மிதுன் 81 ஓட்டங்களையும், சுரேஸ் 55ஓட்டங்களையும், சுரேந்திரன் 25ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரதீப் 4 இலக்குகளையும், நிசாந் மற்றும் சாகித்யன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

240 பந்துகளில் (40 பந்துப்பரிமாற்றங்களில்) 256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக்கழக அணி 37.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 187ஓட்டங்களைப் பெற்று 68 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக தீபன் 30ஓட்டங்களையும், நிதர்சன் 34 ஓட்டங்களையும், நிசாந்தன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட்கழக அணிசார்பில் ஜிவிதாசன் 4 இலக்குகளையும், கபில்ராஜ், மற்றும் சிவராஜ் 2 இலக்குகளையும், வீழ்த்தினர்.

சிறந்த பந்து வீச்சளாராக திருநெல்வேலி கிரிக்கெட்கழக வீரன் ஜீவதாசனும் சிறந்த களத்தடுப்பாளராக ஹாட்லி யைற்ஸ் வீரன் தீபனும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக திருநெல்வேலி கிரிக்கெட்கழகத்தின் கே. சுரேஸனும் ஆட்டநாயகனாக திருநெல்வேலி கிரிக்கெட்கழகத்தின் விதுனும் தெரிவானார்கள்.(ம-23)

# சென். பீற்றர்ஸ், சென். அன்ரனீஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி



கரணவாய், ஜூன் 8

கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தின் தொடரில் குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

*சென்.பீற்றர்ஸ் எதிர் கரவைச்சுடர்*

கரணவாய் கொலின்ஸ் விளயாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கிங் ஒவ் யப்னா கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடர் தற்பொழுது கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி



கரவை சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பத்தில் சமநிலைப்போக்கு காணப் பட்டாலும் ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் கரவை சுடர் வீரன் [illegible] தற்காலிகமாக தடுக்கப்பட்டு கரவைச் சுடரின் ஆதிக்கம் அதிகரித்து. மறு நிமிடமே சென். பீற்றர்ஸ் அணியின் முன்கள வீரர் அசோக்குமார் கோலொன்றை விளாசி பழி தீர்க்க ஆட்டத்தின் முதல்பாதி வரை மீண்டும் சமநிலை நிலைகொண்டது.

இரண்டாவது பாதியின் 12 ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர்ஸ் அணியின் மற்றொரு வீரர் சுகந்தன் தமது அணிக்கான இரண்டாவது கோலைப் போட ஆட்டத்தில் பீற்றர்ஸின் ஆதிக்கம் அதிகரித்தது. ஆட்டத்தின் முடிவு வரை இதே நிலைமை தொடர முடிவில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற அடிப் படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதியானது.

*சென்.அன்ரனிஸ் எதிர் நசரெத்*

அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு நசரெத் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. திரில் வெற்றிக்கு இலக்கணமாக அமைந்த இந்த ஆட்டத்தில் ஆட்டத்தின் முதல் பாதிவரை எந்த அணி சார்பாகவும் கோல் பதிவு செய்யப் படவில்லை.

முதல் பாதியில் மட்டுமல்லாது இரண்டாவது பாதியிலும் இந்த நிலைமை நீடிக்கவே செய்தது. அதாவது ஆட்டத்தின் முதல் 86 நிமிடங்கள் வரை எந்த அணியும் கோல் கணக்கை ஆரம்பிக்கவில்லை. எனவே ஆட்டம் சமநிலையில்தான் நிறைவடையும் என்ற பொதுவான அபிப்பிராயங்களை பொய்யாக்கும் விதமாக மணற்காடு அணி வீரர்களான கவாஸ்கர் மற்றும் சுஜீவன் ஆகியோர் இறுதி நான்கு நிமிடங்களில் அடுத்தடுத்து இருகோல்களைப் போட சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திஜீவிகள், கல்விமான்களை தேர்தலில் களமிறக்கும் ஜே.வி.பி.

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) புத்திஜீவிகளையும் கல்வி மான்களையும் உள்ளடக்கிய குழுவொன்றைக் களமிறக்கவுள்ளதாக அக் கட்சியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.



தனது கட்சி நாடெங்கும் மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், பிரதேச அமைப்பாளர்கள் எனத் தகுதிவாய்ந்த குழுக்களைத் தற்போது நியமித்துவருவதாகத் தெரிவித்த ரில்வின் சில்வா, நாடெங்கு முள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள், மக்களின் அபிமானம் பெற்றவர்கள், தொழிலதிபர்கள் போன்றோரை உள்ளடக்கிய வேட்பாளர்கள் மூலம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறக்கவுள்ளதாகவும் கூறினார்.
பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (த)

# 3 மணித்தியாலங்களுக்கு ஒரு வன்புணர்வு சம்பவம்

## பதிவாகின்றது இலங்கையில்

கொழும்பு, ஜூன் 8
இலங்கையில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு வன்புணர்வு சம்பவம் பதிவாகி வருகின்றது என்றும், தற்கொலைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன என்றும் ஜே.வி.பி. தகவல் வெளியிட்டது.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இந்தத் தகவலை வெளியிட்டார்.
உலகில் தற்கொலைகள் அதிகளவு இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில்உள்ளது. அத்துடன், குற்றச்செயல்களும் தலைவிரித்தாடு கின்றன.
குறிப்பாக, ஒவ்வொரு மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு பாலியல் வன்புணர்வு சம்பவம் இடம்பெறுகிறது. பொலிஸாருக்கு பதிவாகாத பல சம்பவங்களும் உள்ளன.
சமூகசீர்கேடே இதற்கு காரணமாகும். இவற்றை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்–என்றார்.(த)

# கோத்தாவுக்கு எதிரான விசாரணை தொடரும்

## தளர்வில்லை என்கிறது நிதி மோசடிப் பிரிவு

கொழும்பு, ஜூன் 8
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பிலான விசாரணைகளில் பல உண்மைகள் வெளிப்பட்டுள்ளதால் அவருக்கு எதிரான விசாரணைகள் தொடரும் என்றும் நிதி மோசடி குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
மிக் – 27 விமானக் கொள்வனவு ஊழல் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு முன்னாள் பாதுகாப் புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழங்கியுள்ள விளக்கத்தை பொலிஸ் மோசடி தவிர்ப்புப் பிரிவு நிராகரித்துள் ளது.
இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக அனைத்து ஆவணங்களும்கல்கிஸை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக கோத்தபாய குறிப்பிட்டிருந்தார்.
எனினும், அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நிதி மோசடி குற்றத்தடுப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
எமது விசாரணைகளில் பல உண்மைகள் வெளிப்பட்டுள்ளன. மிக் விமானக் கொள்வனவின் போது பல மில்லியன் டொலர்கள் ஊழல் செய்யப்பட்டுள்ளன. இதற்காக கோத்தபாய குழுவினர், பிரிட்டிஷ் வேஜினியா தீவில் வங்கிக் கணக்கொன்றைத் திறந்து அதன் மூலம் பணப்பரிமாற்றம் செய்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன என குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பெற்றோருடன் சேர்ந்து செல்ல மறுத்தார் சிறுமி

## நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 8
தனது பெற்றோருடன் சேர்ந்து வாழ மறுப்பு தெரிவித்த 16 வயதான சிறுமியை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இந்தச் சம்பவம் கண்டி அலவத்துகொடை பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.
கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிறுமி தனது 14 வயதில் இளைஞர் ஒருவருடன் சென்று வாழ்க்கை நடத்தி வந்துள்ளார்.
இந்நிலையில் ஒரு வருடத்தின் பின்னர் சிறுமியை மீட்ட பொலிஸார் பெற்றோருடன் சேர்த்துள்ளனர். தற்போது சிறுமி பெற்றோருடன் முரண்பட்டு உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கிய நிலையில் மீண்டும் பொலிஸார் சிறுமியைப் பெற்றோருடன் சேர்த்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இதற்கு குறித்த சிறுமி இணங்க மறுத்த நிலையில் தற்போது கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த–ரி)

# ரூ. 50 கோடி நட்டஈடு கோரி ஜோன்ஸ்டன் மனுத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 8
நிதிமோசடிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவுமின்றி தன்னைக் கைதுசெய்து சிறையில் அடைத்தன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அதற்கு நட்டஈடாக 50 கோடி ரூபாவைப் பெற்றுத்தர வேண்டுமெனவும் கோரி முன்னாள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உச்சநீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.
இந்த மனுவில் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சரத் தஹநாயக்க, நிதிமோசடிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான ரவி வைத்தியாலங்கார ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
லங்கா சதொச நிறுவனத்தில் தான் 52 இலட்சம் ரூபாவுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்தபின் அதற்கான பணத்தைச் செலுத்தாமல் மோசடி செய்ததாகப் பொய்க் குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனவும் தான் அந்தப் பணத்தை சதொசவுக்கு ஏற்கனவே செலுத்தியிருந்ததாகவும் இந்தப் பொய்க் குற்றச்சாட்டின் கீழ் தன்னைக் கைது செய்து சிறையில் அடைத்தது முற்றிலும் சட்டவிரோத மானது எனவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (த)

# நீதிமன்றின் நேரத்தை வீணடிக்க வேண்டாம்

## புலனாய்வுப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூன் 8
வெறுமனே அறிக்கைகள் என்ற பெயரில் கடதாசிகளைக் குவித்து நீதிமன்றத்தின் பெறுமதியான நேரத்தை வீணடிக்காமல் வழக்கின் சந்தேக நபர்களை முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் நிதி மோசடி புலனாய்வுப் பொலிஸ் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.
நிதி மோசடி வழக்குகள் சில தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணை அறிக்கைகளைச் சமர்ப்பித்து வழக்குத் தவணை கேட்ட போதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.
ஊழியர் நம்பிக்கை நிதிய நிதி மோசடி, லங்கா ஹொஸ்பிட்டல் மற்றும் கெரவலபிட்டிய மின் நிலைய நிதி மோசடிகள், முன்னாள் வீடமைப் புத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ தனது உறவினர்களுக்கு வீடுகளை வழங்கியமை ஆகிய வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நிதிமோசடி புலனாய்வுப் பொலிஸார் மேலதிக விசாரணை அறிக்கை களை சமர்ப்பித்த போதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டதுடன் அவ் வழக்குகளை ஜூலை மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த)

# 9 இல் விவாதிக்கும் சாத்தியம் இல்லை

கொழும்பு, ஜூன் 8
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப் பட்டுள்ளபோதும், எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் இந்தப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என அறியமுடிகின்றன.
நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகளுக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்குள் போதுமான கால அவகாசம் இல்லாததன் காரணமாகவே அன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் அரிதாகக் காணப்படுகின்றது.
சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையானது தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படும்.
விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் பிரேரணையானது நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் குறைந்தது 5 நாள்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அதன் பின்னர்தான் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பது நாடாளுமன்றச் சம்பிரதாயமாகும்.
இவ்வாறான நிலையில், நேற்றுக் கையளிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையானது இன்றும், நாளையும் விடுமுறை தினமென்பதால், எதிர் வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை அளவிலேயே மொழி பெயர்ப்புக்கு உட்படுத்தப்படும். இதையடுத்து 5 நாள்களுக்குள் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படவேண்டும். இதையடுத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.
நாடாளுமன்றத்தில் இவ்வாறான சம்பிரதாய நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டியுள்ளதால், எதிர் வரும் 9ஆம் திகதி பிரேரணையை விசாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றன. (த–சி)

# 100 மில்லியன் ரூபா செலவில் சர்வதேச மத்தியஸ்த நிலையம்

## பிரதமர் திறந்து வைத்தார்

கொழும்பு, ஜூன் 8
இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவருவதற்கு வழிவகுக்கும் எனக் கூறப் படுகின்ற சர்வதேச மத்தியஸ்த நிலை யத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை காலை திறந்து வைத்தார்.
இது கொழும்பு உலக வர்த்தக நிலையத்தில் அமைபட்டுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் இதில் கலந்துகொண்டார்.



இதுவரை சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்தே இலங்கை சர்வதேச மத்தியஸ்த சேவைகளைப் பெற்றுவந்தது. வெளிநாடுகளிலிருந்து இச்சேவையைப் பெறுவதால் பெருந்தொகை பணத்தையும் செலவிட நேரிட்டது.
இலங்கையில் சர்வதேச மத்தியஸ்த நிலையம் உருவாவது இதுவே முதல் தடவையாகும். இந்த நிலையத்தை அமைக்க 100 மில்லியன் ரூபாவைநிதிஅமைச்சுசெலவிட்டுள்ளது.
உலகில் எந்த நாட்டுடனும் சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களுக்கும், சர்வதேச மத்தியஸ்தச் செயற்பாடு களுக்குமான சேவைகளை இந்த நிலையத்தின் மூலமாக வழங்கலாமென நீதி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



பங்களாதேஷ் – இந்தியா தொடர் எதிர்வரும் பத்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத்தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணி குறித்த தொடருக்காக இன்று பங்களாதேஷ் நோக்கி பயணமாகிறது.

இந்திய அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்து ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட சிறிய தொடரில் விளையாடுகிறது. டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் பத்தாம் திகதி தொடங்குகிறது. ஒருநாள் ஆட்டங்கள் 18ஆம் திகதிகளில் ஆரம்பமாகிறன. இந்தத் தொடர்களுக்கான இந்திய வீரர்களின் பயிற்சிமுகாமும் உடற்தகுதி சோதனையும் நேற்று நடை பெற்றது.

டெஸ்ட் தொடருக்கு வீராட் ஹோக்லியும், ஒருநாள் ஆட்டங்களுக்கு டோனியும் தலைவராக பணியாற்றுவார்கள். டோனி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வினை அறிவித்ததால் சகா இலக்குக்காப்பாளராக பணியாற்றுவார். இதேபோல நீண்ட இடை வேளைக்கு பிறகு டெஸ்ட் அணியில் ஹர்பஜன் சிங் விளையாடுவதும் உறுதியாகியுள்ளது. டெஸ்ட் போட்டியில் இடம் பெற்ற லோகேஷ் ராகுலுக்கு உடற்பரிசோதனையின் பொழுது காய்ச்சல் என்று இனங்காணப்பட்டு விலக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக மாற்று வீரர் அறிவிக்கப் படவில்லை.

டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணி – வீராட் ஹோக்லி (தலைவர்), –ஷிகார்தவான், முரளி விஜய், புஜாரா, ரோகித்சர்மா, ரகானே, விர்த்திமான் சகா, ஹர்பஜன்சிங், அஸ்வின், கரண்சர்மா, இசாந்த் சர்மா, உமேஷ் யாதவ், வருண் ஆரோன், புவனேஸ்வர் குமார்.

ஒருநாள் ஆட்டத்துக்கான இந்திய அணி – டோனி (தலைவர்), தவான், ரோகித்சர்மா, வீராட் ஹோக்லி, ரகானே, ரெய்னா, ஸ்டூவேர்ட் பின்னி, அம்பதி ராயிடு, அஸ்வின், அக்சர் பட்டேல், உமேஷ் யாதவ், மொகித்சர்மா, குல்கர்னி, புவனேஸ்வர்குமார். (ம)

# இந்தியா பங்களாதேஷ் தொடருக்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

இந்தியா பங்களாதேஷ் தொடரில், இந்திய அணியை அவமதிக்குபடியான நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப் பட்டுள்ளது.

நடப்பு வருடத்தில் நிறைவடைந்த உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா பங்களாதேஷ் அணிகள் மோதிய காலிறுதியாட்டத்தில் இந்திய வீரர் ரோகித் சர்மாவுககு முறையற்ற பந்து வழங்கியதில் சர்ச்சை ஏற்பட்டது. இதனால், பங்களாதேஷ் ரசிகர்கள் ஆத்திரமடைந்தனர். இந்தப் பிரச்னை பதுல்லா டெஸ்டில் எழக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் ஆட்டத்தை காணவரும் ரசிகர்கள், இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட தடை விதிக்கப் பட்டுள்ளது. இதைவிட பதுல்லா மைதானத்தின் அருகில் உள்ள கல்லூரியை ஐந்து நாள்களுக்கு மூடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.(ம)

# மூன்று விதமான அணிகளிலும் விரைவில் இடம்பிடிப்பேன்



இந்திய அணியின் ஒருநாள் ஆட்டங்களுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் விரைவில் ஒருநாள் மற்றும் ரி–20 ஆட்டங்களிலும் பங்கெடுக்க வேண்டும் என்று இந்திய அணியின் இளம் வீரர் அக்ஷர் பட்டேல் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் ரி–20 கனவு தொடர்பாக அக்ஷர் பட்டேல் தெரிவித்ததாவது ஒரு வீரர் டெஸ்ட், ரி–20, மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் விளையாடினால் மட்டுமே முழுமையடைவார். அந்த வகையில் எனது கிரிக்கெட் பயணம் இன்னமும் முழுமையடையவில்லை. ஒருநாள் அணியில் இடம்பிடித்தாலும் டெஸ்ட் மற்றும் ரி–20 அணிகளில் இன்னமும் விளையாடவில்லை. மிகவிரைவில் இந்த இரண்டு விதமான அணிகளிலும் பங்கெடுத்து எமது கிரிக்கெட் வாழ்க்கையை முழுமையடையச் செய்வேன் என்றார். (ம)

# முதலாவதில் இருந்து மூன்றாவதுக்கு



சர்வதேச பூப்பந்துத் தரவரிசையில் முதலிடத்தில் நீடித்து வந்த சாய்னா நேவால் இந்தோனேசிய பூப்பந்துத் தொடரின் காலிறுதியில் சீன வீராங்கனை வாங் சிக்ஸியானிடம் தோற்று வெளியேறியுள்ளதுடன் தனது முதலிடத்தையும் இழந்துள்ளார்.

காலிறுதியின் முதல் செற்றை 21–16 என்ற அடிப்படையில் கைப்பற்றினாலும் கடைசி இரண்டு செற்களையும் 12–21, 18–21 ஆகிய புள்ளிகளின் அடிப்படையில் சாய்னா நெவால் தவறிவிட்டு 2:1 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார். இந்தத்தோல்வியின் மூலம் நான்காவது தடவையாக இந்தோனேசியாவின் கிண்ணத்தை கைப்பற்ற வேண்டும் என்ற சாய்னாவின் கனவு பலிக்காமல் போனதுடன் புள்ளிப்பட்டியவில் முதலிடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்குதள்ளபபட் டுள்ளார். (ம)

# டோனியைக் கொப்பியடித்த இங்கிலாந்து

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கு இடையிலான ரி–20 தொடரில் நார்தாம்ப்டன்ஷர் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது வொர்செஸ்டர்ஷர் அணி கடைசி நேரத்தில் டோனியின் வியூகத்தைப் பின்பற்றி இலக்குக்காப்பாளர் இல்லாமல் விளையாடி வியக்க வைத்ததுடன் அதை ஏற்றுக் கொள்ளவும் செய்துள்ளது.

குறித்த தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் நார்தாம்ப்டன்ஷர்– வொர்செஸ்டர்ஷர் அணிகள் மோதின. நார்தாம்ப்டன்ஷர் அணி 15 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு அருகில் சென்றது. இதனால் வொர்செஸ்டர்ஷர் அணித் தலைவர் டேரில் மிட்செல் புதிய உத்தியைக் கையாண்டார். 16வது பந்துப்பரிமாற்றத்தில் இலக்குக்காப்பாளரை அழைத்து அவரின் கவசங்களை கழற்றச்சொல்லி ஸ்லீப் திசையில் சற்று பின்னோக்கி நிற்கச் செய்தார். இதனால் இலக்குக்காப்பாளர் இல்லாத நிலை ஏற்பட்டது. இதைக் கண்ட நடுவர்கள் விதி முறைப்படி இது சரியா என நீண்ட நேரம் விவாதித்தார்கள். அப் பொழுது வொர்செஸ்டர்ஷர் அணித் தலைவர் டேரில் மிட்செல் டோனி ஒரு சில ஆட்டங்களில் இவ்வாறு செயற்பட்டதைத் தெரிவித்து வாதிட்டார். ஆராய்ந்த நடுவர்கள் விதி முறைப்படி சரியானதுதான் என்று முடிவு எடுத்து ஆட்டத்தைத் தொடரச் செய்தார்கள்.

இது தொடர்பாக வொர்செஸ்டர்ஷர் அணியின் இயக்குநர் ரோட்ஸ் தெரிவிக்கையில் எதிரணி ஓட்டங்கள் குவிப்பதைத் தடுப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இந்திய அணித் தலைவர் டோனி, இது போன்று செய்வார். அதைப் பார்த்தபோது அருமையான யோசனையாகப்பட்டது. அதனால் இலக்குக்காப்பாளரை ஸ்லிப்பில் நிற்கச் சொன்னோம் என்றார். (ம)

# பயிற்சியாளராகினார் ராவிட்

## சச்சின், கங்குலியை விட அதிக சம்பளம் எனவும் அறிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ராகுல் ராவிட் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

முன்னாள் வீரர்களான சச்சின், கங்குலி, லக்ஷ்மன் ஆகியோர் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டனர். இந்தக் குழுவில் ராவிட் பெயர் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரது பெயர் இடம்பெறாததையிட்டு ரசிகர்கள் மட்டுமின்றி முன்னாள் வீரர்களும் அதிருப்தி தெரிவித்தனர்.

ஆனால், ராவிட்டுக்கு பெரிய பொறுப்பு காத்திருப்பதாகவும், முன்னாள் வீரர்களின் தகுதிக்கு ஏற்ப அவர்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ள இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விரும்புவதாகவும் செயலாளர் அனுராக் தாகூர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்தியா 'ஏ' அணியின் பயிற்சியாளராக ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டிருப்பதாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை செயலாளர் அனுராக் தாகூர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். மேலும் 19 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய அணியின் பயிற்சியாளராகவும் அவர் செயல்படுவார் என்றும் அறிவித்துள்ளார்.

இந்தப் பதவியைராவிட் ஏற்றுக்கொண்டுள்ளதுடன். இந்தியக் கிரிக் கெட் மேம்பட அடுத்த தலைமுறை மிகவும் அவசியமான ஒன்று. அந்த வகையில் அடுத்த தலைமுறையினருக்கு பணியாற்றுவதை மிகவும் [illegible] கிறேன் என்று தெரிவித்துள்ளார்.(ம)

# அரையிறுதியில் காஷ்யப் போராடித் தோல்வி

இந்தோனேசிய பூப்பந்துத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் காஷ்யப் தோல்வியடைந்து வெளியேறினார்.

இந்தோனேசிய பூப்பந்துத் தொடர் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்தாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் சர்வதேச பூப்பந்துத் தரப்படுத்தில் 12ஆவது இடத்தில் இருக்கும் இந்திய வீரர் காஷ்யப், ஜப்பான் வீரர் மெட்டோவை எதிர்கொண்டு விளையாடினார்.

இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 21–12 என்ற அடிப்படையில் கைப்பற்றிய காஷ்யப் இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களை 17–21, 19–21 என்ற செற் கணக்கில் தவறவிட்டு வெளியேறினார். இதன் மூலம் இந்தோனேசிய பூப்பந்துத் தொடரில் கிண்ணம் வெல்லும் இந்தியாவின் கனவு தகர்ந்தது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Clerk தேவை (பெண்)

ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கு எழுதுவினைஞர் தேவை.

(60437) (3.7.5) தொடர்பு: 077 970 7322

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் உங்களாலும் மூன்றே மாதங்களில் ஆங்கிலம்பேச முடியும்.

யாழில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.06.2015 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

சாவகச்சேரியில் - 13.06.2015 சனிக்கிழமை மாலை 03.00மணி
நெல்லியடியில் - 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணி

பாடப்புத்தகங்கள் மற்றும் DVD இலவசமாக வழங்கப்படும்.

SAMSON
Experts in English Training

யாழ்ப்பாணம். 021 320 3313
077 621 4567

# ஐரோப்பியக் கிண்ணம் பார்சிலோனாவிடம்



ஐரோப்பிய கால்பந்துத் தொடரின் இறுதியாட்டத்தில் யுவன்டஸை வீழ்த்தி பார்சிலோனா அணி ஐந்தாவது முறையாக கிண்ணத்தைக் கைபபற்றியது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடைபெறும் இந்த நீண்ட தொடர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகியது. இதில் ஐரோப்பா கண்டத்தை சேர்ந்த பிரபலமான 20 கழக அணிகள் பங்கேற்றன. லீக் மற்றும் விலகல் சுற்றுக்களின் முடிவில் ஸ்பெயினை சேர்ந்த பார்சிலோனாவும், இத்தாலியை சேர்ந்த அணியான யுவன்டஸ் அணியும் இறுதியாட்டத்துக்கு தகுதியாகின.

ஏற்கனவே 4 தடவை கிண்ணம் வென்ற பார்சிலோனா கழகத்தில் புகழ்பெற்ற வீரர்களான லயோனல் மெஸ்சி, நெய்மர், லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்த காரணத்தினால் பார்சிலோனாவே வெல்லும் என்ற பரவலான எதிர்பார்ப்பு ஆட்டம் ஆரம்பமாக முன்னரேயே இருந்தது. இந்த நிலையில் கால்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் பார்சிலோனா–யுவன்டஸ் இடையி லான இறுதியாட்டம் ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் உள்ள மைதானத்தில் நேற்று (நள்ளிரவு 12:15 மணிக்கு) ஆரம்பமானது.

எதிர்பார்த்தது போலவே பார்சிலோனா யுவன்டஸை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. இதன் மூலம் ஐரோப்பிய கால்பந்து கிண்ணத்தை ஐந்தாவது முறையாக வென்றது. அதேநேரம் யுவன்டஸ் 6ஆவது முறையாக இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்துள்ளது. (ம)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி சின்னத்தம்பி



புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோயில்வீதி, முத்துமாரியம்மன் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட தையல் நாயகி சின்னத்தம்பி (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பார்வதி தம்பதியரின் மருமகளும் அருமைப்புதல்வன் சிவகுமாரின் அன்புத் தாயாரும், பூவா, ஜீவா காலஞ்சென்ற அரவிந்தநாதன் ஆகியோரின் பெரியம்மாவும் கனகரட்னம், திருமதி தர்மரெட்னம் கனகம்மா (சாமிஅம்மா) காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் கௌரியின் மாமியாரும், சோபனா வின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2015) திங்கட்கிழமை காலை 8மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/40, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன் - சி.சிவகுமார்
077 926 6380

## சங்கரப்பிள்ளை குமாரசாமி



கரம்பொன் மேற்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் 400, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை(கைலாச பிள்ளையார் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை குமாரசாமி நேற்று(07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் நகுலேஸ்வரி காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் கைலாயபிள்ளை (நவம் -நியூ கமல் செரமிக்ஸ் ஸ்ரான்லி வீதி ,யாழ்ப்பாணம்), கதிர்காமநாதன்(கண்ணன்), கஜேந்திரநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் .செல்லத்துரை, தவமணி, சிவயோகம், கமலாதேவி, யோகேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும். நந்தினி, நளாயினி, செல்வக்குமார் (சுமங்கலி நகைமாடம்), குமுதினி, சுபாஜினி, சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமாவும். சுரேஸ்குமார் ,வக்சலா, நிறஞ்சினி, ஜெயக்குமார், தயாழினி, கார்த்திகா(பிரான்ஸ்) விமல்ராஜ், யுவன்ராஜ், மதுராஜ், தினேஸ்ராஜ், அருள் ராஜ், கீர்த்தனா, கீர்த்திபன் கார்த்திபன், கீர்த்தனன், கிருசாந்த் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.06.2015)திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல்11 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 400, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவிலடி),
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரன் நவம் (நியூகமல் செரமிக்ஸ்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 404 8684



# செரீனா சம்பியன்

## உலகசாதனையும் மிக அருகில்

பிரான்ஸின் ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கிண்ணம் வென்றுள்ளதுடன் 20ஆவது சர்வதேச் கிண்ணத்தையும் கைப்பற்றி அசத்தியுள்ளார்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ்தொடர்களில் ஒன்றான பிரான்ஸின் ரென்னிஸ் தொடர் கடந்தசில வாரங்களாக பிரான்ஸின் தலைநகரான பரிஸில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் லூசி சபரோ வாவை எதிர் கொண்ட செரீனா, 6–3, 6–7, 6–2 என்ற நேர்செற்கணக்கில் வெற்றி பெற்றார். இதன்மூலம் 20 ஆவது சர்வதேச கிண்ணத்தை வென்றவர் என்ற பெருமையையும் சொந்தமாக்கியுள்ளார் செரீனா. இதைவிட பிரான்ஸ் கிண்ணத்தை செரீனா மூன்றாவது தடவையாக கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

22 தடவைகள் சர்வதேச கிண்ணங்களை வென்ற தனது சாதனையை செரீனா முறியடிப்பார் என்று ஸ்டெபி கிராப் நம்பிக்கை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Public Speaking - English
For Personality Development and Leadership

JAFFNA

Date: June 20th, 21st, 27th & 28th

Time:
Morning batch :9 am – 1pm
OR
Afternoon batch : 2 pm – 6 pm
(Saturday & Sunday)

Venue:
Kalaithuthu College of Aesthetics,
128, David Road

Investment: Rs 10,000 (16 hours)

கொழும்பில் மிகவும் பிரபல்யமான கற்கைநெறியான Public Speaking என்ற ஆங்கில கற்கை நெறியானது முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது!

அச்சமின்றி தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் கதைப்பதற்கான தைரியத்தினை வளர்த்துக்கொள்ள இது மிகவும் பயனுள்ளதாக அமையும்.



Dr. Mahim Mendis

BA (Hons) SL; MA (Lancaster) UK; M. Phil (Leicester) UK; Ph. D (NUS) Post-Doctoral Scholar, University of Northern Illinois and University of Massachusetts, USA



Ms Manique Mendis

B.A. Hons (Kelaniya) PG Dip in Marketing PIM, Sri Jayawardenapura, Dip Journalism (Ladies College) Cert in Advanced Presentation skills (UK)

STUDENT SUCCESS CENTRE
320 A 1/2, Main Street, Jaffna
Janagan - 077 616 9470

RAINBOW INSTITUTE OF COMMUNICATION AND ENGLISH
44/1, Haig Road, Colombo 4, Sri Lanka
Web: www.rainbow.lk
Facebook: Rainbow Resources Lanka Pvt Ltd
Nigel - 0 77 179 4304, 0777 352 118, 4380 400

வேலையாள்கள் தேவை

கடையில் வேலை தெரிந்தவர்களும், உதவியாளர்களும் தேவை.

தொடர்பு: 077 060 6865

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org